# சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM): இலங்கை தவணை இறுதி அறிக்கை 2016-2018

அனூக் டி சொய்ஸா, சுயாதீன ஆய்வாளர்

## பொருளடக்கம் (Contents)

மேலோட்டம் : இலங்கை (Overview) 3
மதிப்பீடு பற்றி (About the Assessment) 7
கடமைப்பொறுப்புகளை நடைமுறைப்படுத்தல் (Commitment Implementation) 10
கருப்பொருள்1: சுகாதாரம் (Health) 13
1. நாள்பட்ட சிறுநீரக நோயை தடுப்பதற்கான பொதுமக்களுக்கான வழிகள் (Public Access to Strategies to Combat Chronic Kidney Disease) 13
2. பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துகள் (Safe and Affordable Medicines) 19
3. தேசிய சுகாதார செயலாற்றுகை (National Health Performance) 25
கருப்பொருள் 2: கல்வி (Education) 30
4. வெளிப்படையான ஆசிரியர் ஆட்சேர்ப்புக் கொள்கை (Transparent Teacher Recruitment Policy) 30
கருப்பொருள் 3: தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information and Communication Technology) 34
5. அரசாங்க தகவல் நிலையம் (Government Information Center) 34
6. திறந்த தரவுகளை ஊக்குவித்தல் (Promote Open Data) 40
கருப்பொருள் 4: சூழல் (Environment) 46
7. தேசிய சுற்றுச்சூழல் சட்ட திருத்தங்கள் (National Environmental Act Amendments) 46
8. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ சட்டத் திருத்தங்கள் (Coast Conservation and Coastal Resources Management Act Amendments) 52
9. உயிரினத் தொகுதி மற்றும் தாவர இனத் தொகுதி பாதுகாப்பு கட்டளைச் சட்டமும் வட மேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டத் திருத்தங்களும் (Fauna and Flora Protection Ordinance and North Western Province Environmental Statute Amendments) 57
கருப்பொருள் 5: உள்ளூராட்சி (Local Government) 62
10. உள்ளூராட்சி சபைகளுக்கான கொள்முதல் முறைமை (Procurement System for Local Authorities) 62
11. உள்ளூராட்சி சபைகளின் கொள்முதல் முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் (Implementation and Monitoring of Local Authority Procurement System) 67
கருப்பொருள் 6: பெண்கள் (Women) 71
12. தனிநபர் சட்ட சீர்திருந்தங்கள் (Personal Law Reforms) 71
13. அரசாங்க காணிப் பகிர்வில் பாலின சமத்துவம் (Gender Equality in State Land Distribution) 77
14. வேலை வாய்ப்பில் பாரபட்சமின்மை (Non-Discrimination in Employment) 82
கருப்பொருள் 7: அரசியலில் பெண்களின் பங்கேற்பு (Women In Political Governance) 87
15. உள்ளூராட்சி மட்ட அரசியலில் பெண்களின் பங்கேற்பு (Women's Political Participation at the Local Level) 87
கருப்பொருள் 8: ஊழல் மோசடி (Corruption) 94
16. ஊழல் தடுப்பு கட்டமைப்பில் பொது மக்கள் பங்கேற்பு (Public Participation in Anti-Corruption Framework) 94

17. ஐ.நா. ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் (UNCAC) கடப்பாடுகள் மற்றும் ஊழலுக்கெதிரான சட்டக்கட்டமைப்பு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் (Implementation of UNCAC Obligations and Constitution Reform) 100
18. ஊழலுக்கு எதிராக இயங்கும் முகவர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு (Coordination among Anti-Corruption Agencies) 104
19. ஊழல் மற்றும் நிதி மோசடி (Corruption and Money Laundering) 108
20. அரசியல் பிரச்சார நிதிகளை கட்டுப்படுத்தல் (Regulation of Political Campaign Financing) 112
21. சொத்து பிரகடன விவரங்களை வெளியிடல், பரப்புதல் (Disseminate Asset Declarations) 116
கருப்பொருள் 9: தகவல் அறியும் உரிமை (Right to Information) 120
22. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் (Enactment and Implementation of the RTI Act) 120
23. செயலூக்கத்துடனான வெளிப்படுத்தல் (Proactive Disclosure) 130
முறையியலும் மூலங்களும் (Methodological Note) 134

# மேலோட்டம் : இலங்கை (Overview)

இலங்கையின் முதலாவது செயற்திட்டம் பாலினம், ஊழல் மோசடிகள் தவிர்ப்பு மற்றும் தகவல் அணுகல் வரையில் பரந்தளவு கருப்பொருட்களைக் கொண்ட விடயங்களைப் பற்றி கவனம் செலுத்தியிருந்தது. நடைமுறைப்படுத்தும் போது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் பதிவாகியிருக்கவில்லை என்பது மத்திய தவணை மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்டதுடன்,

தகவல் அறியும் உரிமை (RTI) சட்டமூலம் திறந்த அரசாங்கத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இதை நடைமுறைப்படுத்தும் போது பல்துறைசார் பங்காளர் அமர்வுகளினூடாக தொடர் சந்திப்புகளை மேற்கொண்டு, அதனூடாக மேலும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) தவணை-பூர்த்தி அறிக்கை 2016-2018

---

திறந்த அரசாங்க பங்குடமை **(OGP)** என்பது தன்னார்வ சர்வதேச முயற்சியாக அமைந்துள்ளதுடன், இதனூடாக நாட்டு குடிமக்கள் மத்தியில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல், மக்களைப் பலப்படுத்துதல், ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், ஆட்சியை பலப்படுத்துவதற்கு புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு அரசாங்கங்களிடமிருந்து உறுதியான அர்ப்பணிப்பை பெற்றுக்கொள்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையில் (IRM) பங்கேற்கும் ஒவ்வொரு OGP நாட்டிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் செயற்படுத்தலின் இரண்டாம் ஆண்டு காலப்பகுதியான 2017 ஜுலை மாதம் முதல் 2018 ஜுலை மாதம் வரையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகள் சுருக்கமாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆகஸ்ட் மாதம் வரையில் முன்னெடுக்கப்பட்ட சில பொருத்தமான அபிவிருத்தி பற்றிய குறிப்புகளும் அடங்கியுள்ளன.

ஆரம்பத்தில் நீதி அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் மாதம் பிரத்தியேகமான OGP அலகொன்றை நிறுவி, அதனூடாக OGP செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளுக்கான பிரதான பொறுப்பை வெளிவிவகார அமைச்சு (MFA) பொறுப்பேற்றது. செயற்திட்டத்தை வடிவமைக்கும் போது அதில் உள்வாங்கப்பட வேண்டிய தலைப்புகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து 10 பொது ஆலோசனை அமர்வுகளை வெளிவிவகார அமைச்சு முன்னெடுத்திருந்தது.

OGP செயன்முறையில் ஈடுபட்டிருந்த அரசாங்க முகவர் அமைப்புகளின் எண்ணிக்கையை விரிவாக்கும் வகையில் 2016 ஒக்டோபர் மாதத்தில் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்கள் நிறுவப்பட்டதுடன், தேசிய செயற்குழுவும் (NSC) நியமிக்கப்பட்டிருந்தது. இலங்கை ஜனாதிபதி தேசிய செயற்குழுவின் தலைமைப் பொறுப்பை வகித்ததுடன், இதில் இதர அரசாங்க மற்றும் சிவில் சமூக பங்காளர்களும் அடங்கியிருந்தனர். செயற்திட்டத்தில் வழங்கப்பட்ட கடமைப்பொறுப்புகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பு இந்த குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும், இந்த உயர்மட்டக் குழு தொடர்ச்சியாக ஒன்று கூடுவது என்பது சவாலான விடயமாக அமைந்திருப்பதை வெளிவிவகார அமைச்சு உணர்ந்தது.

எனவே, செயற்திட்டத்தில் இனங்காணப்பட்ட பிரதான அரச நிறுவனங்கள் தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதனூடாக, பிரதான பொறுப்பை ஏற்றுக் கொண்டன.

This report was prepared by Anoukh de Soysa, independent researcher

இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிவிவகார அமைச்சின் OGP அலகு மற்றும் சிவில் சமூகம் ஆகியன ஒன்றிணைந்து பல்-துறைசார் அமர்வொன்றை நிறுவி, இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. ஆனாலும், இந்த அமர்வும் தொடர்ச்சியாக ஒன்றுகூடவில்லை, அத்துடன் இதில் குடிமக்களின் பங்களிப்பு எதுவும் இருக்கவில்லை. இந்த அமர்வின் செயற்பாடுகள் எவையும் இரகசியத்தன்மை வாய்ந்தவை அல்ல என்பதை வெளிவிவகார அமைச்சு உறுதி செய்திருந்த போதிலும், இந்த அமர்வுகளின் சாராம்சக் குறிப்புகள் (Minutes) பொது மக்கள் பார்வைக்காக வழங்கப்படவில்லை என்பதுடன், பிரதான செயற்படுத்தும் பங்குதாரர்களை தவிர பரந்தளவு பங்கேற்புக்கான திறந்த அழைப்புகள் எவையும் வழங்கப்படவுமில்லை.[1] ஜனாதிபதி செயலகம் தலைமைத்துவத்தை ஏற்று, OGP செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்புகளை வெளிவிவகார அமைச்சிடமிருந்து 2018 ஏப்ரல் மாதத்தில் பெற்றுக்கொண்டது.

இலங்கையின் முதலாவது தேசிய செயற்திட்டமானது, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் முதல் ஊழல் மோசடி மற்றும் தகவல் அறியும் உரிமை வரையில் பரந்தளவு பிரிவுகளில் கடமைப்பொறுப்புகளைக் கொண்டிருந்தது. தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றியிருந்ததை தொடர்ந்து, பெருமளவு கடமைப்பொறுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2018 செப்டெம்பர் மாதமளவில், அரசாங்கம் மத்திய தவணை அல்லது தவணை பூர்த்தி மதிப்பீட்டு அறிக்கை எதனையும் சமர்ப்பித்திருக்கவில்லை. அமுலாக்கத்தின் முதலாம் ஆண்டு பூர்த்தியில் இந்த தேவைக்காக தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு உறுதி செய்திருந்த போதிலும் இந்த நிலை நிலவியிருந்தது.[2]

இந்த அறிக்கையை எழுதும் போதிலும், அடுத்த சுற்று 2018-2020 காலப்பகுதிக்கான புதிய செயற்திட்டமொன்றை இலங்கை இதுவரையிலும் வெளிப்படுத்தவில்லை அல்லது சமர்ப்பிக்கவில்லை. ஆனாலும், அடுத்த செயற்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டிய பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் கடமைப்பொறுப்புகளை வெளிப்படுத்தல் போன்றவற்றுக்காக ஜனாதிபதி செயலகம், சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து ஒன்பது பொது கலந்தாலோசனை சந்திப்புகளையும், பல்துறைசார் பங்காளர் சந்திப்புகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளையும் முன்னெடுத்திருந்தது. இந்த கலந்தாலோசனை சந்திப்புகள் ஒன்பது மாகாணங்களிலும் இடம்பெற்றன.[3]

| அட்டவணை 1: சுருக்கம் | | |
|---|---|---|
| | *மத்திய – தவணை* | *தவணை – பூர்த்தி* |
| கடமைப்பொறுப்புகளின் எண்ணிக்கை | 23 | |
| ***பூர்த்தி செய்யப்பட்ட நிலை*** | | |
| பூர்த்தியானவை | 0 | 0 |
| கணிச அளவு பூர்த்தி | 1 | 2 |
| மட்டுப்படுத்தப்பட்டளவு | 18 | 17 |
| ஆரம்பிக்கப்படாதவை | 4 | 4 |
| ***கீழ்வருவனவற்றுடன் தொடர்புடைய கடமைப்பொறுப்புகள் …*** | | |
| OGP பெறுமதிகளுடன் தெளிவான தொடர்பு | 22 | 22 |
| நிலைமாற்றத்துக்கு வாய்ப்புள்ள தாக்கம் | 1 | 1 |
| கணிசஅளவு அல்லது பரிபூரண செயற்படுத்தப்பட்டது | 1 | 2 |
| ***மேற்படி மூன்றும் (✪)*** | 0 | 1 |
| ***திறந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டது?*** | | |
| *பாரியளவு* | 1 | |
| *நிலுவை* | 0 | |
| *எதிர்கால செயற்பாடு* | | |
| அடுத்த செயற்திட்டத்துக்காக முன்கொண்டு செல்லப்பட்ட கடமைப்பொறுப்புகளின் எண்ணிக்கை | N/A | |

[1] Harim Peiris (Former OGP Point of Contact) and Asoka Obeyesekere (Executive Director – Transparency International Sri Lanka), interview by IRM researcher, 9 August 2017.
[2] Prashanthi Krishnamoorthy (Ministry of Foreign Affairs), interview by IRM researcher, 1 December 2017.
[3] Chandima Wickramasinghe (Presidential Secretariat), interview by IRM researcher, 12 September 2018.

**நடைமுறைப்படுத்தும் போது சிவில் சமூகத்துடனான கலந்தாலோசனை**

OGP இல் பங்கேற்கும் நாடுகள் தமது செயற்திட்டத்தை வடிவமைப்பது மற்றும் நடைமுறைப்படுத்தும் காலப்பகுதிகளில் கலந்தாலோசனை முறையொன்றை பின்பற்றுகின்றன. செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது சிவில் சமூகத்துடனான கலந்தாலோசனைகள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் பின்வரும் பகுதியில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், வடிவமைப்பின் போது மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனைகள் பற்றி விலாவாரியாக 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில், நடைமுறைப்படுத்தலின் போது கலந்தாலோசனைகளை முன்னெடுப்பது என்பது மையப்படுத்தப்பட்ட செயன்முறையாகும், இதனை இலங்கை வெளிவிவகார அமைச்சு ஒழுங்கமைப்பு செய்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் முற்பகுதியில், பல்துறைசார் பங்காளர் செயற்குழு ஒன்றை வெளிவிவகார அமைச்சு நிறுவி, இதன் தலைமைப் பொறுப்பை பிரதி வெளிவிவகார அமைச்சர் வகித்திருந்ததுடன், கடமைப்பொறுப்புகளின் நடைமுறைப்படுத்தல்களையும் கண்காணித்திருந்தார். கடமைப்பொறுப்பு செயற்படுத்தலுக்கு பொறுப்பான அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அலகின் பிரதிநிதிகள் இந்த OGP செயற்குழுவில் அங்கம் வகித்தனர். பங்காளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட பங்குபற்றலுடனான செயற்குழு கடமைப்பொறுப்புகளை நடைமுறைப்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்டது. வெளிவிவகார அமைச்சில் இந்த குழு 2017 ஏப்ரல் மாதத்திலும், 2017 ஆகஸ்ட் மாதத்திலும் சந்தித்திருந்தது. இது தொடர்ச்சியான சந்திப்புகள் எனும் நிபந்தனையை பூர்த்தி செய்திருக்கவில்லை. உதாரணமாக: ஆகக்குறைந்தது காலாண்டுக்கு ஒரு சந்திப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த கலந்தாலோசனைகளின் போது, பிரதான அரசாங்க நிறுவனம் ஒவ்வொரு கடமைப்பொறுப்பு நிறைவேற்றம் தொடர்பான நிலை பற்றிய அறிக்கையை சுருக்கமான வகையில் வெளிப்படுத்தியிருந்தது. சிவில் சமூக நிறுவனங்கள் (CSO) பிரதிநிதிகளுக்கு இந்த விளக்கங்கள் தொடர்பாக பதிலளிப்புகளை வழங்குவதற்கும், அறிக்கையிடப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் வினாக்கள் மற்றும் கருத்துக்களை தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இந்த பொறிமுறைக்கு மாறாக, அமர்வில் வேறெந்த வகையிலான பங்கேற்பு அல்லது ஈடுபாடு பற்றிய விதிமுறைகளும் காணப்படவில்லை. இந்த சந்திப்புகளின் வெளிப்பாடுகள் இரகசியத்தன்மை வாய்ந்தவை அல்ல என்பதை வெளிவிவகார அமைச்சு உறுதி செய்திருந்த போதிலும், சந்திப்புகளின் குறிப்புகள் (Minutes) பொது மக்கள் பாவனைக்கு வழங்கப்படவில்லை என்பதுடன், இவற்றில் பொது மக்கள் பங்கேற்பதற்கான திறந்த அழைப்புகள் எதுவும் வழங்கப்படவில்லை.[1]

சிவில் சமூக பிரதிநிதியின் பிரகாரம், செயற்குழு அமர்வு என்பது பொறுப்புக்கூறலுக்கு பயனுள்ள மற்றும் பிரத்தியேகமான கட்டமைப்பாக அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.[2] கலந்துரையாடலுக்கான வசதியை இந்த அமர்வு வழங்கியிருந்ததுடன், அரசாங்க மற்றும் சிவில் சமூக பங்குபற்றுனர்கள் மத்தியில் பரஸ்பர சிந்தனை பகிர்வுக்கான களமாகவும் அமைந்திருந்தது.[3] எவ்வாறாயினும், இந்த கட்டமைப்பினூடாக கடமைப்பொறுப்புகள் முழுமையாக செயற்படுத்தப்படுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. வெளிவிவகார அமைச்சிடமிருந்து OGP கருத்திட்டத்துக்கான பொறுப்பை ஜனாதிபதி செயலகம் 2018 ஏப்ரல் மாதம் ஏற்றிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியின் இறுதித் தருணத்தில் இந்த மாற்றம் இடம்பெற்றமை காரணமாக, பின்னர் எவ்விதமான உத்தியோகபூர்வ கலந்தாலோசனைகளும் இடம்பெறவில்லை.

கடமைப்பொறுப்பு நடைமுறைப்படுத்தல்களை கண்காணிப்பதற்காக சிவில் சமூகமும் உத்தியோகப்பற்றற்ற அமர்வொன்றை உருவாக்கியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்த அமர்வு ஒன்றுகூடியிருந்ததுடன், OGP CSO செயற்குழு அங்கத்தவர்களை கொண்டிருந்தது. காலாண்டு அடிப்படையில் இந்த குழு சந்தித்து, கடமைப்பொறுப்புகளின் நிறைவேற்றம், புதிய சிந்தனைகள்

மற்றும் புத்தாக்கங்களின் பகிர்வு மற்றும் திறந்த அரசாங்கத்தை ஊக்குவிப்பதற்கு இதர CSOகள் எவ்வாறு பங்களிப்பு வழங்க முடியும் என்பன தொடர்பில் கலந்தாலோசித்திருந்தது. கடமைப்பொறுப்புகள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பது தொடர்பில் செயற்பாட்டு ரீதியில் சமமான நியதிகளை கொண்டிருந்த போதிலும், செயற்குழுவைப் போன்று, இந்த அமர்வில் அரசாங்க பிரதிநிதித்துவம் காணப்படவில்லை.[4] பரந்தளவு குடிமக்கள் ஈடுபாட்டை கொண்டிருக்கும் வகையில், இந்த அமர்வில் ஏனைய ஆர்வமுள்ள CSOக்கள் பங்குபற்றலுக்கு அழைக்கப்பட்ட போதிலும், ஏற்கனவே காணப்பட்ட பிரதிநிதிகள் விரிவாக்கத்தை முழுமூச்சுடன் முன்னெடுக்கவில்லை.[5] சந்திப்பு சாராம்சக் குறிப்புகளும் (minutes) பொது மக்கள் பார்வைக்கு வழங்கப்படவில்லை.[6]

அட்டவணை 2: நடைமுறைப்படுத்தும் போதான கலந்தாலோசனை

| தொடர் பல்துறைசார் பங்காளர் அமர்வு | மத்திய தவணை | தவணை பூர்த்தி |
|---|---|---|
| 1. அமர்வுகள் இடம்பெறுகின்றனவா? | ஆம் | ஆம் |
| 2. தொடர்ச்சியாக ஒன்றுகூடியதா? | இல்லை | இல்லை |

அட்டவணை 3: செயற்படுத்தும் போது பொது மக்களின் செல்வாக்கு மட்டம்

IRM இனால் OGP இல் பிரயோகிப்பதற்காக, பொது பங்குபற்றலுக்கான சர்வதேச சம்மேளனத்தின் (IAP2), "பங்குபற்றல் நிரல்" ("Spectrum of Participation") பின்பற்றப்பட்டிருந்தது.[7] இந்த நிரலில், செயற்திட்டத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பில் பொது மக்களின் செல்வாக்கு மட்டங்கள் குறித்த நிலை காண்பிக்கப்படுகின்றது. OGP இன் நலன் கருதி, பெரும்பாலான நாடுகள் "இணைந்துசெயற்படல்" என்பதை இலக்காகக் கொள்ள வேண்டும்.

| செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பொது மக்களின் செல்வாக்கு மட்டம் | | மத்திய தவணை | தவணை பூர்த்தி |
|---|---|---|---|
| அதிகாரமளித்தல் | பொது மக்கள் பிரதிநிதிகளிடம் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை அரசாங்கம் ஒப்படைத்திருந்தது. | | |
| இணைந்து செயற்படல் | பங்கேற்பு உரையாடல் காணப்பட்டதுடன் நிகழ்ச்சிநிரலை தயாரிப்பதில் பொது மக்கள் உதவினர். | | |
| ஈடுபாடு | பொது மக்களின் உள்ளீடுகள் எவ்வாறு கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தன தொடர்பில் அரசாங்கம் பின்னூட்டலை வழங்கியிருந்தது. | | |
| கலந்தாலோசனை | பொது மக்கள் உள்ளீடுகளை வழங்க முடியும். | ✔ | ✔ |
| அறிவிப்பு | செயற்திட்டம் தொடர்பாக பொது மக்களுக்கு அரசாங்கம் தகவல்களை வழங்கியது. | | |

| | | | |
|---|---|---|---|
| **கலந்தாலோசியாமை** | கலந்தாலோசிக்கப்படாமை | | |

## மதிப்பீடு பற்றி (About the Assessment)

IRM ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள குறிகாட்டிகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய விளக்கங்களை IRM செயன்முறை கையேட்டில் பார்க்கலாம்.[8] ஒரு அளவுகோலான, "நட்சத்திர அடையாளமிடப்பட்ட கடமைப்பொறுப்பு" (✪), என்பது வாசிப்பவர்களுக்கு அவை வழங்கக்கூடிய தீவிர ஈடுபாடு மற்றும் பங்கேற்றல் நாடுகள் மத்தியில் முன்னிலையில் திகழ்வதற்கான பயணத்தை ஊக்குவிப்பதற்கு பயன்படல் போன்ற காரணங்களாக மேலதிக விளக்கமளிப்பை பெற தகைமை பெறுகின்றது. நட்சத்திர அடையாளமிடப்பட்ட கடமைப்பொறுப்புகள் முன்மாதிரியான OGP கடமைப்பொறுப்புகளாக கருதப்படுகின்றன. நட்சத்திர நிலையை எய்த, கடமைப்பொறுப்பு ஒன்று சில விதிமுறைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்:

- நட்சத்திர அடையாளம் கொண்ட கடமைப்பொறுப்புகள் "நடுத்தரளவு" அல்லது "உச்ச" அளவுகோலை கொண்டிருக்கும். கடமைப்பொறுப்பொன்றில் வரையறுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், ஏற்படக்கூடிய தாக்கம் பற்றிய தீர்மானமெடுப்பதற்குரிய படிமுறைகளும் காணப்பட வேண்டும்.
- திறந்த அரசாங்கத்துக்கு பொருத்தமானதாக கடமைப்பொறுப்பு அமைந்திருக்க வேண்டும். குறிப்பாக, தகவல், சிவில் பங்குபற்றல் அல்லது பொது பொறுப்புக்கூறல் போன்ற OGP பெறுமதிகளின் ஏதேனும் ஒன்றுடனேனும் பொருந்துவதாக அமைந்திருக்க வேண்டும்.
- கடமைப்பொறுப்பு ஒன்று முழுமையாக நிறைவேற்றப்பட்டால், "மாற்றத்தை" ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை கொண்டிருக்கும்.[9]
- இந்த கடமைப்பொறுப்பு தொடர்பாக செயற்திட்ட வடிவமைப்பு காலப்பகுதியில், "பெரும்பாலான" அல்லது "பூர்த்தி" எனும் மதிப்பீட்டை பெறும் காலப்பகுதியில் அரசாங்கம் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும்.

செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியின் நிறைவில் கடமைப்பொறுப்பு பெருமளவு அல்லது பூர்த்தி நிலையை எய்தத் தவறினால் நட்சத்திர அடையாளமிடப்பட்ட கடமைப்பொறுப்புகள் தமக்குரிய நட்சத்திர அந்தஸ்த்தை இழக்க நேரிடும்.

மத்திய தவணை அறிக்கையில், இலங்கை செயற்திட்டத்தில் ஒரு நட்சத்திர அடையாளமிடப்பட்ட கடமைப்பொறுப்பு காணப்பட்டது. தவணை பூர்த்தியில், பூர்த்தி நிலைகளின் மாற்றங்களின் பிரகாரம், இலங்கையின் செயற்திட்டம் ஒரு நட்சத்திர அடையாளமிடப்பட்ட கடமைப்பொறுப்பை கொண்டிருந்தது.

இறுதியாக, இந்த பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள அட்டவணைகளினூடாக, இந்த அறிக்கையிடல் காலப்பகுதியில் IRM திரட்டியிருந்த தரவுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை தொடர்பான முழுமையான தரவடக்கத்தை பார்வையிட, www.opengovpartnership.org/explorer எனும் இணையத்தளத்தில் OGP Explorer ஐ பார்க்கவும்.

**"அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?" ("Did It Open Government?")** பற்றி

அரசாங்க செயற்பாடுகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை கண்டறியும் வகையில் தவணைப் பூர்த்தி அறிக்கைகளில் IRM இனால் புதிய மாறியாக "அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?" ("Did It Open Government?") அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்த மாறியினூடாக, கடமைப்பொறுப்புகள் நிறைவேற்றத்தின் பெறுபேறாக அரசாங்கத்தின் செயன்முறைகளில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமை பற்றிய அளவு கோல்கள் மற்றும் சேவை வழங்கல்களுக்கு அப்பாற்பட்டு செயற்படக்கூடியதாக அமைந்துள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ளதை போன்று, சில OGP கடமைப்பொறுப்புகள் தெளிவற்றனவாக மற்றும்/அல்லது OGP பெறுமதிகளுக்கு பொருத்தமற்றதாக அமைந்துள்ள போதிலும், குறிப்பிடத்தக்களவு கொள்கை மீளமைவுகளை பதிவு செய்துள்ளன. ஏனைய நிலைகளில், வழங்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகள் பொருத்தமானவையாகவும், எதிர்பார்ப்புகளை கொண்டதாக காணப்பட்ட போதிலும், நிறைவேற்றப்பட்ட போதிலும் அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றுவதற்கு தவறியிருந்தன. "அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?" ("Did It Open Government?") மாறியினூடாக இந்த வகையான நுணுக்கமான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் நிரல்களின் பிரகாரம் "அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?" ("Did It Open Government?") மாறியினூடாக அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன:

- மோசமடைந்தது: கடமைப்பொறுப்பின் விளைவாக அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மோசமடைந்தது.
- மாற்றமில்லை: அரசாங்க செயற்பாடுகளில் மாற்றமில்லை.
- எல்லையளவு: சிலது மாறியுள்ளன, வெளிப்படைத்தன்மை மட்டத்தை கவனத்தில் கொள்ளும் போது மிகவும் சிறிதளவாகும்.
- பாரியளவு: சம்பந்தப்பட்ட கொள்கை பகுதியில் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை ஒரு படி முன்னேற்றமடைந்துள்ளது, ஆனாலும், அளவு மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றது.
- மிகச்சிறப்பு: சம்பந்தப்பட்ட கொள்கை பகுதியில் அரசின் வெளிப்படைத்தன்மையை பூரணமாக தோற்றுவித்துள்ள நிலையாகும்.

இந்த மாறியை மதிப்பீடு செய்வதற்கு, ஆய்வாளர்கள் செயற்திட்டத்தின் புறநிலையில் தற்போதுள்ள நிலையை கண்டறிந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து, அரசாங்க வெளிப்படைத்தன்மையில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் *நிறைவேற்றப்பட்டிருந்த* செயற்பாடுகளின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்திருந்தனர்.

வாசிப்பவர்கள் வரையறைகள் பற்றிய விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். நடைமுறை செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு சில மாதங்களின் பின்னரே IRM தவணை பூர்த்தி அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இரண்டு வருட கால நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியின் நிறைவில் அரசாங்கத்தின் வெளிப்படையான செயன்முறைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்கள் பற்றி இந்த மாறியினூடாக கவனம் செலுத்தப்படும். சிக்கல்கள் நிறைந்த வழிமுறைகள் மற்றும் அறிக்கை தயாரிப்புக்கான கால எல்லை போன்றவற்றின் காரணமாக, இந்த அறிக்கை மற்றும் மாறி ஆகியன தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் அமைந்திருக்கவில்லை.

---

[1] Harim Peiris (Former OGP Point of Contact) and Asoka Obeyesekere (Executive Director - Transparency International Sri Lanka), interviews by IRM researcher, 9 August 2017.
[2] Mr. Asoka Obeyesekere, interview by IRM researcher.
[3] *Id.*
[4] *Id.*
[5] *Id*.
[6] *Id.*
[7] See: http://c.ymcdn.com/sites/www.iap2.org/resource/resmgr/foundations_course/IAP2_P2_Spectrum_FINAL.pdf.
[8] IRM Procedures Manual, http://www.opengovpartnership.org/about/about-irm.
[9] The International Experts Panel changed this criterion in 2015. For more information, visit http://www.opengovpartnership.org/node/5919.

# கடமைப்பொறுப்புகளை நடைமுறைப்படுத்தல் (Commitment Implementation)

### கடமைப்பொறுப்புகளின் பொதுவான மேலோட்டம்

OGP இன் அங்கமாக, கடமைப்பொறுப்புகளை இரண்டு வருட செயற்திட்டத்தில் நிறைவேற்ற வேண்டும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணைகளில், "அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?" என்பதன் நிலை மற்றும் தவணை பூர்த்தியில் பூர்த்தி மட்டம் ஆகியன சாராம்சமாக வழங்கப்பட்டுள்ளன. மத்திய தவணையில் பூர்த்தி செய்யப்பட்ட கடமைப்பொறுப்புகள் தொடர்பான சாராம்சத்தை இந்த அறிக்கை வழங்கும் என்பதுடன், "அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?" என்பது தொடர்பான ஆய்வில் கவனம் செலுத்தும். இந்த கடமைப்பொறுப்புகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு, இலங்கை 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

இலங்கையின் முதலாவது செயற்திட்டம் 12 கடமைப்பொறுப்புகளை கொண்டுள்ளதுடன், அவை ஒன்பது கருப்பொருள் பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த கருப்பொருட்களில் ஊழல் மோசடி, கல்வி, சுற்றுச்சூழல், பெண்கள், சுகாதாரம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அறியும் உரிமை போன்றன அடங்கியுள்ளன. IRM அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, இந்த தவணை பூர்த்தி அறிக்கை 12 கடமைப்பொறுப்புகளை 23 உப பிரிவுகளில் பிரித்து, அதிகளவு தெளிவுபடுத்தல் மற்றும் அணுகலை பெற்றுக் கொடுத்துள்ளது. இது கீழே அட்டவணை 4 இல் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

#### அட்டவணை 4: கடமைப்பொறுப்பு முன்னேற்றம் பற்றிய மதிப்பீடு

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை<br>தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 1. CKD தவிர்ப்புக்கான மூலோபாயங்கள் | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | | |
| 2. சகாயமான மருந்துகள் | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | | |
| | | | ✔ | | ✔ | ✔ | | ✔ | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | |

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. தேசிய சுகாதார செயற்திறன் | | | | | | | | | | | | | | ✔ | | | | | | | |
| 4. வெளிப்படையான ஆசிரியர் இடமாற்றக் கொள்கை | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| 5. அரச தகவல் நிலையம் | | | ✔ | | ✔ | | | ✔ | | ✔ | | | | ✔ ✔ | | | | ✔ | | | |
| 6. திறந்த தரவு கோட்பாடு | | | ✔ | | ✔ | ✔ | | ✔ | | ✔ | | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| 7. NEA | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ ✔ | | | | ✔ | | | |
| 8. CCCRMA | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ ✔ | | | | ✔ | | | |
| 9. FFPO மற்றும் NWPEA | | | | ✔ | ✔ | ✔ | | | | ✔ | | | ✔ ✔ | | | | | ✔ | | | |
| 10. உள்ளூராட்சி மன்றங்களுக்கான கொள்முதல் முறைமை | | | | ✔ | ✔ | ✔ | | ✔ | | ✔ | | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| 11. கொள்முதலை நடைமுறைப்படுத்தல் | | ✔ | | | | ✔ | ✔ | ✔ | | ✔ | | | ✔ ✔ | | | | | ✔ | | | |
| 12. தனியார் சட்ட திருத்தங்கள் | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ | ✔ | | | | ✔ | | |
| 13. அரச காணி விநியோகத்தில் பாலின சமத்துவம் | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| 14. தொழிலில் பெண்கள் | | ✔ | | | ✔ | ✔ | | | | ✔ | | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| 15. உள்ளூர் அரசியலில் பெண்கள் | | ✔ | | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| 16. ஊழல் மோசடி தவிர்ப்பு | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ ✔ | | | | | ✔ | | |
| | | | ✔ | | | ✔ | | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | | |

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17. UNCAC கடப்பாடுகள் | | | | | | | | | | | | | ✔ | | | | | | | | |
| 18. முகவர் ஒருங்கிணைப்பு | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | ✔<br>✔ | | | | | ✔ | | | |
| 19. நிதி மோசடி | | | ✔ | | ✔ | | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | ✔ | | | |
| 20. பிரச்சார திட்டங்களுக்கான நிதியிடல் | | | ✔ | | தெளிவில்லை | | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | ✔ | | | |
| 21. சொத்துக்கள் பிரகடனம் | | | | ✔ | ✔ | | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | | |
| 22. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் உருவாக்கமும் நடைமுறைப்படுத்தலும் | | | | ✔ | ✔ | | | ✔ | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | |
| 23. செயற்திறனான வெளிப்படுத்தல்கள் | | | | ✔ | ✔ | | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | ✔ | | | |

# கருப்பொருள் I: சுகாதாரம் (Health)

## I. நாள்பட்ட சிறுநீரக நோயை தடுப்பதற்கான பொதுமக்களுக்கான வழிகள் (Public Access to Strategies to Combat Chronic Kidney Disease)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**நாள்பட்ட சிறுநீரக நோயை தவிர்ப்பது மற்றும் குணப்படுத்தும் மூலோபாயங்கள் பொது மக்களுக்கு கிடைக்கும் வழிகளை மேம்படுத்தல் (CKD)**

[…]

பிரதான குறிக்கோள்:

நாள்பட்ட சிறுநீரக நோயை தடுக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் அதனை சமாளிப்பது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் புரிந்துணர்வை அதிகரித்தலும் தடுப்பு மூலோபாய திட்டத்தை தயாரிப்பதில் சிவில் சமூகத்தை ஈடுபடுத்தல்.

மைல்கற்கள்:

- 1.1 தடுப்பு மூலோபாயத்திட்டத்தை வரைவதற்கும் மற்றும் சுகாதார கொள்கையில் மாற்றங்களை பரிந்துரைப்பதற்கும் பல்துறைசார் பங்காளர் அமர்வொன்றை நிறுவுதல்.

- 1.2 வழங்கப்படும் மருத்துவ வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள், நாள்பட்ட சிறுநீரக நோய்க்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் அமைச்சின் இணையத்தளத்தில் காணப்படும் பிரதான கொள்கைகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக வழங்கப்படும் தகவல்கள் அடங்கலாக நாள்பட்ட சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய பிரதான தகவல்களை வெளியிடல்.

- 1.3 பிரதான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்காக (1.2 மேலே) நாடளாவிய ரீதியில் பொது ஆலோசனைகள் மற்றும் பிரச்சாரத் திட்டங்களை முன்னெடுப்பது.

- 1.4 நாள்பட்ட சிறுநீரக நோய்க்காக வழங்கப்படும் மருத்துவ வசதிகள் மீது கருத்துகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளை உருவாக்கி, அதனூடாக வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் தங்கியிருக்கக்கூடிய திறன் தொடர்பில் பதிலளிப்புகளை பெற்றுக் கொடுக்க தூண்டுதல்.

- 1.5 நாள்பட்ட சிறுநீரக நோய்க்காக வழங்கப்படும் மருத்துவ வசதிகள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் தங்கியிருக்கக்கூடிய தன்மை தொடர்பில் பெற்றுக் கொண்ட குடிமக்கள்/பாவனையாளர் கருத்துக்களை கொண்ட அரையாண்டு அறிக்கைகளை பிரசுரித்தல்.

**பொறுப்பான நிறுவனம்:** சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி (மத்திய தவணை / தவணை பூர்த்தி) | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா ? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 1. CKD தவிர்ப்புக்கான மூலோபாயங்கள் (மத்திய தவணை) | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | |
| (தவணை பூர்த்தி) | | | | | | | | | | | | | | ✔ | | | | | | | |

**துணை நிறுவனங்கள்**: நாள்பட்ட சிறுநீரக நோய் அலகு, சுகாதார கல்வி பணியகம், CKDu தொடர்பான ஜனாதிபதி செயற்குழு

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

நாள்பட்ட சிறுநீரக நோய் தொடர்பான முறையான தவிர்ப்பு மற்றும் குணமாக்கல் மூலோபாயங்கள் மற்றும் வசதிகள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் அவற்றை அவர்கள் அணுகும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காக கொண்டிருந்தது.[1] சுகாதார அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட பங்காளர்கள் இணைந்து இந்த கடமைப்பொறுப்பினூடாக பொது மக்களுக்கு a) CKD தொடர்பில் போலியான அல்லது விஞ்ஞான ரீதியற்ற முறைகளை கையாள்வதை தவிர்ப்பது, b) உரிய காலத்தில் பொருத்தமான தவிர்ப்பு முறைகளை பின்பற்றுவது மற்றும், c) தம்மை தொடர்ச்சியான மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தல் போன்றன ஏற்படும் என எதிர்பார்த்தனர். அத்துடன், இதனுடன் தொடர்புடைய நோய் பாதிப்பு அல்லது இறப்பு குறையும் என பங்காளர்கள் எதிர்பார்த்தனர்.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்ட பூர்த்தியையே எய்தியிருந்தது. பல பங்காளர்கள் நாள்பட்ட சிறுநீரக நோயை தவிர்த்துக் கொள்வது பற்றிய தகவல்களை பிரச்சாரப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் (மைல்கல் 1.2).

உதாரணமாக, CKD க்கான ஜனாதிபதி செயற்குழு, CKD தவிர்ப்பு பற்றிய மட்டுப்படுத்தப்பட்டளவு தகவல்களையே தனது இணையத்தளத்தில் பிரசுரித்திருந்தது.[2]

மாறாக, சுகாதார அமைச்சு, CKD பற்றிய தகவல்கள் அடங்கலாக பொது சுகாதார தகவல்களை வழங்குவதை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது (மைல்கல் 1.3). இந்த செயற்பாடுகளில் CKD தொடர்பான பிரதான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கான, நோய்பரவல் அறிக்கைகளில் CKD தொடர்பான மேற்கோள் காண்பிக்கப்பட்டிருந்தன,[3] ஊடக கருத்தரங்குகள், மற்றும் மருத்துவ அதிகாரிகளின் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் தொடர்பாடல் பயிற்சிகள்[4] போன்ற OGP கடமைப்பொறுப்பினூடாக ஊக்குவிக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும், சுகாதார அமைச்சினால் CKD தவிர்ப்பு தொடர்பான மூலோபாய திட்டமொன்றுக்கான வரைவை மேற்கொள்வதற்கு பல்துறைசார் பங்காளர் அமர்வு (மைல்கல் 1.1) நிறுவப்படவில்லை, CKD சேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பான நிதி மற்றும் சாதனங்கள் பற்றிய தகவல்கள் பிரசுரிக்கப்படவில்லை அல்லது CKD சிகிச்சைகளை வழங்கும் மருத்துவ நிலையங்களில் பொது மக்களிடமிருந்து கருத்து சேகரிப்பதற்கான பொறிமுறைகள் நிறுவப்படவில்லை (மைல்கல் 1.4).

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் கடமைப்பொறுப்பு நடைமுறைப்படுத்தல் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டளவு நிலையில் காணப்பட்டது.

மைல்கல் 1.1: சுகாதார அமைச்சின் பிரகாரம், அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு பல்துறைசார் பங்காளர் அமர்வு ஒன்று நிறுவப்பட்டிருந்தது.[5] சிவில் சமூகத்தினால் உறுதி செய்யப்பட்டதன் பிரகாரம், இந்த அமர்வு இரு தடவைகள் சந்தித்து CKD தொடர்பான சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துவது தொடர்பில் பிரதானமாக கலந்துரையாடப்பட்டிருந்தது.[6] CKD ஏற்படுவதற்கான நேரடி காரணி தொடர்பாக இறுதி தீர்மானத்தை மேற்கொள்ள முடியாத நிலையில், அமர்வில் பங்கேற்ற பங்காளர்கள் உணவு பழக்க சார் காரணிகள் பற்றி கண்டறிவதற்கு மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என உடன்பட்டிருந்ததாக சிவில் சமூகம் மற்றும் அரசாங்கம் ஆகியன குறிப்பிட்டிருந்தன.[7] இருந்த போதிலும், இந்த கலந்துரையாடல்கள் தவிர்ப்பு மூலோபாயத் திட்டம் ஒன்றை வடிவமைக்கும் வகையில் அமைந்திருக்கவில்லை என சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தது.[8]

மைல்கல் 1.2: தவணை பூர்த்தியில் CKD தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படவில்லை. ஆயினும், அமைச்சினால் தொடர்புடைய சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன, இதில் தொலைக்காட்சி நேர்காணல்களில் பங்கேற்றிருந்தமை மற்றும் 2018 ஜுன் மாதத்தில் CKD தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கு நிகழ்வொன்றை முன்னெடுத்திருந்தமை போன்றன அடங்கியிருந்தன.[9] இந்த அறிக்கை தயாரிக்கும் போது, அமைச்சின் இணையத்தளத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய சுகாதார கணக்குகள் பற்றிய நிதி அறிக்கை மாத்திரமே காணப்பட்டது.[10]

மைல்கல் 1.3: CKD தொடர்பாக அதிகளவு தகவல்களை பெற்றுக் கொடுக்கும் சுகாதார அமைச்சின் சிவில் சமூக பங்காளரான சர்வோதய, அமைச்சினால் சில ஊடக மற்றும் சமூக ஊடக பிரச்சாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக முக்கியமான தகவல்களை வெளியிட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டிருந்தது.[11] இந்த தகவல்களில் CKD தவிர்ப்பு தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளான, வழங்கப்படும் மருத்துவ வசதிகள் மற்றும் சேவைகள், CKD க்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் பிரதான கொள்கைகள் போன்றன அடங்கியுள்ளன. பொது மக்கள் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என அமைச்சு அறிவித்திருந்தது.[12]

மைல்கற்கள் 1.4–1.5: அமைச்சின் பிரகாரம், வைத்தியசாலை வலையமைப்பு மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கங்கள் (HDCs) போன்றவற்றினூடாக கருத்துப்பகிர்வு பொறிமுறை செயலில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும், இந்த பொறிமுறைகள் CKD உடன் தொடர்புடையதாக இருக்கவில்லை என சர்வோதய குறிப்பிட்டிருந்தது.[13] சேவைகளை பெற்றுக் கொள்வோர் கருத்துக்களை பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பை கொண்டிருந்த போதிலும், அதனை மேற்கொள்வதற்கு அவர்கள் போதியளவு வலுவூட்டப்பட்டவர்களாக காணப்படமாட்டார்கள் என அமைச்சு மேலும் குறிப்பிட்டிருந்தது.[14] எனவே, CKD சேவைகள் மற்றும் வசதிகளின் தரம் மற்றும் பெற்றுக் கொள்ளக்கூடிய திறன் பற்றிய பாவனையாளர் கருத்துக்கள் அடங்கிய அறிக்கைகளை அமைச்சு பிரசுரிக்கவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: எல்லையளவு**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

இந்த கடமைப்பொறுப்பு தகவல் அணுகல் மற்றும் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றில் மட்டுப்படுத்தப்பட்டளவு தாக்கத்தை கொண்டிருந்தது, எனவே, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் எல்லையளவு மேம்படுத்தலுக்கே வழிகோலியிருந்தது.

செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கையில் காணப்படும் பாரதூரமான பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக CKD அமைந்திருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், நோய்க் காரணிகள் எதுவும் கண்டறியப்படவில்லை. எனவே, பொது மக்களுக்கு தவிர்ப்பு அல்லது குணப்படுத்தல் நடவடிக்கைகள் பற்றிய தீர்க்கமான தகவல்களை பெற்றுக்கொள்ள போதிய வாய்ப்புகள் அல்லது காணப்படும் சிகிச்சை இடையீடுகள் பற்றிய தகவல்கள் காணப்படவில்லை.[15] மாறாக, ஒத்திசைவின்மை, தகவல் கிடைக்காமை போன்ற காரணிகளால் குழப்ப நிலைகள் தோற்றுவிக்கப்பட்டு, உச்சக்கட்ட நடவடிக்கைகளை நாட பலரை தூண்டியிருந்தது.[16] போதியளவு அல்லது வினைத்திறன் வாய்ந்த சிகிச்சைகளை பெற்றுக் கொடுப்பதற்கு அளவிற்கொவ்வாத வசதிகள் காணப்பட்டமையும், வெவ்வேறு பங்காளர்கள் மத்தியில் போதியளவு ஒருங்கிணைப்பு இன்மை காரணமாகவும் முயற்சிகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தன.[17]

இந்த கடமைப்பொறுப்பின் செயற்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டளவு காணப்பட்டதாக பிரதான அரச மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.[18] அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட பங்காளர்களான, CKD க்கான ஜனாதிபதி செயற்குழு, தொடர்பான அரசாங்கம் கொண்டிருந்த சில தகவல்களை இணையத்தளங்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவர் அட்டவணைகள் போன்றவற்றினூடாக பிரசுரித்திருந்தன (மைல்கல் 1.2 ஐ பார்க்கவும்). ஆனாலும், இந்த

வெளிப்படுத்தல்கள் ஒருசில, தீர்க்கமான தகவல்களை மாத்திரமே கொண்டிருந்ததுடன், நிலைபேறான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவில்லை.[19] எனவே, இந்த செயற்பாடுகள் தகவல் பெற்றுக் கொள்வதை மேம்படுத்துவதில் பெருமளவு பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை. அதுபோன்று, நிறுவப்பட்ட பல்துறைசார் பங்காளர் அமர்வினூடாக பங்காளர்களால் எதிர்பார்க்கப்பட்ட மூலோபாய தவிர்ப்பு திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.[20] இதனூடாக பல்துறைசார் பங்காளர் அமர்வினூடாக சுகாதார கொள்கைக்கு மாற்றங்களை பரிந்துரைக்க முடியாமல் போயிருந்தது. இருந்த போதிலும், முன்னர் முரண்பட்டிருந்த தரப்பினர் தற்போது ஒன்றிணைந்து இந்த விடயம் தொடர்பாக உரையாட முன்வந்துள்ளதுடன், இதன் காரணமாக இந்த பிரச்சினை தொடர்பில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் பதிவாகியிருந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.[21]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. ஆனாலும், CKD தொடர்பான தவிர்ப்பு மூலோபாயங்கள் மற்றும் வசதிகள் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, IRM ஆய்வாளர் இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை பரிந்துரைக்கின்றார்.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இந்த கடமைப்பொறுப்பினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய சில நடவடிக்கைகள் பற்றி IRM ஆய்வாளர் பரிந்துரைகள் சிலதை வழங்கியிருந்தார். இவற்றில், CKD ஆய்வு செயற்பாடுகள் பற்றி வருடத்தில் இரு அறிக்கைகளை வெளியிடுவது; தவிர்ப்பு மூலோபாயங்களை பொது மக்கள் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டை மேம்படுத்தும் ஒருங்கிணைப்பு செய்வதற்கு முக்கிய மையப்புள்ளியை நிறுவுவது; CKD பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட தொடர்பாடல் மூலங்களை பயன்படுத்துவது; மற்றும் CKD வசதிகள் மற்றும் சேவைகள் பற்றிய தரம் மற்றும் அணுகும் திறன் பற்றிய பாவனையாளர் கருத்துக்களை கொண்ட அறிக்கைகளை பின்தொடர்வது போன்றன அடங்கியிருந்தன.

[1] The medical community has often presented CKD as a complication of diabetes or hypertension. However, since 2010, an increasing number of reported cases have had no identifiable cause (i.e., chronic kidney disease of unknown aetiology, CKDu). This is also sometimes referred to as Chronic Kidney Disease of non-Traditional causes (CKDnT).
[2] "Presidential Task Force on Chronic Kidney Disease Prevention" (Presidential Task Force, 2017) http://www.kidney.presidentialtaskforce.gov.lk/?lang=en.
[3] Ministry of Health, Nutrition, and Indigenous Medicine, Weekly Epidemiological Report, 11-17 February 2017, https://bit.ly/2GoboBc
[4] Dr. Susie Perera (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), Dr. Amila Chandrasiri (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), and Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interview by IRM researcher, 26 October 2017.
[5] Dr. Susie Perera (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), interview by IRM researcher, 28 September 2018; Dr. Amila Chandrasiri (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), interview by IRM researcher, 14 September 2018.
[6] Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interview by IRM researcher, 27 September 2018.
[7] Perera, interview, 28 September 2018; Chandrasiri, interview, 14 September 2018; Ariyaratne, interview 27 September 2018.
[8] Ariyaratne, interview, 27 September 2018.
[9] Perera, interview, 28 September 2018; Chandrasiri, interview, 14 September 2018.
[10] Ministry of Health, Nutrition & Indigenous Medicine, Sri Lanka National Health Accounts 2013 (2018) https://bit.ly/2QA9r8e.
[11] Ariyaratne, interview, 27 September 2018.
[12] Perera, interview, 28 September 2018; and Chandrasiri, interview, 14 September 2018.
[13] Ariyaratne, interview, 27 September 2018.
[14] Perera, interview, 28 September 2018; Chandrasiri, interview, 14 September 2018.
[15] "Medical Mystery: Kidney Disease Killing Farm Workers in Sri Lanka" (CBS News, 19 January 2015) https://www.cbsnews.com/news/medical-mystery-rare-kidney-disease-killing-sri-lanka-farmers/.
[16] For instance, upon the onset of a symptom of any basic illness, people in affected areas fear the contraction of CKD and rely on unsubstantiated information to drink as little water from their wells as possible. This action then leads to chronic dehydration and further deterioration of their health condition — "Medical Mystery: Kidney Disease Killing Farm Workers in Sri Lanka," CBS News, 19 January 2015, https://www.cbsnews.com/news/medical-mystery-rare-kidney-disease-killing-sri-lanka-farmers/.
[17] Ariyaratne, interview, 26 October 2017.
[18] Perera, interview, 28 September 2018; Chandrasiri, interview, 14 September 2018; Ariyaratne, interview, 27 September 2018.
[19] Dr. Susie Perera and Dr. Amila Chandrasiri, interview by IRM researcher.
[20] Ariyaratne, interview, 27 September 2018.
[21] Perera, interview, 28 September 2018.

## 2. பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துகள் (Safe and Affordable Medicines)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**சகலருக்கும் பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துகளை பெற்றுக் கொடுப்பதற்கான வெளிப்படையான கொள்கை**

தடுப்பு, ஊக்குவிப்பு, குணப்படுத்தும் மற்றும் புனர்வாழ்வு சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இலவச மற்றும் உலகளாவிய சுகாதார முறைமையை தக்க வைத்துக் கொள்வதில் இலங்கை பெருமிதம் கொள்கிறது, இது நாட்டிற்கான சுகாதார குறிகாட்டிகளில் (ஆயுள் எதிர்பார்ப்பு மற்றும் சுகாதார சேவைகளைப் பயன்படுத்துதல் போன்றவை) உயர்ந்த நிலையை எய்த உதவியாக அமைந்துள்ளது. இருப்பினும், இந்த முறைமையை அமுல்படுத்துவதில் வேறுபாடுகள் உள்ளன. மருத்துவ பராமரிப்பு இலவசமாக இருந்தாலும் கூட, பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துப் பொருட்கள் பொது மக்களுக்கு கிடைக்காவிடின், அது மக்களின் ஆரோக்கியத்தில் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்தும்.

இலங்கையில், அரசாங்க வைத்தியசாலைகளிலும் மருத்துவ நிலையங்களிலும் மருந்துகள் கிடைக்காமை மற்றும் பற்றாக்குறையினால் மோசமான விளைவுகளை ஏற்பட்டுள்ளன. மருந்துகளின் தரம் மற்றும் செலவும் மக்களுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளது. இந்த கடமைப்பொறுப்பு தேசிய சுகாதாரத் தரங்களை மேம்படுத்துவதோடு பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துகள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துகிறது. தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) க்கு ஆலோசனை சபையை நியமித்தல் மற்றும் செயற்படுத்தலை மதிப்பீடு செய்வதில் கைகோர்ப்பது போன்றன அரசாங்க பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும்.

மைல்கற்கள்:

- 2.1 சுகாதார ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதித்துவத்துடன் தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கான (NMRA) ஆலோசனைக் குழுவை நியமித்தல்.

- 2.2 பொதுமக்கள் கருத்துக்களுக்கான ஏற்பாடுகளுடன், தேவையான அத்தியாவசிய மருந்து கிடைப்பதை (RMSD, நிறுவன மட்டம்) உறுதிப்படுத்த ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட கண்காணிப்பு கட்டமைப்பு ஒன்றை நிறுவுதல்.

- 2.3 அனைத்து அரச வைத்தியசாலைகள் மற்றும் கிளினிக்குகள் போன்றவற்றில் எல்லா நேரங்களிலும் தரமான அத்தியாவசிய மருந்துகள் வழங்கப்படுவதை உறுதிசெய்தலும் காட்சிப் பலகைகள் மூலம் பொது மக்களுக்கான தகவல் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தலும்.

- 2.4 சகாயமான விலையில் அத்தியாவசிய மருந்துகளை விற்பனை செய்யும் தனியார் மருத்தகங்களை தரப்படுத்தும் கட்டமைப்பை உருவாக்கி, பொது மக்களுக்கு அறிந்து கொள்ளக்கூடிய வகையில் வலைப்பின்னல் மூலம் அறியத்தரல்.

- 2.5 சகாயமான விலையில் அத்தியாவசிய மருந்துகளை வழங்கும் தனியார் மருந்தகங்களுக்கு வழங்கப்படும் தரப்படுத்தல் கட்டமைப்பு பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**பொறுப்பான நிறுவனம்:** சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி (மத்திய தவணை / தவணை பூர்த்தி) | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா ? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 2. சகாயமான மருந்துகள் | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ (மத்திய தவணை)<br>✔ (தவணை பூர்த்தி) | | | | | ✔ | | |

**துணை நிறுவனங்கள்**: தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA); மருந்துப்பொருட்கள் விநியோக பிரிவு, சர்வோதய, நோயாளர் உரிமைகள் அமைப்பு, மக்கள் சுகாதார அமைப்பு (சிவில் சமூகம்)

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

இலங்கை முழுவதிலும் தரமான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கிடைப்பனவு மற்றும் சகாயத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. இந்த செயற்பாட்டினூடாக சுகாதார குறிகாட்டிகள் மற்றும் தேசிய சுகாதார நியமங்கள் போன்றவற்றில் மேம்படுத்தல்களை ஏற்படுத்தும் என சுகாதார அமைச்சு மற்றும் இதர சம்பந்தப்பட்ட பங்காளர்கள் எதிர்பார்த்தனர். மைல்கற்களினூடாக பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துப் பொருட்கள் கிடைப்பனவில் அதிகளவு வெளிப்படைத்தன்மைக்கான கடமைப்பொறுப்பு குறிக்கப்பட்டிருந்தாலும், அதை உறுதி செய்வதற்கான "வெளிப்படையான கொள்கை" ஒன்றை உருவாக்குவதை இந்த கடமைப்பொறுப்பு வெளிப்படையாக பிரேரிக்கவில்லை.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணையில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் (NMRA) ஆலோசனை சபையில் நியமிக்கப்படுவதற்கான நபர்களின் விவரங்கள் பிரேரிக்கப்பட்ட போதிலும், உத்தியோகபூர்வ நியமனங்களாக இவற்றை மாற்றி வழங்கும் பொறுப்பு சுகாதார அமைச்சரைச் சார்ந்தது என குறிப்பிட்டிருந்தது. (மைல்கல் 2.1).[1] சபையின் அடக்கக்கூறுகள் மற்றும் பிரதிநிதித்துவம் தொடர்பான வழிகாட்டல்களின் பிரகாரம், பிரேரிக்கப்பட்ட நபர்களில் சிவில் சமூக அங்கத்தவர்களும் அடங்கியிருந்தனர்.[2]

அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் கிடைப்பனவு தொடர்பில் பொது மக்களுக்கு கருத்துக்களை பதிவு செய்யக்கூடிய வசதியுடனான, முழுமையான செயற்பாடுடைய, நிறுவனசார் கண்காணிப்பு பொறிமுறை காணப்படவில்லை (மைல்கல் 2.2). சிறந்த சுகாதார சேவை வழங்கலை ஊக்குவிக்கும் சிவில் சமூக அமைப்பான சர்வோதயவினால் இது உறுதி செய்யப்பட்டிருந்தது.[3] ஆனாலும், தேசிய, பிராந்திய மற்றும் உள்நாட்டு மட்டத்தில் கையிருப்பிலுள்ள மருந்துகள் மற்றும் விநியோகம் ஆகியன தொடர்பில் கண்காணிக்கும் அடிப்படை ஒன்லைன் உட்கட்டமைப்பு வசதியை சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் மருந்துப் பொருட்கள் விநியோக பிரிவு (MSD) நிர்மாணித்ததாக தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை குறிப்பிட்டிருந்தது.[4]

தரமான அத்தியாவசியமான மருந்துப்பொருட்கள் பற்றிய தகவல்களை பொது மக்கள் பார்வையிடக்கூடிய பகுதிகளில் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சில சுகாதார கிளினிக்கள் மற்றும் வைத்தியசாலைகள் ஆரம்பித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (மைல்கல் 2.3). ஆனாலும், இது முறையான வகையில் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இடம்பெறுவதில்லை.[5] மத்திய தவணை காலப்பகுதியில் மருந்தகங்களுக்கான தரப்படுத்தல் கட்டமைப்பும் காணப்படவில்லை. (மைல்கல் 2.4). தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பிரதிநிதி ஒருவர் குறிப்பிடுகையில், அவ்வாறான தரப்படுத்தல் கட்டமைப்பொன்றை அறிவிக்கும் வழிகாட்டல்களை வடிவமைத்துள்ளதாக தெரிவித்திருந்தார்.[6] சர்வோதயவின் சிவில் சமூக பிரதிநிதி குறிப்பிடுகையில், இந்த விடயம் தொடர்பாக சிவில் சமூகத்தினால் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றார்.[7]

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவாக அமைந்திருந்தது.

மைல்கல் 2.1: இந்த அறிக்கை எழுதப்படும் போது, தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கான ஆலோசனை சபையை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சர் மேற்கொண்டிருக்கவில்லை. பிரதான தீர்மானமெடுப்போர் அத்தியாவசிய மருந்துப்பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக குறைக்கப்பட்டமை தொடர்பில் மிதவையான நிலைப்பாட்டை கொண்டிருந்ததாக சுகாதார அமைச்சு ஊகம் வெளியிட்டிருந்தது.[8] எனவே, ஆலோசனை சபையை நியமிப்பது என்பது அவசர தேவையென அவர்கள் கவனத்தில் கொண்டிருக்கவில்லை.

மைல்கல் 2.2: மருந்துப் பொருட்கள் விநியோக பிரிவு (MSD) இனால் பிராந்திய மருந்துப் பொருட்கள் விநியோக பிரிவுகள் (RMSDs) வரை மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு பொறிமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.[9] MSD ஐ மையமாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப்பொருட்களை 960 பிரதான சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை மையப்படுத்தப்படாத RMSDகள் முன்னெடுத்திருந்தன. ஆனாலும்,

நிறுவனசார் மட்டத்தில் மருந்துப்பொருட்கள் கிடைப்பனவை கண்காணிப்பதற்கான பொறிமுறை இல்லை.[10] நேர்த்தியான ஆரம்பமாக அமைந்தாலும், RMSD இன் கண்காணிப்பு பொறிமுறை[11] தற்போது பொது மக்களின் கருத்துக்களுக்கு திறக்கப்படவில்லை.[12] சகல மட்டங்களிலும் மருந்துப் பொருட்களின் கையிருப்பை வினைத்திறன் வாய்ந்த வகையில் கண்காணிப்பதற்கு பொறிமுறை ஒன்றை நிறுவ வெளியக உதவியை நாடியுள்ளதாக அமைச்சு உறுதி செய்துள்ளது.[13]

மைல்கல் 2.3: இந்த கடமைப்பொறுப்பு காரணமாக சுகாதார நிறுவனங்கள் முன்னேற்பாடாக மற்றும் பொதுப்படையாக காணப்படும் மருந்துப்பொருட்கள் பற்றிய தகவல்களை பிரசுரப்படுத்தும் என சிவில் சமூகம் எதிர்பார்த்தது.[14] மத்திய தவணையிலிருந்து எல்லையளவு அதிகரிப்பு மாத்திரம் பதிவாகியிருந்த நிலையில், அவ்வாறான பிரசுரப்படுத்தல் ஒழுங்குமுறையற்ற விதத்திலேனும் சிறியளவிலான வைத்தியசாலைகள் மற்றும் கிளினிக்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததை சிவில் சமூகம் உறுதி செய்திருந்தது.[15] ஆனாலும், சிவில் சமூகத்தினாலோ அல்லது அரசாங்கத்தினாலோ தெளிவான, உறுதி செய்யக்கூடிய பெறுமதி வழங்கப்படாத நிலையில், இந்த அர்ப்பணிப்பை பூர்த்தி செய்வதில் மாற்றம் இருக்கவில்லை.

வைத்தியசாலை மருந்தகத்தில் காணப்பட்ட மருந்துப்பொருட்களை மாத்திரமே வைத்தியர்கள் பரிந்துரைத்ததாக சுகாதார அமைச்சு தெளிவுபடுத்தியிருந்தது. இந்த மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தன. குறித்த தினமொன்றில் அத்தியாவசிய மருந்து கிடைக்காவிடின், வைத்தியர் அதற்கு பொருத்தமான மாற்று மருந்தை பரிந்துரைப்பார். இந்த வழிமுறையையும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் கிடைப்பனவையும் கருத்தில் கொண்டு கிடைக்கும் மருந்துப் பொருட்கள் பற்றிய பொதுக் காட்சிப்படுத்தல் என்பது அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்த விடயமல்ல என அமைச்சு தெரிவித்திருந்தது.[16]

இந்த மைல்கல்லினூடாக, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க தரத்தில் காணப்படுகின்றமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. கட்டமைப்பினூடாக விநியோகிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள் அனைத்தும் பொருத்தமான தர நிர்ணயங்களை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியாக செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததை சுகாதார அமைச்சு உறுதி செய்திருந்தது.[17] இவற்றில்: கொள்முதலின் போது சிறந்த உற்பத்தி செயன்முறைகள்; ஒழுங்குபடுத்தல் முகவர் அமைப்புகளிடமிருந்து பரிந்துரைப்புகள்; NMRA உடனான பதிவு; மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மாதிரி பரிசோதனை போன்றன அடங்கியிருந்தன.[18] தர உறுதிப்படுத்தல் நடவடிக்கையில் இவை நியம செயற்பாடுகளாக அமைந்திருப்பதாக சர்வோதய உறுதி செய்திருந்தது.[19]

மைல்கற்கள் 2.4–2.5: தனியார் மருந்தகங்களுக்கு தரப்படுத்தல் கட்டமைப்பு அறிமுகம் செய்வது தொடர்பில் எவ்விதமான முன்னேற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என சகல பங்காளர்களும் உறுதி செய்திருந்தனர்.[20]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: எல்லையளவு**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

பொது மக்கள் பங்கேற்பில் எவ்வித மாற்றத்தையும் இந்த கடமைப்பொறுப்பு ஏற்படுத்தாத போதிலும், தகவல் பெற்றுக் கொள்வது தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்டளவு அதிகரிப்புக்கு வழிகோலியிருந்ததன்

காரணமாக, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் எல்லையளவு மேம்படுத்தலை ஏற்படுத்தியிருந்தது.

செயற்திட்டத்தின் பிரகாரம், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் போதியளவு கிடைக்காமை மற்றும் அவற்றின் சகாயத்தன்மை போன்றன சுகாதாரத் துறையைச் சேர்ந்த பிரதான பங்காளர்கள் மத்தியில் பெரும் கவனத்தை ஈர்த்த விடயங்களாக அமைந்திருந்தன.[21] உயர் செலவீனம், சலிப்பூட்டும் மருந்து பதிவு செயன்முறைகள், மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள போதியளவு திறனின்மை மற்றும் அதிகளவு மருந்துப்பொருட்களில் தங்கியிருப்பு போன்ற அனைத்தும் பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துப் பொருட்களை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கான சவால் நிலையில் பங்களிப்பு செய்திருந்தன.[22] இதன் காரணமாக, பரிந்துரைக்கப்பட்ட மருந்துப்பொருட்களை பின்தொடராமை மற்றும் மேலதிக சுகாதார சிக்கல் நிலைகளின் தோற்றம் என்பன ஏற்பட்டு, பொது சுகாதார சேவைகளுக்கு மேலும் சுமையாக அமைந்திருந்தன.[23]

எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி வழங்கப்படாத போதிலும், கிடைக்கும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விவரங்களை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை சில பொது சுகாதார நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளதாக சிவில் சமூகம் உறுதி செய்துள்ளது.[24] ஆனாலும், இது முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் - மருந்தகங்கள் தரப்படுத்தல் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படாததால் - தகவல் அணுகலில் எல்லையளவு அதிகரிப்புக்கு மாத்திரம் இந்த கடமைப்பொறுப்பு பங்களிப்பு வழங்கியிருந்தது.

RMSD மட்டத்தில் ஒன்லைன் கண்காணிப்பு பொறிமுறையின் அறிமுகத்துடன், பொது மக்களுக்கு கிடைக்கும் மருந்துப் பொருட்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள உதவியாக அமைந்திருந்தது, இது தகவல் அணுகலை மேம்படுத்துவதில் எல்லையளவு அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த தகவல்களை பெற்றுக் கொள்ளும் குடிமக்களின் எண்ணிக்கை தொடர்பில் எவ்விதமான புள்ளி விவரங்களும் காணப்படாத நிலையில், 2018 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் மொத்த சனத்தொகையின் 25 சதவீதமானவர்கள் மாத்திரமே இணையத்தை பாவித்திருந்ததாக தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்திருந்தது.[25] இந்த புள்ளி விவரங்களினூடாக ஒன்லைன் நாளிகைகளினூடாக மாத்திரம் அரசாங்கத்தினால் பரிபூரண தகவல்களை பெற்றுக் கொடுப்பதில் காணப்படும் கட்டுப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், ஒன்லைன் பொறிமுறையினூடாக பொது மக்களுக்கு கருத்துக்களை வழங்கக்கூடிய வசதி வழங்கப்படவில்லை என்பதுடன், பொது மக்களின் பங்கேற்பில் பங்களிப்பு வழங்கவில்லை. தேசிய சுகாதார மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கான ஆலோசனை குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்கத்தவறியிருந்தமை இந்த நடவடிக்கைக்கு மேலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது.[26]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்பான மற்றும் சகாயமான அத்தியாவசிய மருந்துப்பொருட்களின் கிடைப்பனவை உறுதி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு, IRM ஆய்வாளர் இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை பரிந்துரைக்கின்றார்.

ஆயினும், மட்டுப்படுத்தப்பட்டளவு முன்னேற்றம் பதிவாகியிருந்ததை கவனத்தில் கொண்டு, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை கொள்கைகளை சிறந்த முறையில் பின்பற்றுவதில் நேர்த்தியான தாக்கத்தை மேம்படுத்துவதற்கு இந்த கடமைப்பொறுப்பை பின்பற்றுமாறு IRM ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார். அவ்வாறான சில வழிமுறைகள் 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையில்

பிரேரிக்கப்பட்டிருந்தது. இவற்றில்: பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துப் பொருட்களின் கிடைப்பனவை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை மூன்று மொழிகளிலும் பிரசுரித்தல்; பாதுகாப்பான மற்றும் சகாயமான மருந்துப்பொருட்கள் கிடைப்பனவை உத்தரவாதமளிக்கும் வகையில் சேவை வழங்குநர்களை ஈடுபடுத்துவதற்கு குறைதீர் வழிமுறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் அவ்வாறான பொறிமுறைகள் காணப்படுகின்றமை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல் போன்றன அடங்கியுள்ளன.

---

1 Dr. Kamal Jayasinghe (National Medicines Regulatory Authority), interview by IRM researcher, 20 October 2017.

2 National Medicines Regulatory Authority Act, No. 5 of 2015.

3 Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interview by IRM researcher, 26 October 2017.

4 "Item List," Web Portal, Medical Supplies Division (Ministry of Health – Sri Lanka, 2017) https://www.msd.gov.lk/index.php/web-portals/item-list.

5 Dr. Susie Perera (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine) and Dr. Amila Chandrasiri (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), interview by IRM researcher, 6 October 2017.

6 Jayasinghe, interview.

7 Ariyaratne, interview.

8 Dr. Susie Perera, interview by IRM researcher, 28 September 2018.

9 "Item List" (Ministry of Health – Sri Lanka, 2018).

10 Perera, interview, 28 September 2018.

11 "Item List" (Ministry of Health – Sri Lanka, 2018).

12 Perera, interview.

13 *Id.*

14 Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interview by IRM researcher, 27 September 2018.

15 *Id.*

16 Perera, interview, 28 September 2018.

17 *Id.*

18 *Id.*

19 Ariyaratne, interview.

20 Perera and Chandrasiri, interview, 6 October 2017; Ariyaratne, interview, 27 September 2018.

21 C. Aloysius, "Drug Price Reduction: A Promise in Waiting" (Sunday Observer, 23 October 2016) http://www.sundayobserver.lk/2016/10/23/wellness/drug-price-reduction-promise-waiting.

22 G. D. Dayaratne, "Medicinal Drug Policy of Sri Lanka: Some Challenges" (The Island, 6 April 2015) http://bit.ly/2CizcXo.

23 Perera, interview.

24 Ariyaratne, interview.

25 "Computer Literacy Statistics – 2018" (Department of Census and Statistics, January-June 2018), https://bit.ly/2H7ikVg.

26 Ariyaratne, interview.

## 3. தேசிய சுகாதார செயலாற்றுகை (National Health Performance)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**தேசிய சுகாதார செயலாற்றுகை**

[…]பொது சுகாதாரத் துறை குறைவான திறன், விசேட நிபுணர்கள் சிகிச்சைக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் தொடர்ச்சியற்ற சேவை தரநிலைகளை கொண்டுள்ளது.[1]

இந்த சவால்களில் சிலவற்றைக் சமாளிப்பதற்கு, இலங்கை அரசாங்கத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட சுகாதார மூலோபாய பெருந் திட்டம், சுகாதாரத் துறையின் செயல்திறன், வினைத்திறன் தொடர்பான தகவலை பொது மக்களுக்கு வழங்குவதற்கான தேசிய சுகாதார செயற்திட்ட கட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ளதுடன், தேசிய சுகாதாரத்தின் இந்த இலக்குகள் அடிமட்டத்தில் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதற்காக, சிவில் சமூகத்துக்கு செயல்திறன் வாய்ந்த பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு வலுவூட்டப்படுகின்றது.

சுகாதார செயலாற்றுகை தகவலை வெவ்வேறு வழிகளில் பொது மக்கள் பயன்படுத்தி, அதனூடாக ஆரோக்கியமான தொடர்பாடலை ஏற்படுத்துவதுடன், சுகாதார அபிவிருத்தி தொடர்பில் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் குரல் கொடுப்பார்கள். செயலாற்றுகை தகவல் ஏனைய துறைகளில் இருந்து சுகாதார நடத்தை / ஆதரவு கொள்கைகளில் மாற்றத்திற்கு ஆதரவளிப்பதற்கான தேவை தொடர்பில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்த பயனுள்ளதாக இருக்கும். அத்தகைய தகவலின் கிடைக்கும் தன்மை இந்த உரையாடலை உருவாக்க ஒரு சாதகமான தூண்டுதலாக இருக்கும்.

மைல்கற்கள்:

- 3.1 சுகாதார அமைச்சு விரிவான சுகாதார வரவு செலவுத் திட்டம் மற்றும் செலவுத் தகவல்களை வெளியிடல்.
- 3.2. பொது மக்கள் ஆலோசனைகளினூடாக தேசிய சுகாதார செயலாற்றுகை சட்டகம் (NHPF) தொடர்பான விழிப்புணர்வுகளை அதிகரித்தல்.
- 3.3 சுகாதார அமைச்சின் இணையத்தளம், செய்திப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, பொதுப்பிரசாரங்கள் மற்றும் இணையத்தினூடாக தேசிய சுகாதார செயலாற்றுகை சட்டகத்தை பிரசித்தப்படுத்துதல்.
- 3.4. பொது மக்கள் காலாண்டு அடிப்படையில் ஒரு பொது அமர்வினூடாக இச்சட்டகத்தின் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பதில் செயற்திறனாக தொடர்புபடல்.
- 3.5. இந்த அமர்வின் தீர்மானங்கள் மற்றும் கலந்தாலோசனைகள் அரசாங்க சக நிறுவனங்களுடன் பின்தொடரல் செயற்பாடுகளை உறுதிசெய்வதற்காக முறையாக கலந்துரையாடப்படல்.

**பொறுப்பான நிறுவனம்:** சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 3. தேசிய சுகாதார செயற்திறன் | | | ✔ | | ✔ | ✔ | | ✔ | | | ✔ | | மத்திய தவணை: | ✔ | | | | | ✔ | | |
| | | | | | | | | | | | | | தவணை பூர்த்தி: | ✔ | | | | | | | |

**துணை நிறுவனங்கள்**: சர்வோதய, நோயாளர் உரிமை அமைப்பு, மக்கள் சுகாதார அமைப்பு

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

தேசிய சுகாதார செயலாற்றுகை சட்டகத்தை உருவாக்குவதை இலக்காக கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளதுடன், அதனூடாக இலங்கையில் தேசிய சுகாதார செயலாற்றுகை பற்றிய தகவல்களை பொது மக்கள் பெற்றுக் கொள்வதை மேம்படுத்துவது நோக்கமாக அமைந்துள்ளது. பொது மக்கள் இந்த தகவல்களை பயன்படுத்தி சுகாதார கொள்கையை ஊக்குவிப்பது, ஆக்கபூர்வமாக, ஆதார அடிப்படையிலான கலந்துரையாடல்களில் பங்கேற்பார்கள் என சுகாதார அமைச்சு எதிர்பார்த்தது.[2] மேலும், தீர்மானம் மேற்கொள்ளல் தரத்தை மேம்படுத்துவதுடன், பொது சுகாதாரத் துறை எதிர்கொள்ளும் பரந்தளவு சவால்களை கட்டுப்படுத்தவும் உதவியாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணையில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. 2016 ஏப்ரல் மாதத்தில், சுகாதார அமைச்சினால் தனது இணையத்தளத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய சுகாதார கணக்குகளின் தொகுக்கப்பட்ட அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருந்தது. (மைல்கல் 3.1).[3] ஆனாலும், அமைச்சினால் பிந்திய வரவு செலவுத்திட்ட அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

மத்திய தவணை காலப்பகுதியில் தேசிய சுகாதார செயலாற்றுகை சட்டகம் இறுதிப்படுத்தப்படாததால், பொது கலந்துரையாடல்கள் அல்லது வேறு வழிமுறைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில்

எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இந்த சட்டகம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்காக எந்தவொரு பொது அமர்வும் காணப்படவில்லை. (மைல்கற்கள் 3.2–3.5).[4]

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

இந்த கடமைப்பொறுப்பு நேர்த்தியான அதிகரித்த முன்னேற்றங்களை கண்டிருந்த போதிலும், தவணை பூர்த்தியில் நடைமுறைப்படுத்தல் என்பது மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டது.

மைல்கல் 3.1: 2017 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினூடாக மேலும் வரவு செலவுத்திட்ட தரவுகள் மற்றும் செலவுகள் பற்றிய தகவல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டிருந்தது.[5] இந்த அறிக்கை மூன்று மொழிகளிலும் கிடைத்திருந்தது.[6]

மைல்கற்கள் 3.2–3.5: அமைச்சினால் NHPF தயாரிக்கப்பட்டு அதன் இணையத்தளத்தில் 2018 ஏப்ரல் மாதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.[7] இந்த சட்டகத்தில் 80க்கும் அதிகமான குறிகாட்டிகள் காணப்பட்டதுடன், இவை நாட்டின் சுகாதார பராமரிப்பு துறையின் நிலையை மதிப்பிடுவதற்காக ஆராய்வதற்கு பயன்படுத்தப்படலாம்.[8] அமைச்சின் பிரகாரம், சுமார் 50 குறிகாட்டிகளுக்கு தரவுகள் காணப்படுகின்றது, ஆனாலும், தரவுக் கணங்களிலிருந்து பயனுள்ள தரவுகளை பிரித்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதுடன், அதை இலகுவாக அணுகக்கூடிய வகையில் திரட்டப்பட வேண்டியுமுள்ளது.[9] சிவில் சமூகத்தின் பிரகாரம், ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பு அல்லது பொது விழிப்புணர்வு நடவடிக்கைகள் எதையும் அமைச்சு முன்னெடுக்கவில்லை.[10] மேலும், சிவில் சமூகத்தினால் குறிப்பிடப்பட்டு, IRM ஆய்வாளரால் உறுதி செய்யப்பட்டதன் பிரகாரம், அமைச்சு இந்த சட்டகத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கவில்லை.

சட்டகத்தை முன்னெடுப்பது மற்றும் மேற்பார்வை செய்வதற்கு பொருத்தமான நபர்களை நியமிப்பது போன்றன அடங்கலாக, NHPF ஐ நிறுவனமயப்படுத்த மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.[11] தவணை பூர்த்தியில் பொது மக்களின் பங்கேற்புடன் கண்காணிப்பு அமர்வும் நிறுவப்படவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: எல்லையளவு**
**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

தகவல் பெற்றுக் கொள்வதற்கான அணுகல் மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு இந்த கடமைப்பொறுப்பு எல்லையளவு பங்களிப்பை வழங்கியிருந்தது. பொது மக்கள் பங்கேற்பில் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தலுக்கு இது பங்களிப்பு வழங்கவில்லை.

செயற்திட்டத்தின் பிரகாரம், சுகாதார பராமரிப்பு கட்டமைப்பில் வளர்ந்து வரும் சவால்கள் தொடர்பில் அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம் கவனம் செலுத்துவது என்பது போதியளவு பயனுள்ள அல்லது தரமான சுகாதார தகவல்கள் காணப்படாததால் முடக்கப்பட்டிருந்தன.[12] சுகாதார செயலாற்றுகை சட்டகம் காணப்படாத நிலையில், இலங்கையில் சுகாதார பராமரிப்பை மேம்படுத்துவதற்காக, பங்காளர்களுக்கு தெளிவான இலக்குகளை நிர்ணயித்தல், முன்னேற்றங்களை கணிப்பிடல் அல்லது ஆதார அடிப்படையிலான கொள்கைகளை பின்பற்றல் போன்றவற்றை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

அமைச்சினால் வரவு செலவுத்திட்ட தரவுகள் மற்றும் செலவீன விவரங்கள் போன்றன மும்மொழிகளிலமைந்த *வருடாந்த செயலாற்றுகை அறிக்கை* ஊடாக அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.[13] சிவில் சமூகத்தின் பிரகாரம், சுகாதார செலவீனம் தொடர்பான அடிப்படை தகவல்களை பெற்றுக் கொள்ளும் அணுகலை மேம்படுத்தியிருந்தது. [14] இதற்கு முன்னர், அமைச்சினால் 2013 ஆம் ஆண்டுக்கான பூர்த்தியாக்கப்பட்ட தேசிய சுகாதார கணக்குகள்[15] மற்றும் வருடாந்த சுகாதார அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தன.[16] இவற்றில் மட்டுப்படுத்தப்பட்டளவு நிதிசார் தகவல்கள் காணப்பட்டன. அதுபோன்று, அமைச்சு தேசிய சுகாதார செயலாற்றுகை சட்டகத்தையும் (NHPF) வடிவமைத்து பிரசுரித்திருந்தது. [17] இதனூடாக, குறிப்பிட்ட குறிகாட்டிகளினூடாக சுகாதார கட்டமைப்பின் செயலாற்றுகையை அளவிடுவதற்கான சட்டகம் வழங்கப்பட்டுள்ளது. முறையாக செயற்படுத்தப்பட்டால், இதுவரையில் கிடைக்காத சுகாதார சேவைகளின் வினைத்திறன், செயலாற்றுகை மற்றும் நேர்மைநெறி பற்றிய தகவல்களை அணுகுவதற்கு இந்த சட்டகம் வழிகோலும் என்பதற்கு பங்காளர்கள் உடன்பட்டிருந்தனர்.[18]

இருந்தபோதிலும், NHPF ஊடாக திரட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சில தரவுகள் கிடைக்கவில்லை அல்லது இலகுவாக அணுக முடியவில்லை என்பதை சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தது.[19] NHPF சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் காணப்படவில்லை என்பதுடன், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு திட்டங்களினூடாக அறிமுகம் செய்யப்படவுமில்லை.[20] எனவே, தகவல் அணுகலுக்கு இந்த கடமைப்பொறுப்பு எல்லையளவு முன்னேற்றத்துக்கே பங்களிப்பு வழங்கியிருந்தது.

NHPF நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு பல்துறைசார் பங்காளர் அமர்வொன்றை அமைச்சு நிறுவாததன் காரணமாக, பொது மக்கள் பங்கேற்பை இந்த கடமைப்பொறுப்பு முன்னேற்றவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. ஆனாலும், IRM ஆய்வாளர் இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை பரிந்துரைக்கின்றார். NHPF இன் முறையான பயன்பாட்டினூடாக சுகாதார சேவை தகவல்களுக்கான அணுகலை பெருமளவு அதிகரித்துக் கொள்ள முடியும், அதனூடாக, மேம்படுத்தப்பட்ட சுகாதார பராமரிப்புக்காக ஆக்கபூர்வமான பேருரைக்கு பங்களிப்பு வழங்கும்.

சுகாதாரம் பற்றிய போதிய தகவல்கள் காணப்படாமை மற்றும் இந்த கடமைப்பொறுப்பின் தாக்கத்தை மேம்படுத்துவது தொடர்பில் IRM ஆய்வாளர் 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையில் சில மேலதிக நடவடிக்கைகளை பரிந்துரைத்திருந்தார். இவற்றில்: வினைத்திறன் வாய்ந்த தகவல் சேகரிப்பு பொறிமுறைகளின் அறிமுகத்துக்கு முக்கியத்துவமளித்தல்; தரவு சேகரிப்புக்காக நிதிசார் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதை அறிமுகம் செய்தல் மற்றும் பிரதான, NHPF இடமிருந்து இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய தரவுகளை வெளியிடல் போன்றன அடங்கியுள்ளன.

[1] "Sri Lanka's healthcare Challenges," Economist Intelligence Unit, 24 November 2014, http://country.eiu.com/article.aspx?articleid=1502512534&Country=Sri%20Lanka&topic=Economy&subtopic=Forecast.
[2] Dr. Susie Perera (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine) and Dr. Amila Chandrasiri (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), interview by IRM researcher, 6 October 2017.
[3] Sri Lanka National Health Accounts 2013, Health Economics Cell (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine, April 2016) http://www.health.gov.lk/moh_final/english/public/elfinder/files/publications/NHA/Sri%20Lanka%20National%20Health%20Accounts%202013.pdf.
[4] Perera and Chandrasiri, interview; and Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interview by IRM researcher, 26 October 2017.
[5] Annual Performance Report 2017 (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine, 2018) https://bit.ly/2NtepkR.
[6] List of Publications (Ministry of Health, 2018) https://bit.ly/2y5Bkya.
[7] National Health Performance Framework 2018 (Ministry of Health, 2018) https://bit.ly/2y7zhJN.
[8] Dr. Susie Perera (Ministry of Health, Nutrition and Indigenous Medicine), interview by IRM researcher, 28 September 2018.
[9] *Id.*
[10] Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interview by IRM researcher, 27 September 2018.
[11] Perera, interview.
[12] "Upgraded Record Keeping Helps Save Lives in Sri Lanka" (The World Bank, 17 April 2014) http://www.worldbank.org/en/news/feature/2014/04/17/upgraded-record-keeping-helps-save-lives.
[13] Annual Performance Report 2017 (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine, 2018) https://bit.ly/2NtepkR.
[14] Ariyaratne, interview.
[15] Sri Lanka National Health Accounts 2013, Health Economics Cell (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine, April 2016) http://www.health.gov.lk/moh_final/english/public/elfinder/files/publications/NHA/Sri%20Lanka%20National%20Health%20Accounts%202013.pdf.
[16] Annual Health Bulletin (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine, 2016) https://bit.ly/2tGOjn9.
[17] National Health Performance Framework 2018 (Ministry of Health, 2018).
[18] Dr. Susie Perera (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine), Dr. Amila Chandrasiri (Ministry of Health, Nutrition, and Indigenous Medicine) and Dr. Vinya Ariyaratne (Sarvodaya), interviews by IRM researcher, 27 September 2018.
[19] Ariyaratne, interview.
[20] *Id.*

# கருப்பொருள் 2: கல்வி (Education)

## 4. வெளிப்படையான ஆசிரியர் ஆட்சேர்ப்புக் கொள்கை (Transparent Teacher Recruitment Policy)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**4. இலங்கையில் ஆசிரியர் ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் செயன்முறையில் வெளிப்படைத் தன்மையையும் பக்கசார்பின்மையையும் உறுதி செய்தல்**

[…]

பிரதான குறிக்கோள்:

ஆசிரியர்களை ஆட்சேர்த்தல், நியமித்தல், பதவியுயர்வு வழங்குதல் மற்றும் இடமாற்றத்தில் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.

மைல்கற்கள்:

- 4.1 அமைச்சின் இணையத்தளம், செய்திப் பத்திரிகை (அனைத்து மொழிகளிலும்) மற்றும் வழமையான சுற்று நிரூபங்கள் மூலமாகவும் ஆசிரியர் தெரிவு, நியமனம், இடமாற்றம் மற்றும் பாடத்தெரிவு பற்றிய வெளிப்படையான வரைமுறைகள் மற்றும் தகவல்களை வெளிப்படைத் தன்மையாக கல்வியமைச்சு மேற்கொள்ள வேண்டும். இத்தகவல் கணங்கள் திறந்த தகவல் படிவத்தில் கிடைக்கச் செய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்தின் திறந்த தரவுத் தளத்தில் பேணப்படும்.

- 4.2 பொதுத்தளத்தில் நியமனங்கள் பற்றிய செயன்முறை பாட ஒதுக்கீடு, தகவல் பரிமாற்றத்தை பகிர்தல், மேம்படுத்தல், மீளாய்வு பரிந்துரைகளை வெளியிடுதல் ஆகிய செயன்முறைகளை மீளாய்வு செய்வதற்கு அரசாங்க, (ஆசிரியர்கள் உள்ளிட்ட) சிவில் சமூக பங்காளர்கள் (பெற்றோர்கள் உள்ளிட்ட) ஒரு சுயாதீனமான மீளாய்வுக் குழுவை கல்வியமைச்சு நியமிக்கவேண்டும்.

- 4.3 சுயாதீன மீளாய்வுக் குழுவின் (CSO) அறிக்கை அமைச்சின் இணையத்தளம், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், சிவில் சமூக ஊடகங்களுடனான கலந்துரையாடலின் ஊடாக பொதுத் தளத்தில் பரவலாக பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும்.

**பொறுப்பான நிறுவனம்:** கல்வி அமைச்சு

**துணை நிறுவனங்கள்**: ஏற்புடையதல்லை

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 4. வெளிப்படையான ஆசிரியர் இடமாற்றக் கொள்கை | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | |
| | | | | | | | | | | | | | | ✔ | | | | | | | |

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பொதுக் கல்வி கட்டமைப்பைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு, நியமனம், பதவி உயர்வு வழங்கல் மற்றும் இடம்மாற்றம் செய்யும் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டுள்ளது. இந்த செயன்முறைகளில் பெருமளவான வெளிப்படைத்தன்மையினூடாக, சேர்த்துக்கொள்ளப்படும் ஆசிரியர்களின் தரத்தை சீராக பேணுவதில், அரசியல் பின்னணியில் அல்லது எழுமாற்றாக நியமனங்கள் வழங்கப்படுவதை தவிர்த்துக் கொள்வதில் மற்றும் ஆசிரியர் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படும் போது நேர்மைநெறி போன்றவற்றுக்கு பங்களிப்பு வழங்கும்.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்தது. கல்வி அமைச்சு தனது இணையத்தளத்தில் ஆசிரியர் சேர்ப்பு மற்றும் இடமாற்றம் தொடர்பான நியமங்கள் மற்றும் வழிமுறைகள் பற்றிய அடிப்படை தகவல்களை பதிவேற்றியிருந்தது. (மைல்கல் 4.1). இதில், ஆசிரியர் இடம்மாற்றக் கொள்கை மற்றும் மும்மொழிகளிலும் அமைந்த அரசாங்க சுற்றறிக்கைகள் அடங்கியிருந்தன.[1] ஆனாலும், ஆசிரியர் நியமனம், மொழி பெயர்ப்புகள் போதியளவு கிடைக்காமை மற்றும் பல ஊடகங்களினூடாக ஆவணங்களை வெளியிட தவறியிருந்தமை போன்ற தகவல் தொடர்பான இடைவெளிகள் காணப்பட்டன. பிரசுரிக்கப்பட்டிருந்த தரவுகள் திறந்த தரவு வடிவத்தில் காணப்படவில்லை.

மத்திய தவணையில், ஆசிரியர் இடம்மாற்றம் மற்றும் நியமனம் தொடர்பான செயன்முறைகள் பற்றி மீளாய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்கான பல்துறைசார்ப ங்காளர் சுயாதீன மீளாய்வு குழுவொன்றை நிறுவ கல்வி அமைச்சு தவறியிருந்தது. (மைல்கற்கள் 4.2–4.3).

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக பல தடவைகள் முயற்சித்த போதிலும், செயற்திட்ட காலப்பகுதியில் கல்வி அமைச்சிடமிருந்து கருத்துக்களை பெற்றுக் கொள்ள தொடர்பை ஏற்படுத்த முடியாமலிருந்தது. ஆனாலும், பொதுக் கல்வியில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும் சிவில் அமைப்பான விழுது பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், மத்திய தவணை முதல் இந்த கடமைப்பொறுப்பில் எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

மைல்கற்கள் 4.1–4.3: ஆசிரியர் இடம்மாற்ற கொள்கையை மொழிபெயர்த்து இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்திருந்த போதிலும், ஆசிரியர் சேர்ப்பு, நியமனம் மற்றும் பதவி உயர்வு தொடர்பான தொகுக்கப்பட்ட தரவு மற்றும் தகவல் இதுவரை காணப்படவில்லை. சுயாதீன பல்துறைசார் பங்காளர் மீளாய்வு குழு ஒன்றையும் கல்வி அமைச்சு நியமிக்கவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: எல்லையளவு**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

இந்த கடமைப்பொறுப்பு தகவல் அணுகல் மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை போன்றவற்றில் எல்லையளவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. பொது மக்களின் பங்கேற்பில் கவனிக்கத்தக்க மேம்படுத்தல் எதிலும் இது பங்களிப்பு வழங்கவில்லை.

செயற்திட்டத்தின் பிரகாரம், ஆசிரியர் சேர்ப்பு, நியமனம், பதவி உயர்வு மற்றும் இடம்மாற்றம் தொடர்பான போதியளவு, தெளிவான கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை அணுக முடியாமை என்பதனூடாக, அவை தொடர்பான தீர்மானங்கள் எழுமாற்றாக, அரிதான நிலைகளில் பக்கசார்பற்றவை, மற்றும்/அல்லது பெருமளவு அரசியல் ஊக்குவிப்புகளினூடாக அமைந்தவை என கருத முடியும்.[2] இது மோசமான ஆசிரியர் தரத்தில் பங்களிப்பு வழங்கியிருந்தது என பங்காளர்கள் கருதியிருந்ததுடன், வலுவிழந்த கல்விசார் வெளிப்பாடுகளுக்கு ஏதுவாக அமைந்ததாகவும் கருதினர்.[3] இதற்கு மேலும் உரமிடும் வகையில், அரசியலமைப்பில் கல்வி என்பது பகிர்ந்தளிக்கப்பட்ட விடயமாக அமைந்துள்ளது, எனவே ஒன்பது மாகாணங்களிலும் காணப்படும் மாகாண சபைகளினூடாக, மாறுபட்ட கொள்கைகளை உருவாக்க முடியும்.[4] போதியளவு ஒருநிலைப்படுத்தல் இன்மை, ஒத்திசைவான கொள்கை போன்றன ஆசிரியர்களிடையே தொடர்ச்சியற்ற தரங்கள் மற்றும் குழப்பங்கள் ஏற்பட காரணமாக அமைந்தன.[5]

இருந்த போதிலும், கடமைப்பொறுப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், தகவல் அணுகலில் எல்லையளவு மேம்பாடு மாத்திரமே பதிவாகியிருந்ததாக விழுது அமைப்பு உறுதி செய்திருந்தது.[6] கல்வி அமைச்சினால் ஆசிரியர் இடம்மாற்றக் கொள்கைகள் மூன்று மொழிகளிலும் அதன் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், சேர்ப்பு, நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற ஏனைய தரவுகள் மற்றும் நியமங்கள் காணப்படவில்லை. தகவல்களை பல்வேறு ஊடகங்களில் வெளிப்படுத்த அமைச்சு தவறியிருந்ததுடன், திறந்த தரவு வடிவத்தில் தகவல்களை வெளிப்படுத்தவும் தவறியிருந்தது.

பொது மக்கள் பங்கேற்பு தொடர்பில் எவ்வித மாற்றத்தையும் இந்த கடமைப்பொறுப்பு ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆசிரியர் நிர்வாகம் தொடர்பான செயன்முறைகளை மீளாய்வு செய்வதற்காக பல்துறைசார் பங்காளர் குழுவொன்றை கல்வி அமைச்சு நியமிக்கவில்லை, எனவே, தொடர்புடைய தீர்மானமெடுத்தல்கள் பற்றி பொது மக்களுக்கு தெரிவிப்பதற்கு வாய்ப்பை வழங்கியிருக்கவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்ததன் காரணமாக, IRM ஆய்வாளர் இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை பரிந்துரைக்கின்றார். குறிப்பாக, ஆசிரியர் சேர்ப்பு, நியமனம் மற்றும் பதவி உயர்வு தொடர்பான நியமங்கள் மற்றும் தரவுகளை பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கல்வி அமைச்சுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நியமங்கள் மற்றும் தரவுகள் போன்றன பல ஊடகங்கள் மற்றும் திறந்த தரவு வடிவத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும். அத்துடன், ஆசிரியர் நிர்வாகம் தொடர்பான செயன்முறைகள் பற்றி உள்ளடக்கமான மீளாய்வுகளை மேற்கொள்ள, சிவில் சமூகம் மற்றும் மாகாண சபைகளின் பிரதிநிதிகளுடன் பல்துறைசார் பங்காளர் ஆலோசனைகளை அமைச்சு முன்னெடுக்க வேண்டும்.

அதன் பின்னர், இந்த கடமைப்பொறுப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக 2016 – 2017 IRM மத்திய தவணை அறிக்கையில் பரந்தளவு பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இதில்: பாடசாலை ஆசிரியர்களின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்காக மையப்படுத்தப்பட்ட பொறிமுறையை வடிவமைத்தல் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களின் சேர்ப்பு, நியமனம், பதவி உயர்வு மற்றும் இடம் மாற்றம் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை பெற்றுக் கொண்டு அவற்றுக்கு பதிலளிப்பதற்கு மாகாண மற்றும் மத்திய நிலையில் பிணக்கு தீர்ப்பு பொறிமுறையை அறிமுகம் செய்தல் போன்றன அடங்கியுள்ளன.

---

1 See “Circulars – Teacher Transfer Unit” (Ministry of Education) http://www.moe.gov.lk/english/index.php?option=com_circular&view=circulars&Itemid=920.

2 Sarojini Kanendran (Viluthu, Centre for Human Resource Development) and Nandhini Wijayaratnam (Viluthu, Sri Lanka National Association of Counsellors), interview by IRM researcher, 26 September 2017.

3 N. Arunatillake, “Quality of Teachers Does Matter in Sri Lanka: Lessons from the Best Education Systems,” Talking Economics – Institute for Policy Studies (17 November 2014) http://www.ips.lk/talkingeconomics/2014/11/17/quality-of-teachers-do-matter-in-sri-lanka-lessons-from-the-best-education-systems/.

4 Viluthu conducted independent consultations in three districts toward consolidating the provincial policies and positions. Viluthu presented these findings to the Ministry of Education, but they were not taken up for further consideration. Maithreyi Rajasingam, Viluthu, interview by IRM researcher, 5 September 2018.

5 *Id.*

6 *Id.*

# கருப்பொருள் 3: தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information and Communication Technology)

## 5. அரசாங்க தகவல் நிலையம் (Government Information Center)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**உள்ளடக்கமான, வெளிப்படையான, பொறுப்புக்கூறலுடனான மற்றும் வினைத்திறனான ஆட்சிக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக அரசாங்க தகவல் நிலையத்தின் (GIC– 1919) சேவைகளை மேம்படுத்துதல்**

[…]

பிரதான குறிக்கோள்:

அரசாங்க தகவல் நிலையத்தின் (GIC) சேவைகளை மேம்படுத்தல் மற்றும் விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் அரசாங்க தகவல்களை அணுகலை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய ஊக்கியாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

மைல்கற்கள்:

- 5.1 GIC சேவைகளைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ளச்செய்வதற்கு பிரதேச செயலகங்கள், Nenasala / Telecentre வலையமைப்பு ஆகியவற்றை ஈடுபடுத்தி அவற்றின் முக்கிய தேவைகளை (உதாரணம். சர்வோதய ∴பியுஷனின் IT Yahamaga மற்றும் ICTAவின் ”ஸ்மார்ட் சமூக வட்டங்கள்”) மதிப்பிடுதல். ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒரு ஆய்வு அறிக்கையை உருவாக்கி, பகிரங்கமாக கிடைக்கச்செய்தல்.

- 5.2 அரசாங்க சேவைகளுடன் சம்பந்தப்பட்ட நிறுவன அறிவுத் தளங்களை அபிவிருத்தி செய்ய அரசாங்க முகவர் அமைப்புகளின் பிரதான புத்தாக்க அலுவலர்களுக்கு (CIOs) பயிற்சி, 5 தொடர்கள். ஒவ்வொரு அமர்விலும் அனைத்து முக்கிய அரசாங்க நிறுவனங்களையும் உள்ளடக்கி 50 CIO க்கள் பயிற்சியளிக்கப்பட வேண்டும், (அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் முக்கிய நியதிச்சட்ட அமைப்புகள் ஆகியவை. தேவைப்பட்டால், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் பயிற்சி விரிவாக்கப்படலாம்).

- 5.3 அரசாங்க தகவல் நிலையத்தின் கீழ் வரும் (GIC - 1919) அழைப்பு நிலையத்தினூடாக உள்வாங்கப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கையை 194 முதல் 250 வரையில் அதிகரித்தல், மேலும் இவ்வசதியின் மூலம் வழங்கப்படும் சேவைகளை பல்வகைப்படுத்தல் - உதாரணம். கோரிக்கைகளின் நிலையை கண்காணித்தல், பிரத்தியேகமான மின்னஞ்சல் பின்னூட்டல், குறுஞ் செய்திகள் மற்றும் சந்தாவின் அடிப்படையிலான சமூக ஊடகம் (2017 அளவில், ICTA வின் உதவியுடன் குறைந்தது நிறுவனங்களுக்கு 2 மேலதிக சேவை என்ற அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்).

- 5.4 GIC (www.gic.gov.lk) இன் சேவை தளத்தை மேம்படுத்துவதுடன், குடிமக்கள் சேவை அறுதிமொழி தகவலை (சேவைத்தரத்தில் மாற்றங்களை பிரதிபலிக்க ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அவர்களது உள் மற்றும் வெளி பங்குதாரர்களுடனான ஆலோசனையின் பிரகாரம் வெளியிடப்படும்) 10 பிரதான சேவைகளுக்கு (ICTA மூலம் GIC அழைப்புப் பதிவுகளைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்ட) மற்றும் குடிமக்களுக்கான SMS வசதி போன்றவற்றை மெருகேற்றம் செய்தல்.

- 5.5 அரசாங்கத்தின் முக்கிய பங்காளர்களுடன் (MTDI / ICTA / SLT), தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட திட்டத்தின் பங்களிப்பு பற்றிய இருப்புக் கணக்கெடுப்பு.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 5. அரச தகவல் நிலையம் | | | ✔ | | ✔ | | | ✔ | | ✔ | | | | ✔ | | | | ✔ | | | |
| | | | | | | | | | | | | | | ✔ | | | | | | | |

**பொறுப்பான நிறுவனம்:** தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு (MTDI)

**துணை நிறுவனங்கள்**: இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு முகவர் நிலையம் (ICTA); சர்வோதய ∴பியுஷன்

**ஆரம்ப திகதி:** ஜ"லை 2016 **முடிவு திகதி:** டிசம்பர் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

இந்த கடமைப்பொறுப்பினூடாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சேவைகளை மேம்படுத்துவது மற்றும் அரசாங்க தகவல் நிலையத்தை (GIC) குறிக்கும் அழைப்பு நிலையம் மற்றும் இணையத்தளம் ஆகியன தொடர்பான பொது மக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவது போன்றன இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன.[1] இந்த கடமைப்பொறுப்பினூடாக, பொது மக்களுக்கு பரந்தளவு அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பில் பயனுள்ள தகவல்கள் பலதை பெற்றுக் கொள்ளக்கூடிய மேம்படுத்தப்பட்ட வசதி ஏற்படுத்தப்படும் என பிரதான பங்காளர்கள் எதிர்பார்த்தனர்.[2]

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே பதிவு செய்திருந்தது. இதன் நடவடிக்கைகள் பிரதானமாக தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சினால் (MTDI) முன்னெடுக்கப்பட்டிருந்தன. மத்திய தவணை காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் தரப்பட்டுள்ளன:

- அரசாங்க தகவல் நிலையத்தின் (GIC) தேசிய செயற்படுத்தல் குழுவை மீள நிறுவுதல் (மைல்கல்: 5.1)
- 30 பிரதான அரச நிறுவனங்களின் CIO களுக்கு பயிற்சிப் பட்டறையை முன்னெடுத்தல் (மைல்கல்: 5.2)
- GIC அழைப்பு நிலையத்தின் வலையமைப்பை 320 நிறுவனங்களுக்கு அதிகரித்தல் (மைல்கல்: 5.3)
- சமூக ஊடகத்துக்கு இணைப்பை ஏற்படுத்தல் அடங்கலாக, GIC இனால் வழங்கப்படும் சேவைகள் மற்றம் வசதிகளை மேம்படுத்தல் (மைல்கல் 5.3) மற்றும்,
- GIC இணையத்தளத்தை மெருகேற்ற மீள வடிவமைப்பதற்கான விலைமனுக்கோரல்களை முன்னெடுத்தல் (மைல்கல்: 5.4).[3]

இவை அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும், இந்த கடமைப்பொறுப்புகளின் கீழான சகல மைல்கற்களும் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. உதாரணமாக, GIC சேவைகள் தொடர்பில் பொது மக்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சினால் கருத்தாய்வு ஒன்று முன்னெடுக்கப்படவில்லை (மைல்கல் 5.1); சேவை மெருகேற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன (மைல்கல் 5.3); சேவை சட்டகம் மீளமைப்பு செய்யப்படவில்லை (மைல்கல் 5.4); பொது மக்களின் சேவை அறுதிமொழி தகவல் மெருகேற்றப்படவில்லை (மைல்கல் 5.4); மற்றும் மேம்படுத்தப்பட்ட திட்டத்தின் இருப்பு கணக்கெடுப்பு இடம்பெறவில்லை (மைல்கல் 5.5).

மேலதிக தகவல்களுக்கு, 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பின் பூர்த்தி மட்டுப்படுத்தப்பட்டளவானதாக அமைந்திருந்தது.

மைல்கல் 5.1: MTDI இன் பிரகாரம், மீளமைக்கப்பட்ட தேசிய செயற்குழு GIC தொடர்பில் பொது மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பில் செயலாற்றியிருந்தது. சரியான பெறுமதிகளை

பெற்றுக் கொள்ள முடியாத போதிலும், GIC ஊடாக e–அரசாங்க சேவைகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் இதுவரையில் 9000க்கும் அதிகமான கிராமிய மக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.[4] தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பு (ICTA) தனது “ஸ்மார்ட் சமூக வட்ட” வலையமைப்பை மேலும் விஸ்தரித்து,[5] அதனூடாக தொடர்பான விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டிருந்தது. [6] MTDI இனால் போதியளவு ஊழியர்களின்மையை மேற்கோள்காட்டும் கருத்தாய்வு அறிக்கைகள் எதனையும் தயாரிக்கவில்லை.[7]

மைல்கல் 5.2: சிவில் சமூகத்தினால் உறுதி செய்யப்பட்டிருந்ததன் பிரகாரம், MTDI இனால் இரண்டு மேலதிக பயிற்சிப்பட்டறைகள் CIO களுக்கு தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. [8] செயற்திட்டத்தின் கீழ் பிரேரிக்கப்பட்டிருந்த இலக்கு வைக்கப்பட்ட ஐந்து திட்டங்களை விட இது இரண்டு குறைவானதாக அமைந்திருந்தது.

மைல்கல் 5.3: 2018 மே மாதமளவில், GIC வலையமைப்பு 320 நிறுவனங்களாக காணப்பட்டது[9] – மத்திய தவணையை தொடர்ந்து மேலதிக உள்ளடக்கங்கள் எதையும் கொண்டிருக்காமையை வெளிப்படுத்தியிருந்தது.

மைல்கல் 5.4: GIC சேவை சட்டகத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்டளவு, ஆனாலும் குறிப்பிடக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. GIC இணையத்தளம் [10] மற்றும் Facebook பக்கம் [11] ஆகியவற்றில் மேம்படுத்தல்களுக்கு மேலதிகமாக, இணையத்தளத்தில் தற்போது 290க்கும் அதிகமான அரச நிறுவனங்களின் தகவல்கள் காணப்படுவதாக MTDI குறிப்பிட்டிருந்தது. கடமைப்பொறுப்பைத் தொடர்ந்து இதில் பல அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த MTDI பிரதிநிதியினால் சரியான பெறுமதியை உறுதி செய்ய முடியவில்லை. [12] இந்த அறிக்கையிடப்பட்ட முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், இணையத்தளத்துக்கான அணுகல் என்பது தொடர்ச்சியாக பேணப்படவில்லை, அடிக்கடி இந்த இணையத்தளம் செயலிழந்திருப்பதையும் IRM ஆய்வாளர் அவதானித்திருந்தார்.

இணையத்தளத்தில் பொது மக்கள் சேவை அறுதிமொழி தகவல் மெருகேற்றப்படவில்லை என்பதை MTDI தெரிவித்திருந்தது.[13]

மைல்கல் 5.5: GIC அழைப்பு நிலைய முகாமைத்துவம் மற்றும் ICTA உடன் இணைந்து MTDI அடிக்கடி பின்னூட்டல்களை முன்னெடுத்திருந்த போதிலும், இந்த இருப்புக் கணக்கெடுப்பு அமர்வுகளில், தொழிற்சங்கங்கள் மற்றும்/அல்லது சிவில் சமூக அமைப்புகளின் பங்கேற்பு காணப்படவில்லை. இந்த கடமைப்பொறுப்பின் கீழ் முன்னேற்றத்துக்கு உதவிகளை வழங்கும் சிவில் சமூக அமைப்பான, சர்வோதய ∴பியுஷன் பிரதிநிதி ஒருவர் இதனை உறுதி செய்திருந்தார்.[14]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, இந்த கடமைப்பொறுப்பு பிரதானமாக e-அரசாங்க செயற்பாடாக அமைந்திருப்பதுடன், OGP அல்லது அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் பெறுமதிகளில் மட்டுப்படுத்தப்பட்டளவு தொடர்பை கொண்டுள்ளது.

தகவல் அணுகலை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கக்கூடிய இந்த கடமைப்பொறுப்பின் ஒரே பிரிவாக, அரசாங்க தகவல்கள் தொடர்பில் குடிமக்களின் தேவைகள் பற்றிய கருத்தாய்வு அமைந்திருந்திருக்கும். ஆனாலும், இது முன்னெடுக்கப்படவில்லை அல்லது வெளியிடப்படவில்லை. இதன் பெறுபேறாக, இந்த கடமைப்பொறுப்பு பொதுவில் தகவல் அணுகல் அல்லது அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் மேம்படுத்தலை ஏற்படுத்தவில்லை.

ஆனாலும், இந்த கடமைப்பொறுப்பை நிறைவேற்றுவதில் ஈடுபட்ட அரசாங்கத்தின் பிரதான பங்காளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியன அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையில் மட்டுப்படுத்தப்பட்டளவு தொடர்பை கொண்டிருந்த போதிலும், பொதுவில் ஆட்சியில் மேம்பாட்டை ஏற்படுத்த இந்த கடமைப்பொறுப்பு வழங்கியிருந்ததாக குறிப்பிட்டனர். குறிப்பாக, மேம்படுத்தப்பட்ட அரசாங்க தகவல் நிலையத்தினூடாக.[15]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. OGP அல்லது அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை பெறுமதிகளில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு தொடர்பை கொண்டுள்ளதன் காரணமாக இதை அடுத்த செயற்திட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டியதில்லை என IRM ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார்.

ஆனாலும், 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையில், ஏற்கனவே காணப்பட்ட மைல்கற்களை மீளமைப்பு செய்வதை IRM ஆய்வாளர் பிரேரித்திருந்தார். அரசாங்கத்திடம் காணப்படும் தகவல்களை அணுகுவதை மேம்படுத்துவதில் GIC சேவைகள் தொடர்பான பொது மக்களின் தேவைகளை கண்டறியும் ஆய்வின் அறிக்கையை நடைமுறைப்படுத்தி பிரசுரிப்பது பங்களிப்பு வழங்கியிக்கும். GIC உட்கட்டமைப்புக்கு இணைப்பைக் கொண்ட, இயக்க ஆற்றல் மிக்க மொபைல் அப்ளிகேஷன் ஒன்றை வடிவமைப்பது இந்த கடமைப்பொறுப்பில் மேலும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் எனும் மேலதிக பரிந்துரைகளையும் தன்னார்வ அடிப்படையில் ஆய்வாளர் வழங்கியிருந்தார்.

மேலதிக தகவல்களுக்கு, 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

[1] "Government Information Centre" (GIC, 2017) www.gic.gov.lk.
[2] Waruna Sri-Dhanapala (Ministry of Telecommunication and Digital Infrastructure), interview by IRM researcher, 16 October 2017 (taken from the multistakeholder interview involving representatives from the Information and Communication Technology Agency, the Ministry of Foreign Affairs, and Sarvodaya Fusion).
[3] Id; Isura Silva (Sarvodaya Fusion), interview by IRM researcher, 11 October 2017.
[4] Waruna Sri-Dhanapala, interview by IRM researcher, 26 September 2018.
[5] "ICTA Signs MoU with FITIS" (Daily News, 29 May 2017) http://bit.ly/2DfaELV.
[6] Sri-Dhanapala, interview.
[7] Id; Isura Silva (Sarvodaya Fusion), interview by IRM researcher, 13 September 2018.
[8] Sri-Dhanapala, interview.
[9] *Id.*
[10] "Government Information Centre" (GIC, 2017).
[11] "Government Information Centre of Sri Lanka - 1919" (Facebook, 2018) https://www.facebook.com/GovInfo1919/.
[12] Sri-Dhanapala, interview.
[13] Sri-Dhanapala, interview; Silva, interview.
[14] *Id.*
[15] *Id.*

# 6. திறந்த தரவுகளை ஊக்குவித்தல் (Promote Open Data)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**திறந்த தரவு எண்ணக்கருவை ஊக்குவித்தலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக பொது மக்களுக்கு நன்மைகளை வழங்கலும்**

அரசாங்கம் மற்றும் பொது மக்கள் இரண்டுக்குமான திறந்த தரவுகளின் அவசியம் திறந்த அரசாங்கப் பங்குடமையின் கீழ் சிறந்த முறையில் வரையறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், திறந்த தரவு பற்றிய எண்ணக்கருவானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபாயத்தினை பயன்படுத்துவதன் மூலம் பரந்தளவு பங்காளர்களுக்கு கடத்தப்படவேண்டியுள்ளது. மேலும், அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் எல்லைகளை வரையறுக்க வேண்டியுள்ளதுடன், எனவே, அரசாங்க கொள்கைக் பணிப்புரை மூலம் கட்டாயமாக துணையளிக்கப்படவேண்டிய தரவுப்பகுப்பாய்வுக்கான தரநிர்ணயமிக்க பொறிமுறையினையும் வரையறுப்பதற்கான தேவைப்பாடும் காணப்படுகின்றது. இதன் பிரதிபலனாக, அரசாங்கத்தின் வெளிப்படை கொள்கைகள், பங்காண்மையில் காணப்படும் ஏனைய நாடுகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப் போல, புத்தாக்கமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களினூடாக பொது மக்களை சென்றடைய வேண்டும்.

பிரதான குறிக்கோள்:

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தளங்களைப் பயன்படுத்தி திறந்த தரவுகளை ஊக்குவித்தலும், அதேபோன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் ஊடாக மக்கள் குறித்த நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதை உறுதிபடுத்தலும்.

மைல்கற்கள்:

- 6.1 வெவ்வேறு அரசாங்க முகவர்களினுடைய ஏற்கனவே கிடைக்கக்கூடியதான தரவுத் தொகுப்புக்களுடன் www.data.gov.lk எனும் இணையதளத்தை மறுசீரமைத்தல் (ICTA திட்டம் # 24 மூலம்).
- 6.2 அரசாங்க தகவல் தொகுப்புக்கள் மீதான பொது மக்களின் கேள்வி கணக்காய்வு (நெனசல / ஸ்மார்ட் சமூக வட்டங்கள்).
- 6.3 ICTA வினால் தயாரிக்கப்பட்ட வரைவினை அடிப்படையாக கொண்டு தரவுகள் மற்றும் சேவைகள் வகைப்படுத்தல் மீதான திறந்த ஆலோசனை (திறந்த தரவுகள் /தரவுப்பகிர்வுக் கொள்கைகளுடன்).
- 6.4 பல்வேறு அரச நிறுவனங்களின் நடைமுறையிலுள்ள 89 தரவுத் தொகுதிகளை மேம்படுத்தல் மற்றும் இதனை 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 200 இனாலும் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 500 இனாலும் அதிகரித்தல் (ICTA இனால்).

**பொறுப்பான நிறுவனம்:** தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு (MTDI)

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 6. திறந்த தரவு கோட்பாடு ஊக்குவிப்பு | | | ✔ | | ✔ | ✔ | | ✔ | | ✔ | | | | ✔ | | | | | ✔ | | |
| | | | | | | | | | | | | | | ✔ | | | | | | | |

**துணை நிறுவனம்**: இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு முகவர் நிலையம் (ICTA)

**ஆரம்ப திகதி**: ஜுலை 2016 **முடிவு திகதி**: ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

இந்த கடமைப்பொறுப்பு, ''திறந்த தரவு'' கொள்கை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டிருந்ததுடன், அதனூடாக தரவுகளை பொது மக்கள் அணுகலுக்கு மற்றும் பொது மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புகளிலமைந்த தரவுக் கட்டமைப்புகளை வசதியளித்தல் எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றிய தகவல்களை பொது மக்கள் பெற்று அவற்றை பின்பற்றி செயலாற்றுவதற்கு இந்த தரவுகளுக்கு கட்டுப்பாடுகளற்ற அணுகல் உதவியாகவும், செயற்படுத்தும் காரணியாகவும் அமைந்திருக்கும் என பங்காளர்கள் பிரேரித்தனர். இந்த அணுகல் ஊடாக சிவில் சமூகத்துக்கு விவாதம் மற்றும் வாதங்களில் ஈடுபட வழிகோலுவதுடன், தீர்மானம் மேற்கொள்வோருக்கு ஆதாரம்-வெளிப்படுத்திய தீர்மானமெடுத்தல்களில் ஈடுபட ஏதுவாக அமைந்திருக்கும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.[1]

இதை மேற்கொள்வதற்கு, கடமைப்பொறுப்பில் பின்வருவன குறிப்பிடப்பட்டுள்ளன:

- கிடைக்கும் தரவுகளைக் கொண்டு திறந்த தரவு இணையத்தளத்தை (www.data.gov.lk) மறுசீரமைப்பு செய்தல்
- அரசாங்க தரவுகள் பற்றி பொது மக்களின் கேள்வி தொடர்பில் கருத்தாய்வொன்றை முன்னெடுத்தல்

- ICTA இனால் தயாரிக்கப்பட்ட தரவு பகிர்வு கொள்கையின் பிரகாரம் தரவுகள் மற்றும் சேவைகள் வகைப்படுத்தல் பற்றி திறந்த ஆலோசனையை முன்னெடுத்தல் மற்றும்இ
- தற்போது காணப்படும் 89 தரவுக் கணங்களை 2018 ஜுலையில் 500 ஆக அதிகரிப்பது.

மேலதிக தகவல்களுக்கு, 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணைக் காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. 2017 ஆம் ஆண்டு மே மாதம், ICTA இனால் ஒன்லைன் இணையப் பக்கம் 80க்கும் அதிகமான தரவுக் கணங்களுடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டிருந்தது (மைல்கல் 6.1). [2] இந்த மறுசீரமைப்பின் அங்கமாக, புதிய உள்ளம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. இதில் புதிய தரவுக் கணங்களை பரிந்துரை செய்வதற்கான பாவனையாளர் தெரிவும் அடங்கியிருந்தது.; [3] இலகுவாக பார்வையிடலுக்காக தரவுக் கணங்களை குறிக்கும் குறிப்பீடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன; மற்றும் Facebook, Twitter மற்றும் LinkedIn போன்ற சமூக ஊடக பக்கங்களுக்கான இடுக்குகள் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. [4] இது குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், இந்த கடமைப்பொறுப்பின் கீழான ஏனைய மைல்கற்கள் நிலுவையில் காணப்பட்டன.

கருத்தாய்வை மேற்கொள்வதற்கான ஆலோசனையை கையகப்படுத்துவது பற்றிய செயன்முறையை MTDI ஆரம்பித்திருந்த போதிலும், பொது மக்கள் கேள்வி கருத்தாய்வை மத்திய தவணைக் காலப்பகுதியில் பூர்த்தி செய்திருக்கவில்லை (மைல்கல் 6.2). [5] அதுபோன்று, தரவு வகைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனை எதனையும் MTDI மேற்கொள்ளவில்லை என அரசாங்க மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் உறுதி செய்திருந்தனர் (மைல்கல் 6.3). ICTA இனால் தரவு பகிர்வு கொள்கை வரைவு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டு ஒன்லைன் தரவு கோர்ப்பில் பிரசுரித்திருந்தது.[6]

2017 டிசம்பர் மாதமளவில், ஒன்லைன் கோர்ப்பில் 89 பல்வகை தரவு கணங்கள் ஒன்பது பரந்த கருப்பொருள் பிரிவுகளில் காணப்பட்டன. (மைல்கல் 6.4). 2018 ஜுலை மாதத்தில் எய்தப்பட வேண்டும் என இலக்கு வைக்கப்பட்ட 500 ஐ நோக்கி எவ்வித அதிகரிப்புகளும் பதிவாகியிருக்காத நிலையில், கோர்ப்பில் பிரசுரிப்பதற்கு புதிய தரவு கணங்களை இனங்காண்பதாக அமைச்சு அறிவித்திருந்தது.[7]

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பின் பூர்த்தி மட்டுப்படுத்தப்பட்டளவாக பதிவாகியிருந்தது.

மைல்கல் 6.1: பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மைல்கல் 6.2: தவணை பூர்த்தியின் போது MTDI இனால் பொது மக்கள் கேள்வி தொடர்பான கருத்தாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கு காலம் மற்றும் வளங்கள் பற்றாக்குறை காரணங்களாக தெரிவிக்கப்பட்டிருந்தன.[8]

மைல்கல் 6.3: தவணை பூர்த்தியின் போது காணப்பட்ட தரவுகள் மற்றும் சேவைகள் வகைப்படுத்தல் தொடர்பாக திறந்த ஆலோசனையை MTDI மற்றும் ICTA ஆகியன இன்னமும் முன்னெடுத்திருக்கவில்லை.[9]

தேசிய தரவு பகிர்வு கொள்கை தொடர்பான வரைவு ஒன்லைன் தரவு கோர்ப்பில் காணப்பட்ட போதிலும், தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் இதனை உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. இலங்கையின் e-அரசாங்க கொள்கையின் இணைப்பாக இந்த கொள்கை அமைந்திருக்கும் என்பதுடன், பொது மக்களின் மீளாய்வுக்காக வழங்கப்படும் என MTDI குறிப்பிட்டிருந்தது.[10]

மைல்கல் 6.4: திறந்த தரவு கோர்ப்பில் 500 புதிய தரவு கணங்களை அறிமுகம் செய்யவும் அரசாங்கம் தவறியிருந்தது. MTDI இன் பிரகாரம், 2018 ஜுன் மாதமளவில் 118 தரவுக் கணங்கள் 11 பிரிவுகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.[11] திறந்த தரவுக் கணங்களுக்கு பொறுப்பான அரசாங்க அதிகாரிகள் பிரேரிக்கப்பட்டுள்ளதாக MTDI மேலும் குறிப்பிட்டிருந்ததுடன், மேலதிக ஆதாரங்கள் எதையும் வழங்கவில்லை. காணப்படும் தரவுக் கணங்களின் தரங்களை மீளாய்வு செய்வதற்கு உள்ளக மட்டத்தில் திறந்த தரவு செயலணியை நியமித்துள்ளதாகவும் MTDI அறிவித்துள்ளது.[12]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: எல்லையளவு**
**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

தகவல் அணுகல் மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றில் இந்த கடமைப்பொறுப்பினூடாக எல்லையளவு மேம்பாட்டுக்கு வழிகோலப்பட்டிருந்தது. ஆயினும், இதனூடாக பொது மக்கள் பங்கேற்பில் குறிப்பிடத்தக்களவு மேம்பாடு ஏற்படுத்தப்படவில்லை.

இந்த செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கையில் திறந்த தரவு என்பதை ஊக்குவிப்பது தொடர்பில் குறைந்தளவு அனுபவமே காணப்பட்டது. குறிப்பாக, ICTA அடங்கலாக பிரதான பங்காளர்களின் கருத்துப்படி, தரவுகளுடன் பொது மக்கள் ஈடுபாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகவும், எனவே, தரவுகளுக்கான திறந்த அணுகலினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.[13] "திறந்த தரவு" பாவனையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் இந்த கடமைப்பொறுப்பு கவனம் செலுத்தியிருந்தது.

இந்த கடமைப்பொறுப்பினூடாக, MTDI மற்றும் ICTA ஆகியன புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட தரவுக் கணங்களை திறந்த தரவு கோர்ப்பில் வெளியிட்டிருந்தன. சகல பங்காளர்களின் பிரகாரம், இதனால் அதிகளவு தரவுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், கோர்ப்புடன் ஈடுபாட்டை பேணுவதற்கான வாய்ப்பையும் மக்களுக்கு வழங்கியிருந்தது. மேலும், சிவில் சமூகத்தின் பரிந்துரையின் அடிப்படையில், தரவு வைத்திருப்போர் மற்றும் தரவு பயன்படுத்துவோரிடையே இடைமுகப்பை மேம்படுத்தும் வகையில் ICTA இனால் மேற்கொள்ளப்பட்டிருந்த புதிய உள்ளம்சங்களுடனான திறந்த தரவு கோர்ப்பு மறுசீரமைப்பு செயற்பாடுகள் அமைந்திருந்தன.[14] ஆனாலும், இணையத்தள விஜயம் பற்றிய புள்ளிவிவரங்களை

அரசாங்கம் அல்லது சிவில் சமூக பங்காளர்கள் வழங்கவில்லை, மேலும், MTDI இனால் மக்களின் கேள்விகள் பற்றிய கருத்தாய்வும் முன்னெடுக்கப்படவில்லை. 500 புதிய தரவு கணங்களை அறிமுகம் செய்யும் எனும் இலக்கை பூர்த்தி செய்ய MTDI தவறியிருந்தது. (2018 ஜூன் 12 ஆம் திகதி வரையில் 118 தரவுக் கணங்கள் மாத்திரமே பிரசுரிக்கப்பட்டிருந்தன). இதன் பெறுபேறாக, தகவல் அணுகலில் இந்த கடமைப்பொறுப்பு எல்லையளவு மேம்பாட்டை மாத்திரமே பதிவு செய்திருந்தது.

தரவு வகைப்படுத்தல் தொடர்பில் திறந்த ஆலோசனை பெற்றுக் கொள்வது என்பது, தீர்மானம் மேற்கொள்ளலில் மக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கான சிறந்த வாய்ப்பாக சிவில் சமூகம் கருதியிருந்தது.[15] ஆனாலும், அமைச்சு அல்லது ICTA இனால் தரவு வகைப்படுத்தல் தொடர்பில் பொது ஆலோசனை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை, இதனால் இந்த கடமைப்பொறுப்பினூடாக பொது மக்கள் பங்கேற்பும் மேம்படுத்தப்படவில்லை.[16]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. ஆனாலும், இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என IRM ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார். குறிப்பாக, ஆற்றல் வாய்ந்த, அணுகக்கூடிய தரவு கோர்ப்பு, பொது மக்களின் கேள்விகளை பூர்த்தி செய்யக்கூடிய பரிபூரணமாக திரட்டப்பட்ட தரவுக்கணங்கள் மற்றும் பகிரக்கூடிய தரவுகளை தெளிவாகவும், முறையாகவும் வகைப்படுத்தல் மற்றும் நீக்கல் போன்றன ஆற்றல் மிகுந்த மற்றும் வினைத்திறனான திறந்த தரவு ஆட்சிமுறையை உருவாக்கும் என்பதை ஆய்வாளர் வலியுறுத்தியுள்ளார்.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இந்த கடமைப்பொறுப்பினூடாக ஏற்படக்கூடிய நேர்த்தியான தாக்கங்களை வலிமைப்படுத்துவது பற்றிய பரிந்துரைகளை IRM ஆய்வாளர் வழங்கியிருந்தார். இவற்றில்: திறந்த தரவு கொள்கை தயாரிப்பில் அர்த்தமுள்ள வகையில் சிவில் பங்கேற்பை ஈடுபடுத்தல் மற்றும் அரசாங்க தரவு மற்றும் தரவு கோர்ப்புடன் பொது மக்களின் ஆழமான ஈடுபாட்டை பொதுவில் ஊக்குவித்தல் போன்றன அடங்கியிருந்தன.

---

1 Waruna Sri-Dhanapala (Ministry of Telecommunication and Digital Infrastructure), interview by IRM researcher, 16 October 2017; Isura Silva (Sarvodaya Fusion), interview by IRM researcher, 16 October 2017 (taken from the multistakeholder interview involving representatives from the Information and Communication Technology Agency, the Ministry of Foreign Affairs, and Sarvodaya Fusion).
2 Asanka Suraweera (ICTA) and Thilina Piyumal (ICTA), interview by IRM researcher, 16 October 2017 (taken from the multistakeholder interview involving representatives from the Information and Communication Technology Agency, the Ministry of Foreign Affairs, and Sarvodaya Fusion).
3 "Suggest a Dataset" (Open Data Portal of Sri Lanka, Information and Communication Technology Agency, 2 May 2017) http://www.data.gov.lk/suggest-data.
4 "Request Datasets"(Open Data Portal of Sri Lanka, Information and Communication Technology Agency, 2 May 2017) http://www.data.gov.lk/request-datasets.
5 Sri-Dhanapala, interview; Silva, interview.
6 "Resources" (Open Data Portal of Sri Lanka, Information and Communication Technology Agency, 2 May 2017) http://www.data.gov.lk/resources-list.
7 Sri-Dhanapala, interview.

[8] Waruna Sri-Dhanapala, interview by IRM researcher, 26 September 2018; Isura Silva (Sarvodaya Fusion), interview by IRM researcher, 13 September 2018.

[9] *Id.*

[10] Sri-Dhanapala, interview.

[11] *Id.*

[12] *Id.*

[13] Sri-Dhanapala, interview; Suraweera and Piyumal, interview.

[14] Sri-Dhanapala, interview; Silva, interview.

[15] Silva, interview.

[16] Sri-Dhanapala, interview; Silva, interview.

# கருப்பொருள் 4: சூழல் (Environment)

## 7. தேசிய சுற்றுச்சூழல் சட்ட திருத்தங்கள் (National Environmental Act Amendments)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**வெளிப்படையான சுற்றுச்சூழல் தீர்மானங்கள்: பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் மற்றும் பொதுமக்கள் கருத்துக்களுக்கு அரசாங்கத்தின் பொறுப்புக்கூறும் தன்மை போன்றவற்றில் பொது மக்களின் உரிமையை மீளமைத்தல்**

**(A) – தேசிய சுற்றுச்சூழல் சட்ட (NEA) திருத்தங்கள்**

[…]

பிரதான குறிக்கோள்:

சுற்றுச்சூழல் தீர்மானமெடுத்தல்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொது மக்கள் பங்கேற்பு மற்றும் பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் (IEE கள்) தொடர்பான பொது மக்கள் கருத்துரைகள் தொடர்பாக அரசாங்கத்தின் பொறுப்புக்கூறும் தன்மை போன்றவற்றை உறுதி செய்தல்.

மைல்கற்கள்:

- 7.1 NEA மற்றும் அதன் ஒழுங்குவிதிகளுக்கு பொருத்தமான திருத்தங்களை செய்வதற்கான தேவையை வலியுறுத்துவதற்கு MMDE அல்லது CEA உடன் ஒன்று அல்லது இரண்டு சந்திப்புகள் /கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

- 7.2 IEE செயற்பாட்டில் பொது மக்கள் பங்கேற்பினை மீளமைப்பதற்கும் IEE கள் மற்றும் EIA களில் பெறப்பட்ட பொதுக் கருத்துக்களுக்கு அரசாங்க பொறுப்புணர்வுகளை உறுதி செய்வதற்கும் NEA மற்றும் அதன் ஒழுங்குவிதிகளுக்கு திருத்தங்களை உருவாக்குதல். இந்த முயற்சியில் MMDE மற்றும் CEA க்கு PILF உதவ முடியும்.

- 7.3 NEA க்கான திருத்தங்கள் மற்றும் மேற்படி ஏற்பாடுகளுடனான விதிமுறைகள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படல்.

- 7.4 NEA க்கான திருத்தங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் CEA வினால் அமுல்படுத்தல்.

- 7.5 CEA அதன் EIA பிரிவு மற்றும் மாகாண கிளைகளை போதுமான ஊழியர்கள், தேவையான பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் பிற தேவையான வசதிகளுடன் வலுப்படுத்துவதன் மூலம் NEA க்கான மேலே குறிப்பிட்ட திருத்தங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு வசதியளிக்கவேண்டும்.

- 7.6 சம்பந்தப்பட்ட அரசாங்க முகவர்கள் மற்றும் பொது அதிகாரிகள் மத்தியில் விழிப்புணர்வு உருவாக்க பின்வரும் விடயங்கள் தொடர்பாக அண்ணளவாக. 3 பட்டறைகளை நடத்துதல்:
  (A) NEA க்கான திருத்தங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப பொதுமக்கள் கருத்துக்களுக்காக IEE கள் திறக்கப்பட வேண்டிய தேவை; மற்றும்;
  (B) அரசாங்க பொறுப்புக்கூறும் ஏற்பாடுகள்.

- 7.7 சிவில் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தகவல் பரவல்:
  (A) சிவில் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பாக அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சி மற்றும் வானொலியில் அண்ணளவாக. 24 நிகழ்ச்சிகள்: (i) NEA க்கான திருத்தங்கள் மற்றும் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப IEE கள் தொடர்பான ஏற்பாடுகளில் பொதுமக்கள் பங்கேற்பினை மீள் அறிமுகம்செய்தல் மற்றும் அது தொடர்பாக எவ்வாறு பயனுள்ள, பொறுப்பான கருத்துக்களை வழங்குவது; மற்றும்; (ii) அரசாங்க பொறுப்புகூறும் ஏற்பாடுகள்.
  (B) MMDE மற்றும் CEA இணையத்தளங்களினூடாக மேற்படி தகவல்களை பரப்புதல்.

**பொறுப்பான நிறுவனம்:** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (MMDE)

**துணை நிறுவனங்கள்**: மத்திய சூழல் அதிகாரசபை (CEA), பொது மக்கள் நலன் சட்ட மன்றம் (PILF)

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும். செயற்திட்டத்தில், வெவ்வேறு சமூக இந்த கடமைப்பொறுப்பு பல்வேறு சுற்றுச்சூழல் திருத்தங்களைச் சுற்றி மூன்று தனித்தனி மைல்கற்களைக் கொண்டுள்ளது. வாசிப்புத்தன்மையை மேம்படுத்த, IRM ஆய்வாளர் கடமைப்பொறுப்பு 8 மற்றும் 9 ஆகியவற்றின் ஒரு பகுதியாக மற்றைய மைல்கற்களை மதிப்பிட்டுள்ளார்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

இந்த கடமைப்பொறுப்பினூடாக, சுற்றுச்சூழல் சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதில் பொது மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் அரசாங்க பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்ய இலக்கு வைக்கப்பட்டிருந்தது. பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் (IEEs) தொடர்பில் பொது மக்களுக்கு கருத்துரைப்பதற்கான உரிமையை மீள நிறுவுவதனூடாகவும், IEEs மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIAs) தொடர்பில் பொது மக்களின் கருத்துரைப்புகளுக்கு பதிலளிப்பதில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதனூடாகவும் இதை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் (NEA) பொருத்தமான பிரிவுகளில் திருத்தத்தை மேற்கொள்வதை இது இன்றியமைததாக்கும்.[1]

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி (மத்திய தவணை / தவணை பூர்த்தி) | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 7. சேதிய சூழலியல் சட்டம் (NEA) | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | ✔ | | | |

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. NEA இல் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக CEA உடன் பல சந்திப்புகளையும் கலந்துரையாடல்களையும் சுற்றாடல் அமைச்சு முன்னெடுத்திருந்தது. (மைல்கல் 7.1). இந்த சந்திப்புகளினூடாக, NEA இல் மேற்கொள்ளப்படக்கூடிய மாற்றங்கள் அடங்கலாக விவரமான கருத்தமைவுக் குறிப்பொன்று உருவாக்கப்பட்டிருந்தது. IEE செயன்முறையில் பொது மக்களின் கருத்துரைப்பு மற்றும் IEE மற்றும் EIA செயன்முறைகளில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்கான ஒதுக்கங்களின் மீளஅறிமுகம் போன்றன இந்த திருத்தங்களில் அடங்கியிருந்தன.

எவ்வாறாயினும், மத்திய தவணை மதிப்பீட்டு காலப்பகுதியின் போது, திருத்த வரைவுகள் இறுதியாக்கப்படவில்லை, அல்லது பொது மக்கள் பார்வைக்கு வழங்கப்படவில்லை. (மைல்கற்கள் 7.2–7.7).[2] அமைச்சும் CEAஉம் தொடர்ச்சியாக ஆழமான ஆராய்வுகளை மேற்கொண்டிருந்ததுடன், NEAஇல் மேற்கொள்ளக்கூடிய மாற்று திருத்தங்கள் குறித்தும் கவனம் செலுத்தியிருந்தன. அமைச்சும் CEAஉம் திருத்தங்களை இறுதிப்படுத்தாததன் காரணமாக, கடமைப்பொறுப்பில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய எந்தவொரு ஐயப்பாடான செயற்பாடுகளும் மத்திய தவணை காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படவில்லை.

மேலதிக தகவல்களுக்கு, 2016-2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

பொது மக்கள் நலன் சட்ட மன்றத்தின் சிவில் சமூக பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், மத்திய தவணையின் பின்னர் இந்த கடமைப்பொறுப்பில் எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.[3]

மைல்கற்கள் 7.1–7.7: செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு, பொது மக்கள் கருத்துரைப்புக்கான ஒதுக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் போன்றவற்றை NEA க்கான திருத்த வரைவில் உள்ளடக்குவதற்கு சுற்றாடல் அமைச்சு முதலில் இணங்கியிருந்தது. ஆனாலும், நடைமுறைப்படுத்தும் இரண்டாவது ஆண்டில், திருத்த வரைவிலிருந்து இந்த ஒதுக்கங்களை நீக்குவதற்கு அமைச்சு தீர்மானித்திருந்தது. இதை மேற்கொள்வதற்கு முன்னர் இது பற்றி சிவில் சமூகத்திடமிருந்து ஆலோசனை பெறவோ அல்லது அறிவிக்கவோ இல்லை.[4] எஞ்சிய திருத்தங்கள் - அறிமுகம் செய்யப்பட வேண்டியவை – நாட்டின் சூழல் முகாமைத்துவதுடன் தொடர்பான ஒதுக்கங்களின் மெருகேற்றங்களை கோருவதாக அமைந்துள்ளன. இதற்கு முன்னர் NEA இன் மீதான திருத்தம் 2000 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாட்டில் துரிதமாக இடம்பெற்று வரும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பாதிப்பாக அமையக்கூடும் என அரசாங்கம் கருதியமையால் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டது என சிவில் சமூகம் தெரிவித்துள்ளது.[5]

கருத்துப் பெற்றுக்கொள்ளவதற்கு சுற்றாடல் அமைச்சு மற்றும்/அல்லது மத்திய சூழல் அதிகார சபையை தொடர்பு கொள்ள முடியவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

இந்த கடமைப்பொறுப்பு பின்பற்றப்பட்ட போது, சிவில் சமூகம் அதிகளவு கரிசனையை வெளிப்படுத்தியிருந்தது.[6] அதாவது, இலங்கையில் துரிதகதியில் அதிகளவு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையானது, சூழலில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என குறிப்பிட்டதுடன், அவற்றுக்கு அருகாமையில் வசிக்கும் பொது மக்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதாகும்.[7] சிவில் சமூக பங்காளர்களின் பிரகாரம், இந்த கடமைப்பொறுப்பினூடாக, அவ்வாறான கரிசனைகளை சீராக்குவதற்கு, பொது மக்களுக்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்கப்பட்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு எதிராக அல்லது சாதகமான வாதங்களை மேற்கொள்ள வழிகோலுவதாக அமைந்திருக்கும்.[8]

செயற்திட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் சார் தீர்மானங்கள் என்பது, பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகளில் (IEEs) தங்கியிருந்ததுடன், இவை பொது மக்களின் கருத்துரைப்புக்கான ஒதுக்கங்களை அல்லது அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை கொண்டிருக்கவில்லை. சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIAs) பொது மக்களின் கருத்துரைப்புகளை பெறுவதற்கான ஒதுக்கங்களை கொண்டிருந்தாலும், அவற்றுக்கு பதிலளிப்பதில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை தேவையாக கொண்டிருக்கவில்லை. விடயங்களை மேலும் கட்டமைப்பதானால், IEE மற்றும் EIA இடையே முறையற்ற தொடர்பு காரணமாக, பொது மக்களுக்கு தகவல் வழங்கப்படாமல் அல்லது சிறியளவிலான தகவல்களுடன் அபிவிருத்தித் திட்டங்கள் IEE ஊடாக அங்கீகரிக்கப்படலாம். இந்த கடமைப்பொறுப்பினூடாக, இந்த குறையை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டதுடன், அதற்காக தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொண்டு, அதில் பொது மக்களின் கருத்துரைப்புகளை உள்வாங்குவதற்கான ஒதுக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை கண்டிப்பாக்கல் போன்றன உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டது.

திருத்தங்களை தயாரித்து அனுமதி பெற்றுக் கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சூழல் அதிகாரசபை ஆகியன மேற்கொண்ட போதிலும், பிரேரிக்கப்பட்ட ஒதுக்கங்களான பொது மக்களின் கருத்துரைப்புகளை பெறல் மற்றும் அரசாங்கத்தின்

பொறுப்புக்கூறல் போன்றன நீக்கப்பட்டமையானது, தகவல் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஸ்தம்பித்திருந்தது. கடமைப்பொறுப்புக்கு முன்னதாக பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள் காணப்படாமையால், இந்த கடமைப்பொறுப்பினால் அரசாங்கத்தின் நிலையில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை.

இதன் அடிப்படையில், பொது மக்கள் பங்கேற்பும் மாற்றமடையவில்லை: நேர்த்தியான ஆரம்பநிலை முன்னேற்றம் பதிவாகியிருந்த போதிலும், பிரேரிக்கப்பட்ட ஒதுக்கங்களை அமைச்சு நீக்கியிருந்தமையானது, அர்த்தமுள்ள சுற்றுச்சூழல் தீர்மானம் மேற்கொள்ளலில் பொது மக்களின் பங்கேற்பை ஏற்படுத்தும் நடவடிக்கையில் நாட்டமின்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சராக இலங்கையின் ஜனாதிபதி பதவி வகித்திருந்த நிலையில், இந்த நடவடிக்கை மிகவும் இடர்பாட்டை ஏற்படுத்துவதாக சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தது.[9]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. தவணைப் பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்ததன் காரணமாகவும் - பிரதான பங்காளர்களின் குறைந்தளவு ஈடுபாட்டின் காரணமாகவும் இந்த கடமைப்பொறுப்பை நிறைவேற்றும் வழிமுறைகளை மீள கவனத்தில் கொள்ளுமாறு IRM ஆய்வாளர் பரிந்துரைத்துள்ளார்.

குறிப்பாக, இந்த கடமைப்பொறுப்பு தற்போதைய நிலையில் முன்னோக்கி கொண்டு செல்லப்படக்கூடாது என ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார். ஆனாலும், இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு, குறிப்பாக நிர்மாணத்துறைசார்ந்த, பொருளாதார வளர்ச்சி மூலோபாயம் போன்ற காரணங்களால், சுற்றாடல் அமைச்சு மற்றும் CEA ஆகியன இணைந்து பல்துறைசார் பங்காளர் ஆலோசகர்களுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, பொது மக்களின் கருத்துரைப்புகளின் முக்கியத்துவம் மற்றும் பெறுமதி தொடர்பில் மீளாய்வு செய்வது மற்றும் சுற்றாடல் தீர்மானமெடுத்தல்களில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய வேண்டுமென IRM ஆய்வாளர் பிரேரிக்கின்றார். இந்த ஆலோசனைகளில் பொது சுற்றாடல் முகவரமைப்புகள், சிவில் சமூக அங்கத்தவர்கள், சுற்றாடல் நிபுணர்கள் மற்றும் இதர சம்பந்தப்பட்ட பங்காளர்கள் அடங்கியிருக்க வேண்டும்.

மேலும், நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட சிவில் சமூக அங்கத்தவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், IEEs மற்றும் EIAs இடையே தெளிவான வழிமுறைகளை வடிவமைப்பதற்கு அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம் ஆகியன ஒன்றிணைந்து செயலாற்றலாம் என்றார்.[10] தற்போது, எந்த வகையான அல்லது அளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்கூட்டிய மதிப்பீடு தேவைப்படுகின்றது என்பது தொடர்பில் சிறிதளவிலான தெளிவுத் தன்மையே காணப்படுகின்றது.

[1] National Environmental Act, No. 47 of 1980 (as amended by Act No. 56 of 1988 and Act No. 53 of 2000).
[2] M. G. W. M. W. T. B Dissanayake (Ministry of Mahaweli Development and Environment), interview by IRM researcher, 23 October 2017.
[3] Mihiri Gunawardena (Public Interest Law Foundation), interview by IRM researcher, 20 September 2018.
[4] Gunawardena, interview.
[5] *Id.*
[6] Mihiri Gunawardena (Public Interest Law Foundation), interview by IRM researcher, 9 October 2017.
[7] M. Rodrigo, "Projects Endanger Remaining Forest Cover" (The Sunday Times, 8 January 2017) http://www.sundaytimes.lk/170108/news/projects-endanger-remaining-forest-cover-223191.html.
[8] Gunawardena (Public Interest Law Foundation), interview.
[9] Gunawardena, interview, 20 September 2018.
[10] *Id.*

## 8. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ சட்டத் திருத்தங்கள் (Coast Conservation and Coastal Resources Management Act Amendments)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**வெளிப்படையான சுற்றாடல் தீர்மானங்கள்: பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் மீது கருத்துத் தெரிவிப்பதற்கான பொது மக்களின் உரிமையினையும் பொதுமக்கள் கருத்துக்கள் மீதான அரசாங்க பொறுப்புக்கூறலினையும் மீளமைத்தல்**

**(B) – கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் சட்டத் (CCCRMA) திருத்தங்கள்**

[…]

பிரதான குறிக்கோள்:

வெளிப்படையான சுற்றுச்சூழல் தீர்மானமெடுத்தல்களில் பொது மக்களின் பங்கேற்பை உறுதி செய்தல் மற்றும் பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் (IEEs) பற்றிய பொது மக்கள் கருத்துரைப்புகள் மீதான அரசாங்க பொறுப்புக்கூறலினையும் உறுதிசெய்தல்.

மைல்கற்கள்:

- 8.1 CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்புடைய திருத்தங்களுக்கான தேவைக்கு ஆதரவு திரட்டுவதற்கு MMDE மற்றும் CCCRMD ஆகியவற்றுடன் ஒன்று அல்லது இரண்டு கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்.

- 8.2 IEE செயன்முறையில் பொது மக்கள் பங்கேற்பு பற்றிய ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கும் IEEகள் மற்றும் EIAகள் என்பன மீது கிடைக்கப்பெறும் பொது மக்கள் கருத்துரைகள் மீதான அரசாங்க பொறுப்புக்கூறலினை உறுதிசெய்வதற்கும் CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான திருத்தங்களை வரைதல். இம் முயற்சியில் CCCRMD க்கு PILF உதவலாம்.

- 8.3 மேற்குறித்த ஏற்பாடுகளுடன் CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுதல்.

- 8.4 CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்களை CCCRMD இன் மூலம் அமுலாக்கல்.

- 8.5 CCCRMD இன் EIA அலகினை போதிய ஊழியர்கள், தேவையான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய வேண்டப்படும் வசதிகள் போன்றவற்றைக் கொண்டு வலுப்படுத்துவதன் மூலம் CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான மேற்குறித்த திருத்தங்களின் அமுலாக்கத்தினை CCCRMD வசதிப்படுத்தல்.

- 8.6 பின்வருவன பற்றி தொடர்புடைய அரசாங்க முகவராண்மைகள் மற்றும் பகிரங்க அலுவலர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக அண்ணளவாக 03 பயிற்சிப்பட்டறைகள்:

  (A) CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தத்திற்கமைவாக IEE களை பொது மக்களின் கருத்துரைகளுக்காக திறந்து வைப்பதன் அவசியம்; மற்றும்;

  (B) அரசாங்க பொறுப்புக்கூறல் ஒதுக்கங்கள்.

- 8.7

  (A) (i) CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்களுக்கமைவாக IEEகள் மீதான பொது மக்கள் பங்கேற்பினை அறிமுகப்படுத்தல் மற்றும் அவ்விடயம் மீது ஆக்கபூர்வமான மற்றும் பொறுப்புமிக்க கருத்துக்களை எவ்வாறு மேற்கொள்வது; அத்துடன் (ii) அரசாங்க பொறுப்புக்கூறல் ஏற்பாடுகள் மீது சிவில் சமூகம் மத்தியில் விழிப்பூட்டலினை ஏற்படுத்துவதற்கு அரச தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் அண்ணளவாக 04 நிகழ்ச்சிகள்.

  (B) MMDE மற்றும் CCCRMD ஆகியவற்றின் இணையத்தளத்தினூடாக மேற்குறித்த தகவல்களை பரப்புதல்.

**பொறுப்பான நிறுவனம்:** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (MMDE)

**துணை நிறுவனம்**: கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் (CCCRMD)

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும். செயற்திட்டத்தில், வெவ்வேறு சமூக இந்த கடமைப்பொறுப்பு பல்வேறு சுற்றுச்சூழல் திருத்தங்களைச் சுற்றி மூன்று தனித்தனி மைல்கற்களைக் கொண்டுள்ளது. வாசிப்புத்தன்மையை மேம்படுத்த, IRM ஆய்வாளர் கடமைப்பொறுப்பு 7 மற்றும் 9 ஆகியவற்றின் ஒரு பகுதியாக மற்றைய மைல்கற்களை மதிப்பிட்டுள்ளார்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

கரையோர அபிவிருத்தி செயற்திட்டங்களில் பொது மக்கள் பங்கேற்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காக் கொண்டிருந்தது. பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் (IEEs) தொடர்பில் பொது மக்களுக்கு கருத்துரைப்பதற்கான உரிமையை மீள நிறுவுவதனூடாகவும், IEEs மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIAs) தொடர்பில் பொது மக்களின் கருத்துரைப்புகளுக்கு பதிலளிப்பதில் அரசாங்கத்தின்

பொறுப்புக்கூறலை உறுதி செய்வதனூடாகவும் இதை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. இது பிரதானமாக கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ சட்டத்தில் (CCCRMA) பொருத்தமான பிரிவுகளில் திருத்தத்தை மேற்கொள்வதை இன்றியமையாததாக்கும்.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை<br>தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 8. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ சட்ட திருத்தங்கள் (CCRMA) | | | | ✔ | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | ✔ | | | |

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. CCCRMA மற்றும் தொடர்புடைய ஒழுங்குபடுத்தல்களில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில், சுற்றாடல் அமைச்சு ஆரம்ப கட்ட, உள்ளக சந்திப்புகளை CCCRMD உடன் முன்னெடுத்திருந்தது (மைல்கல் 8.1).[1] IEE செயன்முறையில் பொது மக்களின் கருத்துரைப்பு மற்றும் IEE மற்றும் EIA செயன்முறைகளில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்கான ஒதுக்கங்களின் அறிமுகம் செய்வது போன்றவற்றில் திருத்தங்களை மேற்கொள்வது பற்றி இந்த கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டிருந்தன.[2]

எவ்வாறாயினும், PILF இன் பிரகாரம், இந்த ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள், திருத்தங்களை வரைவுக்குட்படுத்தும் நிலைக்கு முன்னேற்றம் கண்டிருக்கவில்லை (மைல்கற்கள் 8.2–8.7). அறிக்கை தயாரிக்கும் போது, திருத்தத்தில் உள்வாங்கப்பட வேண்டிய வேறு பிரச்சினைகள் குறித்த விடயங்களை CCCRMD சேகரித்த வண்ணமிருந்தது.[3] இதன் பெறுபேறாக, கடமைப்பொறுப்பில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய செயற்பாடுகள் மத்திய தவணைக் காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்படாத நிலையில் காணப்பட்டன.

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

கடமைப்பொறுப்பு 7 ஐப் போன்று, இந்த கடமைப்பொறுப்பும் மத்திய தவணை காலப்பகுதியைத் தொடர்ந்து எவ்விதமான முன்னேற்றத்தையும் பதிவு செய்யவில்லை.

மைல்கற்கள் 8.1–8.7: பொது மக்களின் கருத்துரைப்புகளுக்கான ஒதுக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் போன்றவற்றை உள்ளடக்குவது தொடர்பில் ஆரம்ப கட்ட கலந்துரையாடல்களின் போது தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. சிவில் சமூகத்தின் பிரகாரம், தொடர்புடைய ஒதுக்கங்களை திருத்த வரைவிலிருந்து நீக்குவதற்கு CCCRMD தீர்மானித்ததுடன், அதனூடாக மேலதிக முன்னேற்றங்களை நிறுத்தியிருந்தது. இதை மேற்கொள்வதற்கு முன்னர் அமைச்சு அல்லது CCCRMD இனால் இது பற்றி சிவில் சமூகத்திடமிருந்து ஆலோசனை பெறவோ அல்லது அறிவிக்கவோ இல்லை. [4] கரையோரப்பகுதியில் துரிதமாக இடம்பெற்று வரும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பாதிப்பாக அமையக்கூடும் என அரசாங்கம் கருதியமையால், திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் மீளப்பெற்றுக் கொண்டிருந்தது என சிவில் சமூகம் தெரிவித்துள்ளது.[5]

கருத்துப் பெற்றுக்கொள்ளவதற்கு சுற்றாடல் அமைச்சு அல்லது CCCRMD உடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

இந்த கடமைப்பொறுப்பு, தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் சுற்றாடல்சார் தீர்மானம் மேற்கொள்கையில் பொது மக்களின் கருத்துரைப்புகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் போன்றவற்றுக்கான ஒதுக்கங்களை உள்ளடக்கி திருத்தத்தை மேற்கொள்ளும் கடமைப்பொறுப்பு 7 ஐ பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

இந்த கடமைப்பொறுப்பு பின்பற்றப்பட்ட போது, சிவில் சமூகம் அதிகளவு கரிசனையை வெளிப்படுத்தியிருந்தது.[6] அதாவது, இலங்கையின் கரையோரப் பகுதிகளில் துரிதகதியில் அதிகளவு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையானது, கரையோரப்பகுதிகளின் இயற்கை அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த ஏதுவாக அமைந்திருந்ததுடன், இயற்கையான கரையோர சூழலின் படியிறக்கத்திற்கும் காரணமாக அமைந்திருந்தது.[7] சிவில் சமூக பங்காளர்களின் பிரகாரம், இந்த கடமைப்பொறுப்பினூடாக, அவ்வாறான கரிசனைகளை சீராக்குவதற்கு, பொது மக்களுக்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்கப்பட்டு கரையோர அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு எதிராக அல்லது சாதகமான வாதங்களை மேற்கொள்ள வழிகோலுவதாக அமைந்திருக்கும்.

செயற்திட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் சார் தீர்மானங்கள் என்பது, பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகளில் (IEEs) தங்கியிருந்ததுடன், இவை பொது மக்களின் கருத்துரைப்புக்கான ஒதுக்கங்களை அல்லது அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை கொண்டிருக்கவில்லை. சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIAs) பொது மக்களின் கருத்துரைப்புகளை பெறுவதற்கான ஒதுக்கங்களை கொண்டிருந்தாலும், அவற்றுக்கு பதிலளிப்பதில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை தேவையாக கொண்டிருக்கவில்லை. விடயங்களை மேலும் கட்டமைப்பதானால், IEE மற்றும் EIA இடையே முறையற்ற தொடர்பு காரணமாக, பொது மக்களுக்கு தகவல் வழங்கப்படாமல் அல்லது சிறியளவிலான தகவல்களுடன் அபிவிருத்தித் திட்டங்கள் IEE ஊடாக அங்கீகரிக்கப்படலாம். இந்த கடமைப்பொறுப்பினூடாக, இந்த குறையை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டதுடன், அதற்காக

CCCRMA, CCCRMP மற்றும் ஒழுங்குபடுத்தல்களில் திருத்தத்தை மேற்கொண்டு, அதில் பொது மக்களின் கருத்துரைப்புகளை உள்வாங்குவதற்கான ஒதுக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை கண்டிப்பாக்கல் போன்றன உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த கடமைப்பொறுப்பு முழுமையாக செயற்படுத்தப்படவில்லை என்பதுடன், தகவல் அணுகலில் அவதானிக்கத்தக்க முன்னேற்றமும் பதிவாகியிருக்கவில்லை. சுற்றாடல் அமைச்சு மற்றும் CCRMD ஆகியவற்றுக்கிடையே பொது மக்களின் கருத்துரைப்புகளை உள்வாங்குவதற்கான ஒதுக்கம் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் போன்றவற்றை ஆட்சிசட்டத்தில் உள்வாங்குவதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக அரசாங்க மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் உறுதி செய்திருந்தனர்.[8] ஆனாலும், இந்த பிரதான பிரேரிக்கப்பட்ட ஒதுக்கங்களை திருத்தங்களிலிருந்து நீக்கியிருந்தமையினால், பொது மக்களின் தகவல் அணுகலை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் செயற்பாட்டில் எவ்விதமான மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

இதன் அடிப்படையில், பொது மக்கள் பங்கேற்பும் மாற்றமடையவில்லை. பிரேரிக்கப்பட்ட ஒதுக்கங்களை அமைச்சு நீக்கியிருந்தமையானது, அர்த்தமுள்ள சுற்றுச்சூழல் தீர்மானம் மேற்கொள்ளலில் பொது மக்களின் பங்கேற்பை ஏற்படுத்தும் நடவடிக்கையில் நாட்டமின்மையை வெளிப்படுத்தியிருந்தது.[9]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. கடமைப்பொறுப்பு 7 ஐப் போன்று, கடமைப்பொறுப்பு 8 இலும் மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தி எய்தப்பட்டிருந்தது. பிரதான பங்காளர்களின் குறைந்தளவு ஈடுபாட்டை தவணை பூர்த்தியில் அவதானிக்க முடிந்தது. எனவே, இந்த கடமைப்பொறுப்பை நிறைவேற்றும் வழிமுறைகளை மீள கவனத்தில் கொள்ளுமாறும், தற்போதைய நிலையில் முன்னோக்கி கொண்டு செல்லப்படக்கூடாது IRM ஆய்வாளர் பரிந்துரைத்துள்ளார்.

எவ்வாறாயினும், கடமைப்பொறுப்பு 7 உடன், சுற்றாடல் அமைச்சு மற்றும் CCCRMD ஆகியன இணைந்து பல்துறைசார் பங்காளர் ஆலோசகர்களுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, பொது மக்களின் கருத்துரைப்புகளின் முக்கியத்துவம் மற்றும் பெறுமதி தொடர்பில் மீளாய்வு செய்வது மற்றும் சுற்றாடல் தீர்மானமெடுத்தல்களில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய வேண்டுமென IRM ஆய்வாளர் பிரேரிக்கின்றார். அத்துடன், IEEs மற்றும் EIAs இடையே தெளிவான வழிமுறைகளை வடிவமைப்பதற்கு ஒன்றிணைந்து செயலாற்றலாம் எனவும் பரிந்துரைத்துள்ளார்.[10]

---

1 M. G. W. M. W. T. B Dissanayake, interview by IRM researcher, 23 October 2017.

2 *Id.*

3 Mihiri Gunawardena (Public Interest Law Foundation), interview by IRM researcher, 9 October 2017.

4 Mihiri Gunawardena (Public Interest Law Foundation), interview by IRM researcher, 20 September 2018.

5 *Id.*

6 K. Kumarasignhe, "Port City Project: Development or Disaster" (The Daily Mirror, 5 December 2016) http://www.dailymirror.lk/article/Port-City-Project-Development-or-disaSter-120208.html.

7 "About Us" (Overview, Coast Conservation and Coastal Resource Management Department, 2015) http://www.coastal.gov.lk/index.php?option=com_content&view=article&id=109&Itemid=57&lang=en.

8 Gunawardena, interview, 9 October 2017; Dissanayake, interview.

9 Gunawardena, interview, 20 September 2018.

10 *Id.*

## 9. உயிரினத் தொகுதி மற்றும் தாவர இனத் தொகுதி பாதுகாப்பு கட்டளைச் சட்டமும் வட மேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டத் திருத்தங்களும் (Fauna and Flora Protection Ordinance and North Western Province Environmental Statute Amendments)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**வெளிப்படையான சுற்றாடல் தீர்மானங்கள்: பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் மீது கருத்துத் தெரிவிப்பதற்கான பொது மக்களின் உரிமையினையும் பொது மக்கள் கருத்துக்கள் மீதான அரசாங்க பொறுப்புக்கூறலினையும் மீளமைத்தல்.**

**(C) – உயிரினத் தொகுதி மற்றும் தாவர இனத் தொகுதி பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (FFPO) மற்றும் வட மேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டத் (NWPES) திருத்தங்கள்**

[…]

பிரதான குறிக்கோள்:

பூர்வாங்க சுற்றாடல் பரிசோதனைகள் (IEEs) மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் (EIAs) மீதான பொதுமக்கள் கருத்துக்கள் மீது அரசாங்க பொறுப்புக்கூறலினை உறுதி செய்தல்.

மைற்கற்கள்:

- 9.1 பூர்வாங்க கலந்துரையாடல்கள் : FFPO மற்றும் NWPES அத்துடன் அதன் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்புடைய திருத்தங்களுக்கான அவசியத்திற்கு ஆதரவு திரட்டுவதற்கு DWLC மற்றும் NWPEA என்பன ஒவ்வொன்றுடனும் ஒன்று அல்லது இரண்டு கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்.

- 9.2 FFPO மற்றும் NWPES மீது வரையப்பட்ட திருத்தங்கள் : IEEகள் மற்றும் EIAகள் மீது கிடைக்கப்பெறும் பொது மக்களின் கருத்துக்களின் மீதான அரசாங்க பொறுப்புக்கூறலினை உறுதி செய்வதற்கு FFPO மற்றும் NWPES அத்துடன் அதன் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்களை வரைதல். இம் முயற்சியில் DWLC மற்றும் NWPEA என்பவற்றுக்கு PILF உதவியளிக்கலாம்.

- 9.3 FFPO மற்றும் NWPES திருத்தங்களை நிறைவேற்றுதல் : மேற்குறித்த ஏற்பாடுகளுடன் கூடிய FFPO மற்றும் NWPES மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்களை பாராளுமன்றத்தினாலும் வடமேல் மாகாண சபையினாலும் நிறைவேற்றுதல்.

- 9.4 அமுலாக்கல்: FFPO மற்றும் NWPES அத்துடன் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்களை DWLC மற்றும் NWPEA என்பற்றின் மூலம் அமுல்படுத்தல்.

- 9.5 DWLC மற்றும் NWPEA வசதிப்படுத்தல் : அதன் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பிரிவினை போதிய ஊழியர்கள், அவசியமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய வேண்டப்படும் வசதிகளைக் கொண்டு வலுப்படுத்துவதன் மூலம் FFPO மற்றும் NWPES அத்துடன் ஒழுங்குவிதிகளுக்கான மேற்கூறப்பட்ட திருத்தங்களின் அமுலாக்கத்தினை DWLC மற்றும் NWPEA வசதிப்படுத்தல்.

- 9.6 அரசாங்க விழிப்புணர்வூட்டல் பயிற்சிப்பட்டறைகள்: அரசாங்க பொறுப்புக்கூறல் ஏற்பாடுகள் பற்றி தொடர்புடைய அரசாங்க முகவராண்மைகள் மற்றும் அரசாங்க அலுவலர்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டல் ஏற்படுத்துவதற்காக சுமார் 03 பயிற்சிப்பட்டறைகள்.

- 9.7 சிவில் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் தகவல் பரப்புதலும்:

  (A) FFPO மற்றும் NWPES என்பனவற்றில் அரசாங்க பொறுப்புக்கூறல் பற்றிய பகிரங்க விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்காக அரச தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் 04 நிகழ்ச்சிகள்.

  (B) மேற்கூறப்பட்ட தகவல்களை DWLC மற்றும் NWPEA என்பவற்றின் இணையத்தளங்களினூடாக பரப்புதல்.

**பொறுப்பான நிறுவனங்கள்:** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு;[1] மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (MMDE) மற்றும் வட மேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை (NWPEA)

**துணை நிறுவனம்**: வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் (DWLC)

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஜுலை 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும வாசிப்புத்தன்மையை மேம்படுத்த, IRM ஆய்வாளர் கடமைப்பொறுப்பு 7 மற்றும் 8 ஆகியவற்றின் ஒரு பகுதியாக மற்றைய மைல்கற்களை மதிப்பிட்டுள்ளார்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

சூழல்சார் தீர்மானமெடுத்தல்களில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டிருந்தது. IEE மற்றும் EIA செயன்முறையில் பொது மக்களின் கருத்துரைப்புக்கு அரசாங்கத்தின் பதிலளிப்புகளை ஆணைப்படுத்துவதனூடாக இதை மேற்கொள்ள எதிர்பார்த்தது. இதற்கமைய, பொருத்தமான ஒதுக்கங்களின் கீழ் பின்வருவனவற்றில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டியிருக்கும்: (1) உயிரினத் தொகுதி மற்றும் தாவர இனத் தொகுதி பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (FFPO)[2] வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் (DWLC) பிரதான மேற்பார்வையின் கீழ் காணப்படுவது; மற்றும் (2) வட மேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம்

(NWPES)[3] வட மேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் (NWPEA) பிரதான மேற்பார்வையின் கீழ் காணப்படுவது.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 9. FFPO மற்றும் NWPEA | | | | ✔ | ✔ | ✔ | | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | | |
| | | | | | | | | | | | | | ✔ | | | | | | | | |

**நிலை**

**மத்திய தவணை: ஆரம்பிக்கப்படவில்லை**

இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மத்திய தவணை காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படவில்லை (மைல்கற்கள் 9.1–9.7). பொது மக்கள் நலன் சட்ட மன்றம் (PILF) சட்டம் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு பங்காளர்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அதற்கு மேலும் திருத்தங்கள் அவசியமில்லை எனவும் PILF ஊகம் வெளியிட்டிருந்தது. தற்போது அமுலிலுள்ள சட்டத்தில் பொது மக்கள் கருத்துரைப்புக்கான ஒதுக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் PILF குறிப்பிட்டிருந்தது.[4]

**தவணை பூர்த்தி: ஆரம்பிக்கப்படவில்லை**

மைல்கற்கள் 9.1–9.7: சிவில் சமூகத்தின் பிரகாரம், இரு சட்டங்களில் (FFPO அல்லது NWPES) அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்கான ஒதுக்கங்களை உள்ளடக்கும் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் தொடர்ச்சியாக எவ்வித முன்னேற்றங்களும் காணப்படவில்லை.[5]

கருத்துப் பெற்றுக்கொள்ளவதற்கு சுற்றாடல் அமைச்சு, DWLC அல்லது NWPEA உடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

செயற்திட்டத்தின் பிரகாரம், FFPO மற்றும் NWPEA உடன் தொடர்புடைய சூழல்சார் தீர்மானங்களில் பொது மக்களின் கருத்துரைப்புகளுக்கு அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்கான ஒதுக்கங்கள் காணப்படவில்லை. NEA மற்றும் CCCRMA போலன்றி, இந்த சட்டங்களில் பொது மக்களின் கருத்துரைப்புகளுக்கான சட்டபூர்வ ஒதுக்கங்கள் காணப்பட்டன. ஆனாலும், இந்த கடமைப்பொறுப்பு நிறைவேற்றுவது ஆரம்பிக்கப்படாத நிலையில், அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தியிருக்கவில்லை. குறிப்பாக, இந்த கடமைப்பொறுப்பின் பெறுபேறாக தகவல் அணுகல் அல்லது பொது மக்கள் பங்கேற்பில் எவ்வித மாற்றங்களையும் ஏற்பட்டிருக்கவில்லை.

தீர்மானமெடுத்தல்களில் அரசாங்க பொறுப்புக்கூறலை அறிமுகப்படுத்துவதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டிருந்த போதிலும், திருத்தங்களின் மீதான உள்ளடக்கம் இறுதியாக்கப்படும் வரையில், குறித்த பொறிமுறை தெளிவற்றதாக அமைந்திருந்தது. பங்காளர்கள் மத்தியிலான பூர்வாங்க கலந்துரையாடல்கள் மற்றும் தொடர்புடைய திருத்தங்களை வரைவது போன்றன அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் ஒதுக்கங்களை அறிமுகப்படுத்துவதை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளாக அமைந்துள்ளன.[6]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. கடமைப்பொறுப்புகள் 7 மற்றும் 8 இல் காணப்படும் சட்ட விதிமுறைகளை போலன்றி, FFPO மற்றும் NWPEA போன்றன ஏற்கனவே பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வது பற்றிய ஆணையைக் கொண்டுள்ளன. ஆனாலும், பொது மக்களின் கருத்துரைப்புகள் தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலில் திருத்தங்களை மேற்கொள்வதில் பங்காளர்கள் மட்டுப்படுத்தப்பட்டளவு முன்னேற்றத்தை பதிவு செய்திருந்தமை காரணமாக, இந்த கடமைப்பொறுப்பும் மீளமைக்கப்பட்ட வழிமுறையை கொண்டிருக்க வேண்டும்.

இது தொடர்பில், சுற்றாடல் அமைச்சு, DWLC, NWPEA மற்றும் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு ஆகியன அடங்கலாக சகல பிரதான பங்காளர்களும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு ஒன்றுகூடுமாறு IRM ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார். a) பொது மக்கள் கருத்துரைப்பு தொடர்பில் அரசமைப்பு ஒதுக்கங்களின் பொறுப்புகளை அமுலாக்குவது, மற்றும் b) பொது மக்களின் கருத்துரைப்புகளுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டியதன் முக்கியத்துவம். இந்த கலந்தாலோசனைகளில் உள்ளார்ந்த வழிமுறைக்காக பொது சூழல் முகவர் அமைப்புகள், சிவில் சமூக அங்கத்தவர்கள், சூழல் நிபுணர்கள் மற்றும் இதர பொருத்தமான பங்காளர்களை கொண்டிருக்கலாம்.

[1] The Ministry of Sustainable Development and Wildlife (MSDW) was established under the Extra Ordinary Gazette Notice 1933/33, dated 21 September 2015, and thus, postdates the formulation of this commitment. As the Department of Wildlife Conservation is an institution that falls directly under the purview of the new ministry, the MSDW is introduced as one of two institutions primarily responsible for this commitment.

[2] Fauna and Flora Protection Ordinance, No. 2 of 1937 (as amended by Acts No. 44 of 1964, No. 1 of 1970, No. 49 of 1993, and No. 22 of 2009), http://www.dwc.gov.lk/documents/FFPO.pdf and http://www.dwc.gov.lk/documents/ordinanceeng.pdf.

[3] North Western Province Environmental Statute, No. 12 of 1990 (as amended by Statute No. 2 of 1999).

[4] Mihiri Gunawardena (Public Interest Law Foundation), interview by IRM researcher, 9 October 2017.

[5] Mihiri Gunawardena (Public Interest Law Foundation), interview by IRM researcher, 20 September 2018.

[6] *Id.*

# கருப்பொருள் 5: உள்ளூராட்சி (Local Government)

## 10. உள்ளூராட்சி சபைகளுக்கான கொள்முதல் முறைமை (Procurement System for Local Authorities)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**இலங்கை உள்ளூராட்சி சபைகளுக்கான வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கொள்முதல் முறைமை (A)**

[…]உள்ளூராட்சி சபைகளால் வழங்கப்படும் சேவைகளுக்கு, மத்திய மற்றும் / அல்லது மாகாண அரசாங்கங்களிலிருந்து அல்லது உள்ளூராட்சி சபையால் திரட்டப்படும் வருமானத்திலிருந்து மாற்றப்படுவதன் மூலம் நிதியளிக்கப்படுகின்றன. அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொதுவான முறையில் அமைந்த முறைமையினால் உள்ளூர் அரசாங்கங்களின் கொள்முதல் நடைமுறை பொதுவாக வழிநடத்தப்படுகிறது. இருப்பினும், வேறுபாடு என்னவென்றால் உள்ளூர் அதிகாரசபைகள் ஒரு சட்டபூர்வமான அடையாளம் மற்றும் ஒரு சுயாதீன பிரிவின் அந்தஸ்தை கொண்ட சட்டபூர்வமாக கூட்டிணைக்கப்பட்ட அமைப்புகளாகும், எனவே கொள்முதல் நடைமுறைகள் மேற்பார்வை செய்யப்படவும் வழிநடத்தப்படவும் மாத்திரமே முடியும் என்பதுடன், கட்டாயப்படுத்தப்பட்டு அமுலாக்கப்பட முடியாது.

அரசியலமைப்பின் 19வது திருத்தச் சட்டத்தின் XIXB அத்தியாயத்திற்கு அமைவாக, “கொள்முதல் ஆணைக்குழு” ஒன்று நிறுவப்பட்டது. அதன்படி உட்கூறு இலக்கம் 156 (H) க்கு அமைவாக அரசாங்க நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு, ஆலோசனை சேவைகள் மற்றும் தகவல் அமைப்புகள் என்பனவற்றிற்காக நியாயமான சமத்துவமான வெளிப்படையான போட்டித்தன்மையுள்ள பயனுள்ள நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை வகுக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, மற்றும் இதுபோன்ற வழிகாட்டல்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகி முன்று மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஏதுவாக உள்ளது.

பிரதான குறிக்கோள்:

உள்ளூராட்சி சபைகளுக்கு (கொள்முதல் வழிகாட்டல்களை தயாரிப்பது மற்றும் பிரசுரிப்பது) ஒரு வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறும் கொள்முதல் முறைமையை உருவாக்குதல்.

மைல்கற்கள்:

- 10.1 மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு FSLGA வழங்கிய வழிகாட்டல்கள், கொள்முதல் ஆணைக்குழு, FSLGA மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்றினால் மீளாய்வு செய்யப்படுகின்றன

- 10.2 மீளாய்வு செய்யப்பட்ட கொள்முதல் வழிகாட்டல்களுக்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல்

- 10.3 இறுதி வழிகாட்டல்கள் தொடர்பாக “கொள்முதல் ஆணைக்குழு” மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல்

- 10.4 சம்பந்தப்பட்ட கொள்முதல் வழிகாட்டல்களை வர்த்தமானியில் பிரசுரமாக்கி பாராளுமன்றத்தில் அதற்கான ஒப்புதலை பெறுதல்

- 10.5 அரசாங்கம் கொள்முதல் வழிகாட்டல்களை வெகுஜன மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக பிரச்சாரப்படுத்தி, உள்ளூராட்சி அதிகார சபைகள்/ மன்றங்களில் அதன் பிரதிகள் பொது மக்களுக்கு கிடைக்கச்செய்தல்

- 10.6 அச்சிடுதலும் மன்றங்களுக்கு விநியோகித்தலும்

- 10.7 அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தல். (உள்ளூர் நிர்வாகத்துக்கான இலங்கை நிறுவனத்துடன் இணைந்து)

- 10.8 இணையத்தளங்கள் மூலமும் அனைத்து உள்ளூராட்சி அலுவலகங்களில் உள்ள காட்சி பலகைகள் மூலமாகவும் வழிகாட்டல்களை பகிரங்கமாக பரப்புதல்

**பொறுப்பான நிறுவனங்கள்:** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MPCLG) மற்றும் கொள்முதல் ஆணைக்குழு

**துணை நிறுவனங்கள்**: உள்ளூராட்சி சபைகள், இலங்கை உள்ளூராட்சி சபைகளின் பேரவை (FSLGA)

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

உள்ளூராட்சி சபைகளுக்கு வெளிப்படையான கொள்முதல் கட்டமைப்பொன்றை அறிமுகம் செய்வதனூடாக, முறைகேடுகள் மற்றும் மோசடிகளை கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. குறிப்பாக, உள்ளூராட்சி சபைகளுக்கு சீரான கொள்முதல் கட்டமைப்பு ஒன்றுக்கான வழிகாட்டல்களை தயாரித்து வெளியிடுவதை இந்த கடமைப்பொறுப்பு கவனத்தில் கொண்டிருந்தது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டது**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. ஏற்கனவே காணப்படும் கொள்முதல் தொடர்பான ஆவணங்கள் மற்றும் வழிமுறைகள் பற்றி மீளாய்வு செய்ய, 2016 செப்டெம்பர் மாதத்தில், 12 அங்கத்தவர்களை கொண்ட பல்துறைசார் பங்காளர் குழுவொன்றை நியமித்தது (மைல்கல் 10.1). இந்தக் குழுவில் MPCLG, மாகாண

உள்ளூராட்சி ஆணையாளர்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் இலங்கை உள்ளூராட்சி சபைகளின் பேரவை (FSLGA) அடங்கலாக சிவில் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கியிருந்தனர்.

செயன்முறைகள் வரைவின் போது, தேசிய மட்டத்தில் நிலவும் கொள்முதல் வழிகாட்டல்களுடன் உள்ளூராட்சி சபைகளையும் இணைப்பதற்கு கொள்முதல் ஆணைக்குழு ஆர்வமாக இருப்பதை வெளிப்படுத்தியிருந்தது.[2] வழிகாட்டல் வரைவை மீளாய்வு செய்யும் போது, இரு மட்டத்திலும் பின்பற்றப்படும் கொள்முதல் செயன்முறைகளில் முரண்பாடுகள் காணப்படுவதை ஆணைக்குழு இனங்கண்டிருந்ததுடன், எதிர்கால தேசிய வழிகாட்டல்களின் கீழ் உள்ளூராட்சி சபைகளுக்கென பிரத்தியேகமான ஒதுக்கங்களை அறிமுகம் செய்ய உடன்பட்டது.[3] ஆனாலும், வழிகாட்டல்கள் முறையாக அறிமுகம் செய்யப்படாததன் காரணமாக, இந்த கடமைப்பொறுப்பு மத்திய தவணையின் பின்னர் எவ்வித முன்னேற்றங்களையும் பதிவு செய்ய முடியாமலிருந்தது. (மைல்கற்கள் 10.2–10.8).

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி (மத்திய தவணை / தவணை பூர்த்தி) | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 10. உள்ளூராட்சி மன்றங்களுக்கான கொள்முதல் முறைமை | | | | ✔ | ✔ | ✔ | | ✔ | | ✔ | | | | ✔<br>✔ | | | | | ✔ | | |

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணைப் பூர்த்தியின் போது இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தி நிலையில் காணப்பட்டது.

மைல்கற்கள் 10.1–10.2: FSLGA இன் பிரதிநிதிகளின் பிரகாரம், MPCLG இனால் கொள்முதல் ஆணைக்குழுவுக்கு வழிகாட்டல்கள் வரைவு சமர்ப்பிக்கப்பட்டு, அந்த ஆணைக்குழு அதனை மீளாய்வு செய்து சிறியளவிலான திருத்தங்களுடன் 2017 டிசம்பர் மாதம் அங்கீகரித்திருந்தது.[4] 2018 மே மாதத்தில் பிரிதொரு தேசிய கொள்முதல் வழிகாட்டல்களை கொள்முதல் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இவை கொள்முதல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்ததுடன், மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றன.[5]

மைல்கற்கள் 10.3–10.8: தவணைப் பூர்த்தியின் போது பாராளுமன்றம் மற்றும் கொள்முதல் ஆணைக்குழுவினால், உள்ளூராட்சி சபைகளுக்கான வழிகாட்டல்கள் அனுமதிக்கப்பட்டு,

வெளியிடப்பட்டு மற்றும் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. FSLGAஇன் பிரகாரம், பாராளுமன்றத்தின் அனுமதிக்கு வழிகாட்டல்களை சமர்ப்பிப்பது கொள்முதல் ஆணைக்குழுவின் பிரதான பொறுப்பாகும். அதன் பின்னர், பாராளுமன்ற அனுமதி கிடைத்ததும், கொள்முதல் ஆணைக்குழு வழிகாட்டல்களை வர்த்தமானியில் முறையாக உள்ளடக்க வேண்டும்.[6] இந்த செயன்முறை இடம்பெறாததால், இந்த கடமைப்பொறுப்பு எவ்வித முன்னேற்றத்தையும் பதிவு செய்யவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

இந்த கடமைப்பொறுப்பின் மட்டுப்படுத்தப்பட்டளவு செயற்படுத்தல் காரணமாக, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் எல்லையளவு பங்களிப்பை வழங்கியிருந்தது. செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கை முழுவதிலும் காணப்படும் உள்ளூராட்சி சபைகளினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் எழுமாற்றாகவும், ஒழுங்குபடுத்தப்படாத முறையிலும் இடம்பெற்றது. இந்த செயன்முறையை இயக்குவதற்கு தெளிவான வழிகாட்டல்கள் காணப்படாத நிலையில், பொது கொள்முதல் செயற்பாடுகளில் முறைகேடுகள் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக அமைந்துள்ளது.[7]

இந்த கடமைப்பொறுப்பினூடாக, MPCLG இனால் சிவில் சமூகம் அடங்கலாக பரந்தளவு பிரதான பங்காளர்களை ஒன்றுகூட்டி, கொள்முதல் வழிகாட்டல்களை தீர்மானித்து வடிவமைப்பதற்கு முடிந்திருந்தது. தேசிய கொள்கையை வடிவமைப்பதில் அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பு வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு வெளியே காணப்படும் செயற்பாட்டாளர்களால் அரிதளவில் முடிந்தது. எனவே, தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையில் பொது மக்களின் பங்கேற்புக்கான குறிப்பிடத்தக்களவு சாதனையில் இது பிரதிபலிப்பை காண்பித்திருந்தது. ஆனாலும், கடமைப்பொறுப்பின் பிரதான குறிக்கோளில் நேரடியாக தொடர்புடையதாக அமைந்திருக்கவில்லை.— உதாரணமாக, உள்ளூராட்சி சபைகளுக்கான கொள்முதல் வழிகாட்டல்களை வடிவமைத்து வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட பங்காளர்களால் முடியாமலிருந்தது, எனவே, தகவல் அணுகல் மேம்பாட்டை பொறுத்தமட்டில் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் எவ்வித தாக்கமும் ஏற்பட்டிருக்கவில்லை.

FSLGA இன் பிரகாரம், கொள்முதல் வழிகாட்டல்களை தயாரிப்பதில் உள்ளடக்கமான செயன்முறையினூடாக, அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பிரதான பங்காளர்கள் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்டளவு விழிப்புணர்வை ஏற்படுத்த முடிந்திருந்தது.[8] 2018 பெப்ரவரி மாதத்தில், கொள்முதல் வழிகாட்டல்களை அறிமுகம் செய்யும் முயற்சிகளுடன், கொள்முதல் செயன்முறையின் உப பிரிவான சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய வழிகாட்டல்களை FSLGA சுயாதீனமாக தயாரித்திருந்தது. இந்த வழிகாட்டல்கள் தொடர்பில் சகல 341 உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் உள்ளூராட்சி சபைகளின் மாகாண ஆளுநர்கள் ஈடுபட்டிருந்ததாக FSLGA குறிப்பிட்டிருந்தது.[9]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், கொள்முதல் வழிகாட்டல்களை அறிமுகம் செய்வதில் பங்காளர்கள் நேர்த்தியான உத்வேகத்தை பேணியிருந்ததாக IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். வழிகாட்டல்களை இறுதிப்படுத்தலுக்கு மேலாக, வெற்றிகரமாக பூர்த்தி செய்வதனூடாக விழிப்புணர்வு, பிரச்சாரப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலின் கண்காணிப்பு ஆகியவற்றை இன்றியமையாததாக்கும். (கடமைப்பொறுப்பு 11 ஐ பார்க்கவும்). தவணை இறுதியில் இந்த பரிந்துரைகளின் இயைபை IRM ஆய்வாளர் மீளஉறுதி செய்துள்ளார்.

---

1 In the action plan, milestones under this commitment are included as part of a single commitment that broadly seeks to establish a transparent and accountable procurement system for local authorities. However, for purposes of clarity, this report separates the evaluation of milestones that pertain to the preparation and publication of procurement guidelines (Commitment 10) and the evaluation of milestones that pertain to monitoring of implementation and grievance redress (see Commitment 11).
2 Hemanthi Goonasekera (Federation of Sri Lankan Local Government Authorities), interview by IRM researcher, 22 September 2017.
3 S. Boralessa, interview by IRM researcher, 27 September 2017; Goonasekera, interview.
4 Ms. Hemanthi Goonasekera (Federation of Sri Lankan Local Government Authorities), interview by IRM researcher, 17 September 2018.
5 National Procurement Guidelines – 2018, Gazette No. 2070/15 (9 May 2018) https://bit.ly/2xTxxnx.
6 Goonasekera, interview.
7 Goonasekera, interview, 22 September 2017.
8 Goonasekera, interview, 17 September 2018.
9 *Id.*

## 11. உள்ளூராட்சி சபைகளின் கொள்முதல் முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் (Implementation and Monitoring of Local Authority Procurement System)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**இலங்கையிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலுடனான கொள்முதல் முறைமை (B)**

[…]

பிரதான குறிக்கோள்:

உள்ளூராட்சி சபைகளுக்கு வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலுடான கொள்முதல் முறைமையை நிறுவுதல் (செயற்படுத்தல் தொடர்பில் குடிமக்கள் கண்காணிப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் குறைகளைத் திருத்தம் செய்யும் பொறிமுறைகளை உருவாக்குதல்).

மைல்கற்கள்:

- 11.1 புதிய முறையை நடைமுறைப்படுத்தலும் கண்காணித்தலும் - "பொது மக்கள் அறிக்கை அட்டைகள்" ஊடாக அனைத்து உள்ளூராட்சி சபைகள் (உள்ளூராட்சி ஆணையாளர்கள் / உதவி ஆணையாளர் அலுவலகங்களினால் கண்காணிப்பு) மற்றும் சிவில் சமூகங்களினாலும்'
- 11.2 மூன்று மொழிகளிலும் வெளிப்படையான குறை தீர்க்கும் பொறிமுறையை இணையம், தொலைபேசி ஹொட்லைன் மற்றும் குறைகேள் அதிகாரியொருவரின் மூலம் மூன்று மொழிகளிலும் வெளிப்படையான குறைதீர்ப்பு முறைமையை தாபித்தல்.

**பொறுப்பான நிறுவனங்கள்:** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MPCLG) மற்றும் கொள்முதல் ஆணைக்குழு

**துணை நிறுவனங்கள்**: உள்ளூராட்சி சபைகள், இலங்கை உள்ளூராட்சி சபைகளின் பேரவை

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 11. கொள்முதலை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் | | ✔ | | | | ✔ | ✔ | ✔ | | ✔ | | | மத்திய தவணை | ✔ | | | | | ✔ | | | |
| | | | | | | | | | | | | | தவணை பூர்த்தி | ✔ | | | | | | | | |

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

கடமைப்பொறுப்பு 10 இன் நீடிப்பாக அமைந்துள்ள இந்த கடமைப்பொறுப்பினூடாக, பொறுப்புக்கூறலுக்கான ஒதுக்கங்களுடன், உள்ளூராட்சி சபைகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதலை வலிமைப்படுத்துவது இலக்காக அமைந்துள்ளது. இதனூடாக முறைகேடுகள் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதை குறைத்துக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும்.

**நிலை**

**மத்திய தவணை: ஆரம்பிக்கப்படவில்லை**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு ஆரம்பிக்கப்படவில்லை.

நேர்த்தியான படிமுறைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MPCLG), கொள்முதல் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றம் ஆகியன கொள்முதல் வழிகாட்டல்களை இறுதியாக்கியிருக்கவில்லை. (கடமைப்பொறுப்பு 10 ஐ பார்க்கவும்). இதன் பெறுபேறாக, தொடர்புடைய பங்காளர்களால் நடைமுறைப்படுத்தலை கண்காணிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது. (மைல்கல் 11.1), அல்லது குறைதீர் பொறிமுறையை நிறுவ முடியவில்லை (மைல்கல் 11.2).[2]

**தவணை பூர்த்தி: ஆரம்பிக்கப்படவில்லை**

தவணை பூர்த்தியின் போது இந்த கடமைப்பொறுப்பை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. MPCLG, கொள்முதல் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றம் ஆகிய எந்தவொரு அமைப்பினாலும் கொள்முதல் வழிகாட்டல்கள் இறுதியாக்கப்படாததன் காரணமாக, இந்த கடமைப்பொறுப்பு பூர்த்தி செய்யப்படவில்லை.[3]

இலங்கை உள்ளூராட்சி சபைகளின் பேரவையின் (FSLGA) சிவில் சமூக பிரதிநிதிகளின் பிரகாரம், வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் வரை கடமைப்பொறுப்புகள் 10 அல்லது 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்பட முடியாது.[4] FSLGA பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், இந்த வழிகாட்டல் வரைவில் பொது மக்கள் குறைதீர் முறைமை உள்ளடக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. கொள்முதல் வரைவில், உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்படும் கொள்முதல் தொடர்பில் எழும் முறைப்பாடுகளை மாகாண மட்டத்தில் காணப்படும் உள்ளூராட்சி சபையின் ஆளுநரிடம் கொண்டு செல்ல முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.[5]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

செயற்படுத்தும் பங்காளர்கள் கொள்முதல் வழிகாட்டல்களை இறுதிப்படுத்தாத நிலையில், இந்த கடமைப்பொறுப்பு பூர்த்தி செய்யப்பட முடியாது என்பதுடன், அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் பங்களிப்பு வழங்கியிருக்கவில்லை.

கடமைப்பொறுப்பு 10 இல் குறிப்பிடப்பட்டதை போன்று, உள்ளூராட்சி சபைகளினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் செயன்முறையை இயக்குவதற்கு தெளிவான வழிகாட்டல்கள் காணப்படாமை, முறைகேடுகள் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக அமைந்துள்ளது.[6] இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக பின்வரும் விடயங்கள் முன்னெடுக்க இந்த கடமைப்பொறுப்பு இலக்கு வைக்கப்பட்டது, a) கொள்முதல் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தலை கண்காணிக்கும் பொறிமுறை, மற்றும் b) உள்ளூராட்சி சபைகளினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் செய்யும் போது உள்ளூராட்சி சபைகளை பொறுப்புக்கூற பொது மக்களை தூண்டும் குறைதீர் பொறிமுறை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இந்த கடமைப்பொறுப்பை வடிவமைப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றி, அதனூடாக அதன் தாக்கத்தை வலிமைப்படுத்துவதை IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். இவற்றில்: புதிய கொள்முதல் வழிகாட்டல்களை எவ்வாறு பின்பற்றுவது மற்றும் குறைதீர் பொறிமுறையை செயற்படுத்தல் என்பன பற்றி உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளுக்கு பயிற்சியளித்தல்; மற்றும் கொள்முதல் செயன்முறையில் பொது மக்கள் ஈடுபாட்டை மேம்படுத்தல். சமூக கணக்காய்வு, கொள்முதல் குழுக்கள் அல்லது பொது மக்களின் கருத்துரைக்காக கொள்முதல் தீர்மானங்களை வெளிப்படுத்தல் போன்றன ஈடுபாடுகளில் அடங்கியிருக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு, 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

கடமைப்பொறுப்பு 10 ஐ (உள்ளூராட்சி சபைகளுக்கான கொள்முதல் வழிகாட்டல்களை வெளியிடல்) பூர்த்தி செய்வதன் ஐயப்பாட்டின் அடிப்படையில், அவ்வாறான வழிமுறைகளை பின்பற்றும் இயைபை IRM ஆய்வாளர் வலியுறுத்துவதுடன், இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை பரிந்துரைத்துள்ளார்.

[1] In the action plan, milestones under this commitment are included as part of a single commitment that broadly seeks to establish a transparent and accountable procurement system for local authorities. However, for purposes of clarity, this report separates the evaluation of milestones that pertain to the preparation and publication of procurement guidelines (Commitment 10) and the evaluation of milestones that pertain to monitoring of implementation and grievance redress (see Commitment 11).
[2] S. Boralessa (Ministry of Provincial Councils and Local Government), interview by IRM researcher, 27 September 2017; Hemanthi Goonasekera (FSLGA), interview by IRM researcher, 22 September 2017.
[3] Hemanthi Goonasekera (FSLGA), interview by IRM researcher, 17 September 2018.
[4] It is the primary responsibility of the Procurement Commission to submit the guidelines for approval by Parliament. After having received parliamentary approval, the Procurement Commission must formally gazette the guidelines in order for them to become legally binding.
[5] Goonasekera, interview.
[6] Goonasekera, interview, 22 September 2017.

# கருப்பொருள் 6: பெண்கள் (Women)

## 12. தனிநபர் சட்ட சீர்திருந்தங்கள் (Personal Law Reforms)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வருடாந்த பணித்திட்டத்தில் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலான செயன்முறையில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் (CEDAW) அகற்றுவது தொடர்பான நடைமுறை மரபு உள்ளடக்கி, அவதானிப்புகளுடன் பூர்த்தி செய்தல் (A) – தனிநபர் சட்ட சீர்திருத்தம்**

இலங்கை 1981 ஆம் ஆண்டு CEDAW க்கு ஒப்புதல் அளித்தது. இந்த ஒப்புதலைத் தொடர்ந்து, ஒவ்வொரு 4 வருடங்களுக்கும் CEDAW க்கு அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை கடமைப்பட்டுள்ளது. இறுதியாக இலங்கையில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் போது, CEDAW இனால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏராளமான முடிவான அவதானிப்புகளை வழங்கியிருந்தது. அரச தரப்பாக, இலங்கை அரசாங்கமானது இந்த முடிவான அவதானிப்புகளை பின்பற்ற வேண்டியது கடமையாகும்.

[...]சமூகத்துடனான ஆலோசனைகளினூடாக பொது மக்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் பொறுப்புக்கூறல் அதிகரிப்பதுடன், பொதுச்சேவைகளை மேம்படுத்தவும் பொதுமக்களின் ஒருமைப்பாட்டை அதிகரிக்கவும் நேரடியாக பங்குபற்றுவதற்கு பெண்கள் வலையமைப்புகளுக்கு அனுமதிக்கும். அரசாங்கம் ஒரு வெளிப்படையான செயன்முறை மற்றும் பொதுமக்கள் பங்கேற்பை உள்ளடக்கி இறுதி முடிவுகளை செயல்படுத்த பொறுப்புடன் செயல்திறன் கொண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்தகைய நடைமுறைப்படுத்தலினால் மேற்கொள்ளப்படும் முன்னேற்றம் அடுத்த அரசாங்க மதிப்பீட்டில் எமது அரசாங்கத்தின் முன்னேற்றமாக அறிவிக்கப்படலாம்.

பிரதான குறிக்கோள்:

தனிநபர் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பிலான CEDAW முடிவான அவதானிப்புகளை நடைமுறைப்படுத்தல்

மைல்கற்கள்:

- 12.1 முஸ்லிம் மற்றும் தமிழ் சமுதாயத்துடன் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான பிரதேச செயலாளர் மட்ட ஆலோசனைகளின் அறிக்கை.
- 12.2 சட்டத்தரணிகள், நீதிபதிகள், மதத் தலைவர்கள் ஆகியோருடன் அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் பற்றிய அறிக்கை பொது மக்களுக்கு வெளிப்படுத்தல்.
- 12.3 இன்மைச் சான்றிதழ் சட்டம் நிறைவேற்றப்படல்.

- 12.4 இல 1 மற்றும் இல 2 (12.1 மற்றும் 12.2) கண்டறிதல்கள் அறிக்கைகளின் அமைச்சரவை பத்திரத்தை அமைச்சினால் நடைமுறைப்படுத்தல், பின்தொடரலுக்காக அமைச்சரவைக்கு அனுப்பல்.

- 12.5 முன்னேற்றத்தை கண்காணிப்பது மற்றும் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் செயன்முறையில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பது தொடர்பில் அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் CSOக்களை உள்ளடக்கிய குழுவினரின் காலாண்டு சந்திப்புகள் முன்னெடுக்கப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் பற்றிய நிலை பற்றி அறிவித்தல்.

- 12.6 தனிநபர் சட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல்.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 12. தனியார் சட்ட திருத்தங்கள் (மத்திய தவணை) | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | |
| (தவணை பூர்த்தி) | | | | | | | | | | | | | | | ✔ | | | | | | |

**பொறுப்பான நிறுவனம்:** மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு (MWCA)

**துணை நிறுவனங்கள்:** பெண்கள் தொடர்பான தேசியக் குழு (NCW); சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (முன்னர் FOKUS Women எனப்பட்டது)

**ஆரம்ப திகதி:** ஜுலை 2016 **முடிவு திகதி:** ஆகஸ்ட் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் (CEDAW) அகற்றுவது தொடர்பான செயற்குழுவின் இறுதி கண்காணிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதவுவதுஇந்த கடமைப்பொறுப்பின் இலக்காக

அமைந்திருந்தது. இலங்கையில் ‘‘தனிநபர் சட்டங்கள்’’ திருத்தம் தொடர்பான அவதானிப்புகளுக்கு உதவும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்தது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் பெண்கள் தொடர்பான தேசியக் குழு தனிநபர் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான நிபுணத்துவ கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தது. (மைல்கல் 12.2). [2] இந்த கலந்துரையாடல்களில் பரந்தளவு பங்காளர்கள் உள்ளடங்கியிருந்தனர், இதில் பிரதான அரசாங்க அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோர் அடங்கியிருந்தனர்.

எவ்வாறாயினும், மத்திய தவணை மதிப்பீட்டு காலப்பகுதியின் பின்னர் – 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இவை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், NCW/MWCA இனால் சமூக கலந்துரையாடல்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை (மைல்கல் 12.1). கலந்துரையாடல்கள் பூர்த்தியாக்கப்படாததன் காரணமாக, NCW/MWCA இனால் அவை தொடர்பான அறிக்கைகள் எதுவும் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படவில்லை. இதன் பெறுபேறாக, கண்டறிதல்கள் தொடர்பிலான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்படவில்லை (மைல்கற்கள் 12.4–12.5).

தனிநபர் சட்ட விதிமுறைகள் தொடர்பான திருத்தங்கள் எதுவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை (மைல்கல் 12.6). இதில் காணப்படும் உணர்திறன் வாய்ந்த உள்ளம்சங்கள் காரணமாக, இந்த இலக்கை குறித்த இரண்டு வருட காலப்பகுதியினுள் எய்தக்கூடியதாக இருக்குமா என்பது தொடர்பில் சிவில் சமூகம் ஐயக்கோட்பாட்டை வெளியிட்டிருந்தது. [3] 2016 செப்டெம்பர் மாதத்தில், இன்மைச் சான்றிதழ் வழங்கல் செயற்பாடு, மரணப் பதிவுச் சட்ட திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. (மைல்கல் 12.3). [5]

**தவணை பூர்த்தி: பெருமளவு பூர்த்தி**

மைல்கற்கள் 12.1 – 12.5 பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிலையில், இந்த கடமைப்பொறுப்பு தவணை பூர்த்தி காலப்பகுதியில் பெருமளவு பூர்த்தி நிலையை எய்தியிருந்தது.

மைல்கற்கள் 12.1–12.2: பெண்கள் தொடர்பான தேசியக் குழுவின் தலைமை அதிகாரியின் பிரகாரம், அமைச்சினால் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில், 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மூன்று சமூக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த கலந்துரையாடல்களை சிவில் சமூகம் உறுதி செய்திருந்ததுடன் [4] பெண்கள் NCW இனால் சமூகமளித்தோர் பதிவு குறிப்பு பகிரப்பட்டிருந்தது. தேசவளமை மற்றும் முஸ்லிம் தனிநபர் சட்டங்களில் கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.[5] NCW இனால், 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முன்னணி பெண்கள் உரிமை நிபுணர்கள் மற்றும் இதர சிவில் சமூக பிரதிநிதிகளுடன் நிபுணத்துவ கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.[6]

மைல்கல் 12.3: பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மைல்கல் 12.4: சமூக அமைப்புகள் மற்றும் நிபுணர்களின் கலந்துரையாடல்களின் பிரகாரம் NCW / MWCA இனால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு மேலதிக செயற்பாடுகளுக்காக நீதி அமைச்சிடம் (MOJ) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.[7] அமைச்சினால் இந்த அறிக்கை வெளியிடப்படாத போதிலும், இந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) உறுதி செய்திருந்தது.[8]

மைல்கல் 12.5: அரசாங்க அதிகாரிகள், சட்ட நிபுணர்கள் மற்றும் இதர சிவில் சமூக அங்கத்தவர்கள் 14 பேரைக் கொண்ட பல்துறைசார் பங்காளர் குழுவொன்றை NCW நிறுவியிருந்தது. இந்தக் குழுவில் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) அடங்கியிருந்தது.[9] மாதாந்த அடிப்படையில் இந்த குழு ஒன்றுகூடியிருந்தது. கண்டறியப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தப்படுவதை முறையாக கண்காணிக்க இந்த குழு தவறியிருந்த போதிலும், தனிநபர் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான பிரதான விடயங்களை பங்காளர்களுக்கு கலந்துரையாடுவதற்கான பயனுள்ள கட்டமைப்பாக இது அமைந்திருந்தது.[10]

மைல்கல் 12.6: இந்த கடமைப்பொறுப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நீதி அமைச்சின் பொறுப்பு என NCW குறிப்பிட்டிருந்தது — அறிக்கையின் பிரகாரம் செயலாற்றல், அமைச்சரவை பத்திரமொன்றை தயாரித்தல் மற்றும் தனிநபர் சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கண்டறியப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்.[11] இந்த படிமுறைகள் முன்னெடுக்கப்படாததால், இந்த கடமைப்பொறுப்பு பூர்த்தியாகாத நிலையில் காணப்பட்டது.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கையின் தனிநபர் சட்டங்களில் நவீன கலாசார முறைமைகளிலிருந்து விடுபட்ட பல காலம்கடந்த ஒதுக்கங்கள் காணப்பட்டன. குறிப்பாக, இந்த சட்ட விதிமுறைகளின் பிரகாரம் பெண்களை நடத்தும் விதம் காலம்கடந்ததாகவும், பெருமளவு பழமைவிரும்பிகளாகவும் மற்றும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாகுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன.[12] அதன் இறுதியாக்கல் கண்காணிப்புகளில் ஒரு அங்கமாக, CEDAW இனால் இலங்கை அரசாங்கம் சட்ட சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், தனிநபர் சட்ட விதிமுறைகளில் காணப்படும் பாகுபடுத்தல் ஒதுக்கங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது.[13] இந்த கடமைப்பொறுப்பினூடாக சட்ட சீர்திருத்தம் மற்றும் தனிநபர் சட்ட விதிமுறைகளில் திருத்தம் போன்ற செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியன அறிமுகப்படுத்தப்பட எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்த கடமைப்பொறுப்பு தவணை இறுதியில் பெருமளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் எல்லையளவு மாற்றத்தை ஏற்படுத்த பங்களிப்பு வழங்கியிருந்தது. பங்காளர் குழுவின் கருத்துக்களை வெளிக்கொணர்வதற்கு சமூக மற்றும் நிபுணர்களுடனான கலந்துரையாடல்கள் NCW/MWCA இனால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. முன்னைய மட்டுப்படுத்தப்பட்ட ஈடுபாட்டின் காரணமாக, தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளில் சிவில் சமூக பங்களிப்பை ஊக்குவிப்பதற்கான நேர்த்தியான சாதனையாக இது அமைந்திருந்ததாக சிவில் சமூக நிபுணர்கள் குறிப்பிட்டிருந்தனர்.[14] ஆனாலும், இந்த கலந்துரையாடல்கள் உள்ளடக்கமானவையாக அமைந்திருந்த போதிலும், சம்பந்தப்பட்ட கொள்கை பிரிவில் பாரிய முன்னெடுப்பை பிரதிபலிக்கவில்லை. இதை நீதி அமைச்சு உறுதி செய்திருந்ததுடன், இலங்கையின் தனிநபர்

சட்டங்களை சீர்திருத்துவதற்கு அதிகளவு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் பங்களிப்பு வழங்கலாம் என குறிப்பிட்டிருந்தது.[15]

NCW இனால் கலந்தாலோசனை கண்டறிதல்கள் வெளியிடப்படவில்லை. இந்த கண்டறிதல்கள் வெளியிடப்படுவது, தகவல் அணுகலை நேரடியாக மேம்படுத்தியிருக்கக்கூடிய ஒரே செயற்பாடாக அமைந்திருக்கும். எனவே, இந்த கடமைப்பொறுப்பினூடாக தகவல் அணுகலில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், பிரேரிக்கப்பட்ட சட்டவாக்கல் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை கொள்கைகளை செயற்திறனின் பெறுமதி மற்றும் முக்கியத்துவம் குறித்து IRM ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார். இதன் பிரகாரம், IRM ஆய்வாளர் தொடர்ந்தும், இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என பரிந்துரைக்கின்றார். இந்த கடமைப்பொறுப்புக்கு ஏனைய பொருத்தமான இடையீடுகள் இணைத்துக் கொள்ளப்படலாம். இவற்றில்: விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பிரச்சார திட்டங்கள் முன்னெடுப்பதற்கு கலந்தாலோசனை அறிக்கைகள் தயாரிப்பு; மற்றும் தனிநபர் சட்டத்தில் காணப்படும் பாகுபாடு ஒதுக்கங்கள் பற்றி உறுதியான மாற்று பிரேரிப்புகளை மக்களைச் சென்றடையச் செய்வதற்கு நேர்த்தியான சிந்தனை கொண்ட சமய தலைவர்களுடன் கைகோர்த்தல் போன்றன அடங்கியுள்ளன.

[1] In the action plan, milestones pertaining to personal law reform (Commitment 12), gender equality in state land distribution (Commitment 13), and nondiscrimination in formal and informal employment (Commitment 14) are listed under a single commitment. For clarity, these milestones are separated into three different commitments in this report.
[2] Swarna Sumanasekera (National Committee on Women), interview by IRM researcher, 13 October 2017.
[3] Dr Ramani Jayasundere (The Asia Foundation), interview by IRM researcher, 17 October 2017; Shyamala Gomez (Centre for Equality and Justice), interview by IRM researcher, 27 October 2017.
[4] Shyamala Gomez (Centre for Equality and Justice), interview by IRM researcher, 29 September 2018.
[5] Swarna Sumanasekera (National Committee on Women), interview by IRM researcher, 20 September 2018.
[6] *Id.*; Gomez, interview.
[7] Sumanasekera, interview.
[8] Gomez, interview.
[9] *Id.*
[10] Sumanasekera, interview.
[11] *Id.*
[12] Z. Imtiaz, "CEDAW Asks Sri Lanka to Amend Personal Laws" (Daily News, 8 March 2017) http://bit.ly/2DqcP34.
[13] "CEDAW/C/LKA/CO/7," Human Rights Bodies, United Nations Human Rights, § 44(a), 8 April 2011, http://bit.ly/2EUSlvS.
[14] *Id.*
[15] Gomez, interview.

## 13. அரசாங்க காணிப் பகிர்வில் பாலின சமத்துவம் (Gender Equality in State Land Distribution)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வருடாந்த பணித்திட்டத்தில் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலான செயன்முறையில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் (CEDAW) அகற்றுவது தொடர்பான நடைமுறை மரபு உள்ளடக்கி, அவதானிப்புகளுடன் பூர்த்தி செய்தல் (B) – அரச காணி பகிர்வில் பாலின சமத்துவம்**

1981 ஆம் ஆண்டு CEDAW க்கு இலங்கை ஒப்புதல் அளித்தது. இந்த ஒப்புதலைத் தொடர்ந்து, ஒவ்வொரு 4 வருடங்களுக்கும் CEDAW க்கு அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை கடமைப்பட்டுள்ளது. இறுதியாக இலங்கையில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் போது, CEDAW இனால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏராளமான முடிவான அவதானிப்புகளை வழங்கப்பட்டிருந்தது. அரச தரப்பாக, இலங்கை அரசாங்கமானது இந்த முடிவான அவதானிப்புகளை பின்பற்ற வேண்டியது கடமையாகும்.

[…] சமூகத்துடனான ஆலோசனைகளினூடாக பொது மக்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் பொறுப்புக்கூறல் அதிகரிப்பதுடன், பொதுச்சேவைகளை மேம்படுத்தவும் பொதுமக்களின் ஒருமைப்பாட்டை அதிகரிக்கவும் நேரடியாக பங்குபற்றுவதற்கு பெண்கள் வலையமைப்புகளுக்கு அனுமதிக்கும். அரசாங்கம் ஒரு வெளிப்படையான செயன்முறை மற்றும் பொதுமக்கள் பங்கேற்பை உள்ளடக்கி இறுதி முடிவுகளை செயல்படுத்த பொறுப்புடன் செயல்திறன் கொண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்தகைய நடைமுறைப்படுத்தலினால் மேற்கொள்ளப்படும் முன்னேற்றம் அடுத்த அரசாங்க மதிப்பீட்டில் எமது அரசாங்கத்தின் முன்னேற்றமாக அறிவிக்கப்படலாம்.

பிரதான குறிக்கோள்:

அரச காணி பகிர்வில் பாலின சமத்துவம் தொடர்பாக CEDAW முடிவான அவதானிப்புகளை நடைமுறைப்படுத்தல்

மைல்கற்கள்:

- 13.1 காணி அபிவிருத்தி கட்டளைச் சட்ட திருத்த வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- 13.2 அரச காணிப் பகிர்வில் கூட்டு உரிமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஆர்வமுள்ள CSOக்களின் பங்குபற்றுதலுடன் அமைச்சுக்கிடையிலான கலந்துரையாடலை முன்னெடுத்தல்.
- இல 1 மற்றும் இல 2 (13.1 மற்றும் 13.2) தொடர்பான முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் CSOக்களை உள்ளடக்கிய குழுவின் காலாண்டு சந்திப்புகள்.

**பொறுப்பான நிறுவனம்:** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை<br>தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 13. அரச காணி விநியோகத்தில் பாலின சமத்துவம் | | | ✔ | | | ✔ | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | | |

**துணை நிறுவனங்கள்:** மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு (MWCA); பெண்கள் தொடர்பான தேசியக் குழு (NCW); சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (முன்னர் FOKUS Women எனப்பட்டது)

**ஆரம்ப திகதி:** மார்ச் 2017 **முடிவு திகதி:** ஆகஸ்ட் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் (CEDAW) அகற்றுவது தொடர்பான செயற்குழுவின் இறுதி கண்காணிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் இந்த கடமைப்பொறுப்பின் இலக்கு அமைந்திருந்தது. அரச காணி பகிர்வில் பாலின சமத்துவம் தொடர்பான அவதானிப்புகளுக்கு உதவும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது.

உயில் குறிப்பிடப்படாமல் மரணிக்கும் சந்தர்ப்பத்தில், அரச காணியின் உரிமம் ஆண் வழிக்கு உரித்தாவதை குறிக்கும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் [2] (LDO) மூன்றாவது அட்டவணையில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் இணை உரிமையாண்மையை கொண்டிருப்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு உதவும் வகையிலும் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் (MWCA) கீழான பெண்கள் தொடர்பான தேசியக் குழு (NCW) மற்றும் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு இணைந்து காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் (LDO) மூன்றாவது அட்டவணையில் திருத்தத்தை மேற்கொண்டு, அதை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பித்திருந்தது (மைல்கல் 13.1).[3] சட்டபூர்வ செயற்பாட்டின் அடிப்படையில், அமைச்சரவை இறுதி ஆவணத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முன்னதாக, சட்ட வரைஞர்களின் அலுவலகத்துடன் அனுமதித்த ஆவணத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.
2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், பல்துறைசார் பங்காளர் சந்திப்பொன்றை சிவில் சமூகம் ஒன்றுகூட்டி இணை உரிமையாண்மை தொடர்பான ஒதுக்கங்களை உருவாக்குவது பற்றி கலந்துரையாடியிருந்தது (மைல்கல் 13.2). இந்த சந்திப்பில் NCW/MWCA, காணி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகிய பங்காளர்களும் பங்கேற்றிருந்தனர். [4] இந்த செயன்முறைகள் எதனையும் கண்காணிப்பதற்கு பல்துறைசார் பங்காளர் குழு ஒன்று நியமிக்கப்படவில்லை என்பதை காணி அமைச்சு உறுதி செய்திருந்தது. (மைல்கல் 13.4).[5]

தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பின் செயற்படுத்தல் என்பது மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டது.

மைல்கல் 13.1: LDO திருத்தங்களைக் கொண்ட வரைபு சட்ட வரைஞர் அலுவலகத்தில் காணப்படுவதாக NCW/MWCA உறுதி செய்திருந்தது. காணி அமைச்சின் சிரேஷ்ட பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியாக NCW கலந்துரையாடல்களை முன்னெடுத்து, திருத்தங்களை நிறைவேற்றும் நடவடிக்கையை துரிதப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.[6] ஆனாலும், LDO இல் திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக முற்றிலும் புதிய காணி சட்டங்களை பிரதியீடாக சமர்ப்பிக்கும் நோக்கில் படிப்படியாக கவனத்தை திசை திருப்பியிருந்ததாக NCW குறிப்பிட்டிருந்தது.[7] இந்த சிக்கல் நிலையை சிவில் சமூக உறுதி செய்திருந்ததுடன், மைல்கல்லை பூர்த்தி செய்யப்படுவதை தாமதிப்பதாக அல்லது காலம் தாழ்த்துவதாக இது அமைந்திருக்கும் என குறிப்பிட்டிருந்தது.[8]

மைல்கல் 13.2: இணை உரிமையாண்மை தொடர்பில் பல்துறைசார் பங்காளர் சந்திப்பு மத்திய தவணை காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், தவணை பூர்த்தியில் சிற்றளவு முன்னேற்றமே இந்த மைல்கல்லில் பதிவாகியிருந்தது. இணை உரிமையாண்மை தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்தும் உள்ளக அமர்வில் கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும், இந்த தலைப்பு பெருமளவு எதிர்ப்பு வாதத்துக்குட்படுத்தப்பட்டிருந்ததென NCW உறுதி செய்திருந்தது.[9] இந்த அமர்வு – LDO திருத்தங்கள் குறித்து கண்காணிப்பு செயன்முறை மற்றும் இணை உரிமையாண்மை ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் சிறப்புரிமை பெற்றதாக அமைந்திருந்தது (மைல்கல் 13.3)— இதில் அரசாங்க மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் அடங்கியிருந்ததுடன், மாதாந்த அடிப்படையில் ஒன்றுகூடியிருந்தது.

சமத்துவம் மற்றும் நீதிக்கான மையத்தின் (CEJ) பிரகாரம், அரச காணி இணை உரிமையாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்வதை உறுதி செய்வதில் சிவில் சமூகம் அர்ப்பணிப்புடன் காணப்பட்டதுடன், அந்த அந்தஸ்தை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கு மாற்று வழிமுறைகள்

குறித்தும் தொடர்ந்து கவனம் செலுத்தியிருந்ததை உறுதி செய்திருந்தது.[10] உதாரணமாக வெளிநாட்டு நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்திட்டத்தில் ஒரு அங்கமாக அல்லது ஒரு தெரிவு முறையாக இணை உரிமையாண்மை அறிமுகம் செய்வது உள்ளடங்கியிருக்கலாம்.[11]

மைல்கல் 13.3: NCW இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாதாந்த பொது சந்திப்புகளுக்கு மேலதிகமாக, LDO திருத்தங்களை கண்காணிப்பதற்கு/மேற்பார்வை செய்வதற்கு முறையான பல்துறைசார் பங்காளர் குழு ஒன்று காணப்படவில்லை.[12]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

செயற்திட்டத்தின் பிரகாரம், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் (LDO) பெண்களுக்கு பரந்தளவு பாகுபாடான ஒதுக்கங்கள் உள்ளடங்கியிருந்தன. குறிப்பாக, LDO இன் மூன்றாவது அட்டவணையில் காணி அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் நபர் தனக்குப்பின்னர் காணியின் உரிமையாளர் பற்றி குறிப்பிடாவிடின், அவர்களின் மகள்கள் அல்லது பேத்திகளுக்கு சுயமாக உரிமை சென்றடையாது என குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோன்று, LDO இல் அரச காணியில் இணை உரிமையாண்மை கொண்டிருப்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவ்வாறான ஒதுக்கங்களினூடாக பெண்களுக்கும் காணி உரிமை கோருவது உறுதி செய்யப்படுவதுடன், குடும்ப தகராறுகள் தவிர்க்கும் மற்றும் பெண்களுக்கு அதிகளவு பொருளாதார பாதுகாப்புடன் வலுவூட்டுவதாக அமைந்திருக்கும்.[13]

LDO இல் திருத்தத்தை மேற்கொள்வதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அறிமுகம் செய்வதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. முழுமையாக செயற்படுத்தப்பட்டிருந்தால், திருத்தங்களை மேற்கொள்வதற்கு காணப்படும் தேவைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு பலதரப்பட்ட பங்காளர்களை ஒன்றுகூட்டி தீர்மானமெடுத்திருப்பதனூடாக பொது மக்களின் பங்கேற்பில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை இந்த கடமைப்பொறுப்பு பங்களிப்பு வழங்கியிருக்கும். இந்த விடயம் தொடர்பில் பல்துறைசார் பங்காளர் சந்திப்பொன்றை NCW முன்னெடுத்திருந்ததுடன், இந்த கடமைப்பொறுப்பினூடாக அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் எல்லையளவு முன்னேற்றம் பதிவாகியிருந்தமைக்கு சிவில் சமூகம் உடன்பாட்டை தெரிவித்திருந்தது.[14] தொடர்புடைய செயன்முறைகளை கண்காணிப்பதற்கு NCW இனால் தொடர்ச்சியாக பல்துறைசார் குழுவொன்றை ஒன்றுகூட்டியிருப்பின் இந்த நிலை மேலும் முன்னேற்றமடைந்திருக்கும்.

ஆனாலும், IRM மத்திய தவணை அறிக்கையில் குறிப்பிட்டதை போன்று, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் பெறுமதிகள் அல்லது நோக்க வரைவுக்கு அப்பாற்பட்டவையாக திருத்தங்கள் அமைந்துள்ளன.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

கடமைப்பொறுப்பின் பிரதான உள்ளடக்கங்கள் OGP பெறுமதிகளுக்கு வரையறுக்கப்பட்டிருந்தாலும், 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், LDO இல் திருத்தத்தை மேற்கொள்ளும் செயற்பாடு

துரிதமாக்கப்படுவது மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மைக்கு இந்த கடமைப்பொறுப்பை அதிகளவு பொருத்தமுடையதாக மாற்றுவது தொடர்பான செயற்பாடுகளை IRM ஆய்வாளர் பிரேரித்திருந்தார். இவற்றில்: LDO திருத்தங்கள் தொடர்பில் அதிகளவு விவாதிக்கப்பட்டவற்றிலிருந்து மூன்றாவது அட்டவணை தொடர்பான திருத்தத்தை ஒதுக்குவது; அரச காணியில் தம்மைத் தொடர்ந்து உரிமையான ஒருவரை நியமிக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் இடையீட்டு பிரிவுகளை வடிவமைப்பது மற்றும் அரச காணி விநியோகம் தொடர்பான முழுத்தகவல்களை வெளியிடல் போன்றன அடங்கியிருந்தன.

---

[1] In the action plan, milestones pertaining to personal law reform (Commitment 12), gender equality in state land distribution (Commitment 13), and nondiscrimination in formal and informal employment (Commitment 14) are listed under a single commitment. For purposes of clarity, these milestones have been separated into three different commitments in this report.

[2] Land Development Ordinance, No. 19 of 1935, http://bit.ly/2DyRST0.

[3] L. B. S. B. Dayaratne (Ministry of Land and Parliamentary Reforms), interview by IRM researcher, 19 October 2017; Swarna Sumanasekera (Ministry of Women and Child Affairs), interview by IRM researcher, 13 October 2017.

[4] Id.; Shyamala Gomez (Centre for Equality and Justice), interview by IRM researcher, 27 October 2017.

[5] Dayaratne, interview.

[6] Swarna Sumanasekera (Ministry of Women and Child Affairs), interview by IRM researcher, 20 September 2018.

[7] *Id.*

[8] Shyamala Gomez (Centre for Equality and Justice), interview by IRM researcher, 29 September 2018.

[9] Sumanasekera, interview.

[10] Gomez, interview.

[11] Sumanasekera, interview.

[12] Id.; Shyamala Gomez, interview by IRM researcher, 27 October 2017.

[13] Gomez, interview. See also Sunday Times, "A Piece of Land to Call Her Own.", 6 March 2011, https://bit.ly/2DtPFVw

[14] Gomez, interview, 29 September 2018.

## 14. வேலை வாய்ப்பில் பாரபட்சமின்மை (Non-Discrimination in Employment)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வருடாந்த பணித்திட்டத்தில் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலான செயன்முறையில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் (CEDAW) அகற்றுவது தொடர்பான நடைமுறை மரபு உள்ளடக்கி, அவதானிப்புகளுடன் பூர்த்தி செய்தல் (C) – முறைசார் மற்றும் முறைசாரா தொழில்துறையில் பாகுபாடுகளின்மை**

1981 ஆம் ஆண்டு CEDAW க்கு இலங்கை ஒப்புதல் அளித்தது. இந்த ஒப்புதலைத் தொடர்ந்து, ஒவ்வொரு 4 வருடங்களுக்கும் CEDAW க்கு அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை கடமைப்பட்டுள்ளது. இறுதியாக இலங்கையில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் போது, CEDAW இனால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏராளமான முடிவான அவதானிப்புகள் வழங்கப்பட்டிருந்தது. அரச தரப்பாக, இலங்கை அரசாங்கமானது இந்த முடிவான அவதானிப்புகளை பின்பற்ற வேண்டியது கடமையாகும்.

இந்த கடமைப்பொறுப்பின் கட்டமைப்பில், தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளில் முடிவான அவதானிப்புகள் தொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு பின்தொடர்வுகளை மேற்கொள்ளும். இவற்றில்; தனிநபர் சட்ட சீர்திருத்தங்கள், அரச காணி பகிர்வில் பாலின சமத்துவம், முறைசார் மற்றும் முறைசாரா தொழில்துறையில் பாகுபாடுகளின்மை போன்றன அடங்கியுள்ளன. சமூகத்துடனான ஆலோசனைகளினூடாக பொது மக்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் பொறுப்புக்கூறல் அதிகரிப்பதுடன், பொதுச்சேவைகளை மேம்படுத்தவும் பொதுமக்களின் ஒருமைப்பாட்டை அதிகரிக்கவும் நேரடியாக பங்குபற்றுவதற்கு பெண்கள் வலையமைப்புகளுக்கு அனுமதிக்கும்.

இறுதிப் பெறுபேறாக, அரசாங்கம் ஒரு வெளிப்படையான செயன்முறை மற்றும் பொது மக்கள் பங்கேற்பை உள்ளடக்கி இறுதி முடிவுகளை செயல்படுத்த பொறுப்புடன் செயல்திறன் கொண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்தகைய நடைமுறைப்படுத்தலினால் மேற்கொள்ளப்படும் முன்னேற்றம் அடுத்த அரசாங்க மதிப்பீட்டில் எமது அரசாங்கத்தின் முன்னேற்றமாக அறிவிக்கப்படலாம்.

பிரதான குறிக்கோள்:

முறைசார் மற்றும் முறைசாரா தொழில்துறையில் பாகுபாடுகளின்மை தொடர்பாக CEDAW பூர்த்தியாக்கல் கண்காணிப்புகளை நடைமுறைப்படுத்தல்.

மைல்கற்கள்:

- 14.1 வேலைவாய்ப்பு துறையில் CEDAW முடிவான அவதானிப்புகளில் இருந்து கருப்பொருள் சார்ந்த பகுதிகளை முன்னுரிமைப்படுத்துதல்

- 14.2 அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்த தரவு வடிவத்தில் தரவுகளை அறிக்கையிடல் போன்றவற்றுக்காக முறைசார் மற்றும் முறைசாரா வேலைவாய்ப்பு துறையில் பாலின பாகுபாடு

இன்மை தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளான பகுதிகளில் பாலின பாகுபாடு குறித்த தகவல் வெளியீடு.

- 14.3 முறைசார் மற்றும் முறைசாரா வேலைவாய்ப்பு துறையில் பெண்களின் பாதுகாப்பு பற்றிய வழிகாட்டுதல்களை முன்வைக்க சிவில் சமூகத்துடன் பொது கலந்தாலோசனை.

- 14.4 #3 (14.3) இல் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் CSOக்களை உள்ளடக்கிய குழுவின் காலாண்டு சந்திப்புகள்.

- 14.5 CSO க்கள் மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்களுடன் முடிவுறுத்தல் அவதானிப்புகள் தொடர்பான OGP கடமைப்பொறுப்பின் முன்னேற்றத்தை பகிர்ந்து கொள்தல்.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 14. தொழிலில் சமத்துவமளித்தல் | | ✔ | | | ✔ | ✔ | | | | ✔ | | | | ✔<br>✔ | | | | | ✔ | | |

**பொறுப்பான நிறுவனம்:** மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு (MWCA)

**துணை நிறுவனங்கள்:** பெண்கள் தொடர்பான தேசியக் குழு (NCW); சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (முன்னர் FOKUS Women எனப்பட்டது)

**ஆரம்ப திகதி:** ஒக்டோபர் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் (CEDAW) அகற்றுவது தொடர்பான செயற்குழுவின் இறுதி கண்காணிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு, வெளிப்படைத்தன்மை மற்றும்

பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதவுவது இந்த கடமைப்பொறுப்பின் இலக்காக அமைந்திருந்தது. முறைசார் மற்றும் முறைசாரா தொழில்துறையில் பெண்களுக்கெதிரான பாகுபாடு தொடர்பான அவதானிப்புகளுக்கு உதவும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் (MWCA) கீழான பெண்கள் தொடர்பான தேசியக் குழு (NCW) இனால் வேலை வாய்ப்பு பற்றிய CEDAW அவதானிப்புகளிலிருந்து கருப்பொருள் பிரிவுகளை முன்னுரிமையளிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டமைக்கு ஆதாரங்கள் எதையும் IRM ஆய்வாளர் பெற்றுக் கொள்ளவில்லை (மைல்கல் 14.1). மாறாக, NCW இனால் எழுமாற்றான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இவற்றில் தொழிலாளர் தொடர்பான சட்டங்களில் திருத்த முயற்சிகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சுவரொட்டிகள் பகிர்ந்தளிப்பு போன்றன அடங்கியிருந்தன.[2]

NCW/MWCA இனால் வேலை வாய்ப்பில் பாலின பாகுபாடு தொடர்பான எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை, இதற்காக தரவுகள் எதுவும் சேகரிக்கப்பட்டிருக்கவுமில்லை (மைல்கல் 14.2).[3] அதுபோன்று, NCW தலைமை அதிகாரி குறிப்பிடுகையில், தொழில்புரியும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆய்வுரை அல்லது வழிமுறைகளை பிரேரிப்பது தொடர்பில் பொது கலந்துரையாடலை அமைச்சு முன்னெடுக்கவில்லை என தெரிவித்தார் (மைல்கல் 14.3). [4] எனவே, அவ்வாறான வழிகாட்டல்களை வடிவமைப்பதை கண்காணிப்பதற்கு பல்துறைசார் பங்காளர் குழுவொன்றை அமைச்சு நிறுவியிருக்கவில்லை. (மைல்கல் 14.4). எவ்வாறாயினும், NCW இனால் CEDAW அவதானிப்புகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம் பற்றி பொதுவில் பகிர்ந்து கொள்வதற்காக ஒரு பல்துறைசார் பங்காளர் கலந்தாலோசனை இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டிருந்தது (மைல்கல் 14.5).[5] இந்த கலந்தாலோசனையை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (முன்னர் FOKUS Women எனப்பட்டது) இன் சிவில் சமூக பிரதிநிதி உறுதி செய்திருந்தார்.[6]

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பின் செயற்படுத்தல் என்பது மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டது.

மைல்கல் 14.1: முறைசார் மற்றும் முறைசாரா வேலை வாய்ப்புகள் தொடர்பான CEDAW அவதானிப்புகளை வெளிப்படையாக முன்னுரிமைப்படுத்தியிருக்கவில்லை என்பதை NCW/MWCA உறுதிசெய்திருந்தது. [7] ஆனாலும், தொழிலில் பெண்களுக்கான அனுபவத்தை மேம்படுத்த உதவக்கூடிய சில செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக NCW குறிப்பிட்டிருந்தது. இவற்றில், முறைசாரா துறையில் கொடுப்பனவு பற்றிய கருத்தாய்வொன்றை முன்னெடுத்தல்; குழந்தை மடுவங்களை நிறுவுதல்; பகல்-வேளையில் குழந்தைகளை பராமரிக்கும் கொள்கையை வடிவமைப்பது மற்றும் தனியார் துறையில் நெகிழ்ச்சியான பணியாற்றல் நேரங்களை அறிமுகம் செய்தல் போன்றன அடங்கியிருந்தன.[8] இந்த முன்னேற்றங்களை CEJ உறுதி செய்திருந்தது.[9]

இருந்தபோதிலும், NCW/MWCA இன் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் செயற்திட்டங்கள் பெரும்பாலும் அவதானிப்புகள் மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற் திட்டம் போன்றவற்றின் அடிப்படையானவை என்பதை NCW தெளிவுபடுத்தியதுடன், இவை இரண்டும் வேலை வாய்ப்பில் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் தொடர்பில் ஒதுக்கங்களை கொண்டுள்ளன.[10] NCW/MWCA இன் திட்டங்கள் CSOகளுடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நடைமுறைப்படுத்தலில் ஈடுபட்ட பங்காளர்கள் பிரதான அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்கள் பற்றி தொடர்ச்சியாக பகிர்ந்திருந்தனர்.[11]

மைல்கல் 14.2: தொழிற்பயிற்சி செயற்பாடுகளில் பெண்களின் பங்குபற்றல் மற்றும் பாகுபாடு தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்கு கருத்தாய்வுகள் அடங்கலாக நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததாக NCW குறிப்பிட்டிருந்தது. இந்த தகவல் அமைச்சின் காலாண்டு சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பெண்கள் அபிவிருத்தி அதிகாரிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டிருந்தது.[12] உள்ளக சஞ்சிகை ஒன்று காணப்பட்ட போதிலும், அவற்றான தகவல்கள் அதில் உள்ளக்கப்பட்டிருந்தமையை உறுதி செய்ய முடியவில்லை என சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தது.[13] முறைசார் மற்றும் முறைசாரா தொழிலில் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும் நோக்கில் இந்த தகவல் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இந்த தகவலை திறந்த தரவு முறையில் அல்லது இணையத்தில் NCW வெளியிடவில்லை.

மைல்கற்கள் 14.3–14.5: இந்த மைல்கற்களில் மத்திய தவணை முதல் எவ்விதமான முன்னேற்றங்களும் பதிவாகவில்லை என்பதை NCW மற்றும் CEJ குறிப்பிட்டிருந்தன.[14] வேலை வாய்ப்பிலுள்ள பெண்களை பாதுகாப்பது தொடர்பான வழிகாட்டல்களை முன்மொழிவதற்கான பொது கலந்துரையாடலை அல்லது அவ்வாறான செயன்முறை ஒன்றை கண்காணிப்பதற்கு பல்துறைசார் பங்காளர் குழுவொன்றை நியமிப்பதற்கான நடவடிக்கையை அமைச்சு முன்னெடுக்கவில்லை.[15] CEDAW அவதானிப்புகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முன்னேற்றங்களை பகிர்ந்து கொள்வதற்கான பல்துறைசார் பங்காளர் கலந்தாலோசனைகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டமை அடங்கலான விடயங்களுக்கு ஆதாரங்கள் எதையும் NCW வழங்கவில்லை.

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கையின் முறைசார் மற்றும் முறைசாரா துறைகளில் பணியாற்றும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்தனர். CEDAW அவதானிப்புகளினூடாக, இந்த பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், விசேட கவனம் தேவைப்படும் பிரிவுகள் இனங்காணப்பட்டிருந்தது. இவற்றில், பெண் வேலைவாய்ப்பின்றி காணப்படுவோரின் உயர் எண்ணிக்கை; திறன் அடிப்படையிலான வேலையில் குறைந்தளவு பெண்கள் காணப்படல்; பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் போதியளவு சட்டங்களின்மை மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களிடையே சமநிலையற்ற கொடுப்பனவு முறைமை போன்றன அடங்கியுள்ளன.[16]

தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், வேலை வாய்ப்பில் பாலின பாகுபாடு தொடர்பான தகவல்களுக்கான அணுகல் மேம்படுத்தப்பட்டு இந்த கடமைப்பொறுப்பினூடாக தகவல் அணுகல் மேம்படுத்தப்பட்டிருக்கும். ஆனாலும், இந்த செயற்பாடு பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன், அதன் காரணமாக தகவல் அணுகலில் மாற்றம் ஏற்படவில்லை. பிரேரிக்கப்பட்டதை போன்று, பொது கலந்துரையாடல்கள் மற்றும் பல்துறைசார் பங்காளர் சந்திப்புகள் (மைல்கற்கள் 14.3 மற்றும் 14.4) இடம்பெறாமையால், CEDAW அவதானிப்புகளின் முன்னேற்றத்தை பகிர்ந்து கொள்வதற்கு பல்துறைசார் பங்காளர் அமர்வு நிறுவப்பட்டமையானது, பொது மக்கள் பங்கேற்பில் எல்லையளவு முன்னேற்றத்தை பதிவு செய்திருந்தது.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், முறைசார் மற்றும் முறைசாரா வேலை வாய்ப்பில் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகளை தவிர்ப்பதற்கு பரந்தளவு செயற்பாடுகள் உள்ளடங்கியிருந்ததை IRM ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளதுடன், இருந்த போதிலும், மட்டுப்படுத்தப்பட்டளவு குறிப்புத்தன்மை மற்றும் சிறியளவிலான தாக்கம் போன்றன பதிவாகியிருந்ததால் அடுத்த செயற்திட்டத்துக்கு இந்த கடமைப்பொறுப்பை கொண்டு செல்லவேண்டியதில்லை என IRM ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார்.

---

[1] In the action plan, milestones pertaining to personal law reform (Commitment 12), gender equality in state land distribution (Commitment 13), and nondiscrimination in formal and informal employment (Commitment 14) are listed under a single commitment. For clarity, these milestones were separated into three different commitments in this report.

[2] Swarna Sumanasekera (Ministry of Women and Child Affairs), interview by IRM researcher, 13 October 2017.

[3] *Id.*

[4] *Id.*

[5] *Id.*

[6] Shyamala Gomez (Centre for Equality and Justice), interview by IRM researcher, 27 October 2017.

[7] Swarna Sumanasekera (Ministry of Women and Child Affairs), interview by IRM researcher, 20 September 2018.

[8] *Id.*

[9] Shyamala Gomez (Centre for Equality and Justice), interview by IRM researcher, 29 September 2018.

[10] Sumanasekera, interview.

[11] *Id.*

[12] *Id.*

[13] Gomez, interview.

[14] Sumanasekera, interview; Gomez, interview.

[15] Sumanasekera, interview; Gomez, interview.

[16] "CEDAW/C/LKA/CO/7" (Human Rights Bodies, United Nations Human Rights, 8 April 2011) http://bit.ly/2EUSlvS.

# கருப்பொருள் 7: அரசியலில் பெண்களின் பங்கேற்பு (Women In Political Governance)

## 15. உள்ளூராட்சி மட்ட அரசியலில் பெண்களின் பங்கேற்பு (Women's Political Participation at the Local Level)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**உள்ளூராட்சி மட்டத்தில் அரசியல் தீர்மானமெடுத்தல் செயன்முறைகளில் பெண்களின் பங்குபற்றலை வலிமைப்படுத்தல்**

இலங்கை அரசியலமைப்பானது ஆண், பெண் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதி செய்வதோடு இந்த விடயத்தில் நேர்மறையான மாற்றங்களை கொண்டு வரும் வகையில் உறுதியான நடவடிக்கைகளின் அவசியப்பாட்டையும் அங்கீகரிக்கின்றது. குறித்த இந்த கடமைப்பொறுப்புகள் இலங்கை மகளிர் உரிமைச்சட்டத்திலும் (1993), தேசிய பெண்களுக்கான செயற்பாட்டின் தேசிய திட்டத்திலும் (1996) உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு அவை அரசியலமைப்பு கடமைப்பொறுப்புகள் மற்றும் CEDAW கடமைப்பொறுப்புகளிலும் பிரதிபலிக்கின்றன. பாலின சமத்துவத்துக்காக மேற்படி கடமைப்பொறுப்புகள் காணப்பட்ட போதிலும், தேசிய மற்றும் உள்ளூராட்சி மட்ட அரசியலில் பெண்களின் பங்கேற்பு வெறும் 6 சதவீதம் எனும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

[…] நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பிற குறிகாட்டிகளில் பெண்களின் நிலைமை சிறப்பாக காணப்பட்டாலும் அரசியலில் பெண்களின் பங்கேற்பானது மிக மிகக்குறைவாக காணப்படுவதானது ஒரு புதிராகவே கருதப்பட வேண்டியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் 25 சதவீத பெண்களின் பங்கேற்பை கட்டாயமாக்கும் வகையில் 2016ம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தல் கட்டளைச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதான குறிக்கோள்:

உள்ளூராட்சி சபைகளில் தகுதியும், தகைமையும் வாய்ந்த பெண்களை வேட்பு மனு தாக்கல் செய்வதையும் தெரிவு செய்யப்படுவதையும் உறுதி செய்தலும் மற்றும் அதன் மூலம், அரசியல் தீர்மானங்கள் மேற்கொள்ளலில் பெண்களின் பங்கேற்பை வலுப்படுத்தலும்.

மைல்கற்கள்:

- 15.1 உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் போட்டியிட திட்டமிட்டுள்ள பயிற்சி பெற்ற பெண்களை ஒன்றிணைத்து வேட்பு மனு தாக்கல் செய்யும் விடயத்தில் அவர்களை பரிந்துரை செய்தல்.
- 15.2 2017ம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு பயிற்சி பெற்ற, தகுதிவாய்ந்த பெண்களின் பெயர்களை அரசியல் கட்சிகள் வேட்பு மனுவில் இடம் பெறச் செய்தல்.
- 15.3 வேட்பு மனு அங்கீகரிக்கப்பட்ட பெண்களுக்கு தமது கட்சியின் சின்னத்தின் கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நிதி மற்றும் ஏனைய உதவிகளை அரசியல் கட்சிகள் செய்து கொடுத்தல்.

- 15.4 2017ம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு பெண்கள் வேட்பு மனு தாக்கல் செய்தது முதல் தேர்தலில் போட்டியிடும் வரையில் அவர்களது பிரச்சார நடவடிக்கைகளை கண்காணித்தல்.

- 15.5 சகல வேட்பாளர்களினதும் (பெண்கள் அடங்கலாக) பெயர் மற்றும் விவரங்களை உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு முன்பதாக பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தல்.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 15. உள்ளூர் அரசியலில் பெண்கள் | | ✔ | | | ✔ | ✔ | | | | | ✔ | | மத்திய தவணை | | ✔ | | | | | ✔ | | |
| | | | | | | | | | | | | | தவணை பூர்த்தி | | ✔ | | | | | | | |

**பொறுப்பான நிறுவனம்:** தேர்தல் ஆணைக்குழு

**துணை நிறுவனங்கள்:** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு; மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு (MWCA)

**ஆரம்ப திகதி:** ஜுன் 2016 **முடிவு திகதி:** மார்ச் 2017

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

உள்ளூராட்சி சபைகளில் தகைமை வாய்ந்த அல்லது பயிற்சி பெற்ற பெண்களை அரசியலில் பங்குபற்றச் செய்வதை[1] வலிமைப்படுத்தும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. குறிப்பாக, இந்த கடமைப்பொறுப்பினூடாக பெண்களின் குரல்கள் வலிமைப்படுத்தப்பட்டு மற்றும் மேம்படுத்தப்பட்டு, உள்ளூராட்சி மட்ட அரசியல் தீர்மானமெடுத்தல்களில் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிக்கும் என அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் வரவேற்றிருந்தனர்.[2]

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்தது. மாற்றுக்கொள்கைகளுக்கான மையத்தின் (CPA) பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், பெண் வேட்பாளர்களின் தெரிவு தகைமையை பூர்த்தி செய்யும் நடவடிக்கையை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு (MWCA) முன்னெடுத்திருந்தது (மைல்கல் 15.1). இந்த தகைமையில் கல்வி, சமூக செயற்பாடுகள் மற்றும் அரசியல் பின்புலம் போன்றன தொடர்பான நெறிமுறைகள் அடங்கியிருந்தன.[3] பாராளுமன்றம், தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சி செயலகங்கள் மற்றும் சிவில் சமூகத்தில் இந்த தகைமைகளை MWCA சமர்ப்பித்து கலந்துரையாடியிருந்தது.[4]

அத்துடன், கடமைப்பொறுப்புக்கு அப்பாற்பட்ட விடயமாக, MWCA இன் கீழ் செயற்படும் பெண்களுக்கான தேசியக் குழு நாடளாவிய ரீதியில் 1000க்கும் அதிகமான எதிர்கால பெண் தலைமைகளுக்கு ஆறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்திருந்தது.[5] அதுபோன்று, CPA இனால் வாய்ப்புடைய பெண் அரசியல் வேட்பாளர்களுக்கு சுயாதீனமான முறையில் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவற்றில் 2500 க்கும் அதிகமான எதிர்கால பெண் தலைமைகளுக்கு ஈடுபாட்டு உரையாடல் மற்றும் கலந்துரையாடல்கள், தோற்ற விழிப்புணர்வு செயற்திட்டங்கள், தகவல்களைக் கொண்ட கையேடுகளை விநியோகித்தல் மற்றும் உள்ளூர் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் மும்மொழிகளிலும் உதவிகள் போன்றன அடங்கியிருந்தன.[6]

எவ்வாறாயினும், அக்காலப்பகுதியில் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் நிரல்படுத்தப்பட்டிருந்த நிலையில், பெண்களின் வேட்பு மனுத்தாக்கல், நிதி மற்றும் இதர உதவிகளுக்கான ஒதுக்கங்கள், பிரச்சாரத் திட்ட கண்காணிப்பு மற்றும் மனுத்தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் விவரங்களை பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. (மைல்கற்கள் 15.2–15.5).

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

சம்பந்தப்பட்ட அரசாங்க பங்காளர்களினால் பெரும்பாலான மைல்கற்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், தவணை பூர்த்தியில் கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தி நிலையை கொண்டிருந்தது.

மைல்கற்கள் 15.1–15.2: 2018 பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்றது, இதில் 17,500க்கும் அதிகமான பெண்கள் அரசியல் கட்சிகளால் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு போட்டியிட்டனர்.[7] இவ்வாறு வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்களில் 1,919 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 535 பேர் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்டதுடன், 1,384 பேர் அரசியல் கட்சி ஏற்பாட்டாளர்களால் விகிதாசார பிரதிநிதித்துவ கட்டமைப்பின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.[8] CPA சிவில் சமூக பிரதிநிதியின் பிரகாரம், வாக்காளர் தெரிவு முறையினூடாக உயர் சதவீத பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையினூடாக, அரசியல் அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு அவசியமான பயிற்சி மற்றும் திறன் போன்றவற்றின் தேவையை வலியுறுத்தப்பட்டிருந்தது.[9] சிவில் சமூகத்தினால் வழங்கப்பட்ட இந்த பயிற்சியில் தலைமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் பற்றிய வெளிப்பாடுகள் அடங்கியிருந்தன.[10] கடமைப்பொறுப்பினூடாக பயிற்சி பெற்ற பெண்களை வேட்புமனுத்தாக்கல் செய்ய அரசியல் கட்சிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்ட போதிலும், அவ்வாறான பயிற்சிக்கான ஒதுக்கம் என்பது இந்த கடமைப்பொறுப்புக்கு

அப்பாற்பட்ட விடயமாக அமைந்திருந்தது. இந்த கடமைப்பொறுப்பின் அங்கமாக, பயிற்சி வழங்கப்பட்டமை தொடர்பில் எவ்விதமான ஆதாரங்களும் காணப்படவில்லை.

மைல்கல் 15.3: தேர்தலுக்கு முன்னர், CSOகளினால் பிரச்சாரத்திட்டங்களுக்கான உதவி பெருமளவு வழங்கப்பட்டிருந்ததாக CPA உறுதி செய்திருந்தது.[11] மேலே விவரிக்கப்பட்டதை போன்று, வாய்ப்புள்ள பெண் வேட்பாளர்களுக்கான அரசியல் தலைமைத்துவ பயிற்சி மற்றும் வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வை மேம்படுத்தல் போன்ற வகையில் இந்த உதவி அமைந்திருந்தது.[12] முழுமூச்சான பிரச்சாரத் திட்ட உதவி என்பது கருத்து வேற்றுமை உருவாக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் என்பதால், அரசாங்கம் பொதுவில் குறைந்த மட்ட பங்களிப்பை பிரச்சார நடவடிக்கைகளில் வழங்கியிருந்தது. குறிப்பிடத்தக்க விடயமாக, MWCA, உள்ளூராட்சி சபை அமைச்சு மற்றும் பாராளுமன்ற பெண்கள் சிறுகுழு சகல பெண் வேட்பாளர்களையும் ஒன்றுதிரட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடை பவனி நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.[13]

மைல்கல் 15.4: வேட்புமனுத்தாக்கல் முதல் தேர்தல் வரையான பிரச்சாரத் திட்டத்தை கண்காணிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தது. [14] வாக்காளர் விழிப்புணர்வு, புதிய கலப்பு அங்கத்தவர் தெரிவு முறை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்காக 25 சதவீத ஒதுக்கீடு போன்ற இதர வகையான விழிப்புணர்வு செயற்பாடுகளில் தேர்தல் ஆணையகம் ஈடுபட்டிருந்தது. CPA தனது சொந்த பிரச்சார செயற்திட்டங்களை முன்னெடுத்திருந்தது, இதில் பெண்களுக்கு தமது தேர்தல் வாக்குறுதிகளை வெளியிடுவதற்கு உதவி மற்றும் ஊக்குவிப்புகள் அடங்கியிருந்தன.[15]

மைல்கல் 15.5: உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு முன்னதாக வேட்பாளர்களின் பெயர் விவரங்களை வெளியிடுவதற்கு அல்லது பகிரங்கப்படுத்துவது தொடர்பில் போதியளவு நடவடிக்கையை ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை என CPA மேலும் உறுதி செய்திருந்தது. மாறாக, வேட்பாளர் பட்டியல் கோரும்பட்சத்தில் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இந்த பட்டியல் இணையத்தில் அல்லது வேறெந்த பொதுவான கட்டமைப்பிலும் பிரசுரிக்கப்படவில்லை.[16]

தவணை பூர்த்தியின் போது இந்த கடமைப்பொறுப்பு பூர்த்தி பற்றிய உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சிமன்ற அமைச்சை மற்றும்/அல்லது ஆணைக்குழுவை தொடர்பு கொள்ள முடியவில்லை.[17]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

இந்த செயற்திட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சி மட்டத்தில் மொத்தமாக காணப்பட்ட மன்ற உறுப்பினர்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது 1.8 சதவீதமாக அமைந்திருந்தது.[18] அரசியல் தீர்மானமெடுத்தல்களில் பெண்களின் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தின் பின்புலத்தில் பல காரணங்கள் காணப்பட்டன.[19] இவற்றில், அரசியல் பிரமுகர்களால் உருவாக்கப்பட்ட ஆணாதிக்க விதிமுறைகள்;[20] மற்றும் அரசியல் பங்குபற்றல் தொடர்பில் ஈடுபாடின்மை அல்லது காணப்படும் வாய்ப்புகள் பற்றி போதியளவு விழிப்புணர்வின்மை போன்றன அடங்கியிருந்தன.[21]

பெண்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீட்டை கட்டாயப்படுத்தி, 2016 பெப்ரவரி மாதத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டமூலத்தில் பாராளுமன்றம் திருத்தத்தை மேற்கொண்ட போதிலும், இந்த முறையினால் மாத்திரம் பயிற்சி பெற்ற பெண்கள் வேட்புமனுத்தாக்கல் செய்வது அல்லது தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்ய முடியாது அல்லது பெண்களினால் அர்த்தமுள்ள வகையில் அரசியல் பங்கேற்பை வெளிப்படுத்த முடியாமலிருக்கும் என பலர் கருதியிருந்தனர்.[22]

தகவல் அணுகலை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு முன்னெடுக்கப்பட்டிருந்துடன், பயிற்சி பெற்ற அல்லது தகைமை வாய்ந்த பெண்களை உள்ளூராட்சிமன்ற தேர்தலினூடாக தெரிவு செய்வதை உறுதி செய்யும் வகையிலும் அமைந்திருந்தது. ஆனாலும், தேர்தலுக்கு முன்னதாக சகல பெண் வேட்பாளர்களின் பெயர் விவரங்களை பிரசுரிக்காததன் காரணமாக, இந்த கடமைப்பொறுப்பின் பெறுபேறாக தகவல் அணுகலில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

பாரிய மட்டத்தில் சிவில் சமூக பங்கேற்பை மேம்படுத்துவதையும் இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டிருந்தது. பயிற்சி பெற்ற பெண்களை உள்ளூராட்சிமன்றகளுக்கு தெரிவு செய்தல் என்பதனூடாக, சமூகத்தின் பரந்தளவு பிரிவினூடாக தீர்மானமெடுத்தல்களில் பங்கேற்பதற்கு வாய்ப்பை வழங்கும். இதன் பிரகாரம், பெண் வேட்பாளர்களுக்கு பொது நடை பவனி நிகழ்வு போன்ற அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்த மட்டுப்படுத்தப்பட்டளவு உதவிகள் சிவில் வாழ்வில் பரந்தளவு ஈடுபாட்டை மேற்கொள்ள வைத்தது. இது பொது மக்கள் பங்கேற்பில் எல்லையளவு மேம்பாட்டை கொண்டிருப்பதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், பயிற்சி பெற்ற பெண்களை உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்வது தொடர்பான மனுத்தாக்கல், தெரிவு செய்யப்படல் மற்றும் பங்கேற்றல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு மேலும் பல செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். குறிப்பாக, மனுத்தாக்கலுக்கு பரிந்துரைப்பது மற்றும் கட்டாயமான அளவுகளை பூர்த்தி செய்வது போன்ற நடவடிக்கைகளுக்கு மேலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதனூடாக உள்ளூர் அரசியல் தீர்மானமெடுத்தல்களில் பங்கேற்பதற்கு பெண்கள் வலுவூட்டப்பட்டவர்களாக அமைந்திருக்க உதவியாக அமைந்திருக்கும் என IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். இந்த பரிந்துரைகளில்: வெற்றிகரமாக மனுத்தாக்கல் செய்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள் பற்றிய நேர்வு பற்றிய ஆய்வுகளை வெளியிடல்; மற்றும் எதிர்கால பெண் தலைமைகளை இலக்காகக் கொண்டு பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல் போன்றன அடங்கியுள்ளன.[23] மேலதிக தகவல்களுக்கு 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

CPA பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண ஆளுநர்களுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்களின் போது, தெரிவு செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் மன்ற உறுப்பினர்களிடையே பல்வேறு பிரச்சினைகள் மற்றும்/அல்லது மாறுபாடுகள் காணப்படுகின்றமையை அறிந்து கொள்ள முடிந்தது.[24] அரசியல் தலைமைத்துவத்துக்காக பெண் மன்ற உறுப்பினர்களுக்கு போதிய ஒருங்கமைப்பு வழங்கப்படாமையை அடிப்படையாகக் கொண்டு இந்த பிரச்சினைகள் அமைந்திருந்தன.[25] இவ்வாறான செயற்பாடுகளை சிவில் சமூகம் முன்னெடுத்திருந்தது –

உதாரணமாக CPA இனால், பெண் மன்ற உறுப்பினர்களுக்கு தமது பணியை சிறந்த முறையில் முன்னெடுப்பது பற்றிய விளக்கங்களை வழங்கும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தது.[26] அடுத்த செயற்திட்டத்தில் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என IRM ஆய்வாளர் பரிந்துரை செய்கின்றார்.

---

[1] Generally, trained women may include those who have benefited from government or civil society programs that aim to strengthen political leadership through raising awareness on various pertinent topics. These topics may include gender, good governance, human rights, local government legislation, or even practical competencies such as mobilizing grassroot support and campaign financing. See also C. Kodikara, The Struggle for Equal Political Representation of Women in Sri Lanka: A Stocktaking Report for the Ministry of Child Development and Women's Empowerment and the United Nations Development Programme (New York: United Nations, 2009), http://bit.ly/2HXpyJg.
[2] S. Boralessa (Ministry of Provincial Councils and Local Government), interview by IRM researcher, 27 September 2017; S. Sumanasekara (Ministry of Women and Child Affairs), interview by IRM researcher, 13 October 2017. See also Law and Society Trust, Women's Political Representation in Local Government Institutes: 25% Quota and Way Forward (16 February 2016) http://lawandsocietytrust.org/content_images/publications/documents/english-20160602150738.pdf.
[3] Sriyanie Wijesundara, interview by IRM researcher, 10 October 2017.
[4] *Id.*
[5] Swarna Sumanasekera (Ministry of Women and Child Affairs), interview by IRM researcher, 10 October 2017.
[6] Wijesundara, interview.
[7] Sriyanie Wijesundara, interview by IRM researcher, 14 September 2018.
[8] *Id.*
[9] *Id.*
[10] See note 1.
[11] Wijesundara, interview.
[12] See https://www.cpalanka.org/strengthening-womens-political-representation-at-local-level/
[13] Wijesundara, interview.
[14] *Id.*
[15] *Id.*
[16] *Id.*
[17] The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and/or email, and through the point of contact at the Presidential Secretariat.
[18] T. Ariyaratne, "Electoral Reforms: Where Are the Women?" (Sunday Observer, 17 May 2015) http://archives.sundayobserver.lk/2015/05/17/fea10.asp; C. Kodikara, "Sri Lanka: Where Are the Women in Local Government?" (Open Democracy 50.50, 7 March 2011) https://www.opendemocracy.net/5050/chulani-kodikara/sri-lanka-where-are-women-in-local-government/.
[19] C. Kodikara, The Struggle for Equal Political Representation of Women in Sri Lanka; Hemanthi Goonasekera (FSLGA), interview by IRM researcher, 22 September 2017; Prof. Swarna Jayaweera, Prof. Chandra Gunawardena, Dr. Ramani Jayatilaka, and Girty Gamage (CENWOR), interview by IRM researcher, 3 October 2017.
[20] Kodikara, "Sri Lanka: Where Are the Women in Local Government?"
[21] Goonasekera, interview.
[22] M. Phillips, "The Necessity of Increasing Women's Political Representation in Sri Lanka" (Centre for Poverty Analysis, 26 May 2015) http://bit.ly/2oC1a82.
[23] Dr. Ramani Jayasundere (The Asia Foundation), interview by IRM Researcher, 17 October 2017; Goonasekera, interview; Dr. Gopa Kumar Thampi, interview by IRM researcher, 15 October 2017.
[24] Wijesundara, interview.
[25] *Id.*
[26] *Id.*

# கருப்பொருள் 8: ஊழல் மோசடி (Corruption)

## 16. ஊழல் தடுப்பு கட்டமைப்பில் பொது மக்கள் பங்கேற்பு (Public Participation in Anti-Corruption Framework)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**ஆக்கபூர்வமான பொதுப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல் (பகுதி I)**

[…]

பிரதான குறிக்கோள்:

மைல்கற்கள்:

- 16.1 தேசிய ஊழல் எதிர்ப்பு மாநாடு ஒன்றினை அரசாங்கம் நடாத்துதல்

- 16.2

  a) இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) ஆண்டிற்கான ஊழல் எதிர்ப்பு மற்றும் ஊழல் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான செலவினங்கள் அடங்கிய வரவு செலவு திட்ட வரைபினை பொது நியாயப்படுத்தல்களுடன் நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்தல்;

  b) கோரப்பட்ட மதிப்பீடுகளை அரசு வருடாந்த வரவு செலவு திட்டம் மூலம் ஒதுக்கீடு செய்வதோடு ஒதுக்கீட்டில் வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பின் அது சம்பந்தமாக பொது நியாயப்படுத்தல்களையும் முன்வைத்தல்;

  c) இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் பற்றிய எவ்வித பாரபட்சமுமின்றி 2017ம் ஆண்டிற்கான வருடாந்த செலவீன ஒதுக்கீடுகள் மற்றும் செலவீனங்களை பகிரங்கமாக அறிக்கையிடல்.

- 16.3 இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையுடன் கலந்தாலோசித்து நிறுவனங்களுக்கிடையிலான ஊழல் மோசடி தடுப்பு சபை ஒன்றை நிறுவும். இந்த அமைப்பானது இலங்கையின் ஒட்டு மொத்த ஊழல் தடுப்பு செயற்பாட்டின் பொறுப்பாளராக செயற்படும். இரண்டு வருட ஊழல் எதிர்ப்பு செயற்திட்ட வரைபினை வடிவமைக்கும் வகையில் இந்த சபையினால் அரச, தனியார் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளும். இந்த செயற்திட்ட வரைபானது அரசு, தனியார் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கு பின்வரும் இலக்குகளை வழங்குதல்:

  a) அரச நிறுவனங்களில் பிரதானமாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,

b) தெளிவான மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை உறுதிப்படுத்தல்,

c) ஊழல் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் போதுமான வளங்களை வழங்கல்,

d) ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பு பற்றிய ஒரு முழுமையான மற்றும் வலுவான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஊழல் தடுப்பு செயற்திட்டத்தை உருவாக்குதல் (உதாரணம்: தேசிய ஒன்றிணைப்பு கட்டமைப்பு மதிப்பீடு),

e) செயற்திட்ட வடிவமைப்பின் போது அரச சார்பற்ற நிறுவனங்களின், அதிலும் குறிப்பாக சிவில் சமுதாயத்தின் அர்த்தமுள்ள பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல்.

- 16.4 ஊழலுக்கு தமது முழுமையான எதிர்ப்பை காட்டும் வகையில் ஓர் சத்தியப்பிரமாணம் / ஒரு பிரகடனத்தை சகல அரச அலுவலகங்களின் முன்வாயில்களில் காட்சிப்படுத்துவதோடு அவற்றில் ஊழல் குற்றச்சாட்டுகளை முறையிடக்கூடிய வகையில் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) முறைப்பாட்டு தொலைபேசி இலக்கங்களும் காட்சிப்படுத்தப்படல்.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை<br>தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 16. ஊழல் மோசடி தவிர்ப்பில் பொது மக்களின் பங்கேற்பு | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | | |

**பொறுப்பான நிறுவனம்:** இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC)

**துணை நிறுவனம்:** ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

ஊழல் மோசடி தவிர்ப்பு செயற்பாடுகள் மற்றும் செயன்முறைகளில் பொது மக்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை மேம்படுத்துவதனூடாக, ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலிமைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. இந்த கடமைப்பொறுப்பினூடாக, ஊழல் மோசடி தவிர்ப்பு தீர்மானங்கள், கண்காணிப்புகளை மேற்கொள்வது மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை அறிவிப்பது போன்றவற்றை நடைமுறைப்படுத்த பொது மக்களுக்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருக்கும் என அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் தெரிவித்திருந்தனர்.[2]

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்தது. தேசிய ஊழல் மோசடி தவிர்ப்பு தினத்தை குறிக்கும் வகையில், 2016 டிசம்பர் 9 ஆம் திகதி தேசிய ஊழல் மோசடி தவிர்ப்பு மாநாடொன்றை அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்ததை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) உறுதி செய்திருந்தது. (மைல்கல் 16.1).[3] இந்த கடமைப்பொறுப்பின் ஏனைய சகல உள்ளடக்கங்களும், பூர்த்தியாகாத நிலையில் அல்லது ஆரம்பிக்கப்படாத நிலையில் காணப்பட்டன.

CIABOC இனால் மதிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட செலவீனங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான தேசிய வரவு செலவுத் திட்டங்களினூடாக வழங்கப்பட்டிருந்தன. (மைல்கல் 16.2). 2018 நிதியாண்டுக்காக வெளியிடப்பட்டிருந்த முழு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் சம்பந்தப்பட்ட விவரங்களை அரசாங்கம் உள்ளடக்கியிருந்தது.[4] CIABOC இனால் அதன் செலவீனங்கள் பற்றிய அடிப்படை விவரங்களை உள்ளடக்கிய வருடாந்த நிதி அறிக்கை ஒன்றை 2016 ஆம் ஆண்டில் மூன்று மொழிகளிலும் வெளியிட்டிருந்தது.[5] எவ்வாறாயினும், ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் (TISL) பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், வரவு செலவுத் திட்டம் தொடர்பாக பொது மக்களுக்கு நியாயப்படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவு ஆதாரங்கள் மட்டுமே காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.[6]

ஊழல் மோசடி தவிர்ப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பது மற்றும் ஊழல் எதிர்ப்பு செயற்திட்ட வரைபை வடிவமைக்கும் நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் CIABOC இனால் நிறுவனங்களுக்கிடையிலான ஊழல் மோசடி தடுப்பு சபை நிறுவப்படவில்லை (மைல்கல் 16.3).[7] ஊழல் மோசடி தவிரப்பு பொறிமுறைகளை பற்றி ஆராய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட பங்காளர்களுடன் CIABOC சந்திப்பொன்று முன்னெடுக்கப்பட்ட போதிலும், இந்த கலந்துரையாடலினூடாக ஒரு சில உறுதியான முன்னேற்றகரமான செயற்பாடுகள் வெளிப்பட்டிருந்ததாக TISL குறிப்பிட்டிருந்தது.[8] மத்திய தவணை காலப்பகுதியில் சத்தியப்பிரமாணம் / ஒரு பிரகடனத்தை அறிமுகம் செய்வது பற்றிய முறையான கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதை CIABOC மற்றும் TISL ஆகியன உறுதி செய்திருந்தன (மைல்கல் 16.4).[9]

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில், இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது.

மைல்கல் 16.1: பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

மைல்கல் 16.2: TISL பிரதிநிதியின் பிரகாரம், மத்திய தவணை காலப்பகுதியில் வெளியிடப்பட்டிருந்த தேசிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் பற்றிய நியம வெளிப்படுத்தல்களின் பின்னர் மேலதிகமாக வேறெந்த தகவல்களும் இது தொடர்பில் CIABOC இனால் வெளிப்படுத்தப்படவில்லை.[10]

மைல்கல் 16.3: 2017 டிசம்பர் மாதத்தில், ஊழல் மோசடி தவிர்ப்பு தொடர்பில் தேசிய செயற்திட்டமொன்றை வடிவமைப்பது பற்றிய தனது எதிர்பார்ப்பை CIABOC வெளிப்படையாக அறிவித்திருந்தது.[11] தபால், மின்னஞ்சல், தொலைநகல் அல்லது CIABOC இணையத்தளத்தினூடாக பொது மக்கள் பங்காளர்களிடமிருந்து பரிந்துரைகளையும் பிரேரணைகளையும் வழங்குமாறு CIABOC அழைப்புவிடுத்திருந்தது.[12] பரிந்துரைகள் மற்றும் பிரேரணைகளை வழங்கும் செயன்முறையில் பொது மக்களின் ஈடுபாடு மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டதாக சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தது.[13]

தவணை பூர்த்தியில், ஊழல் மோசடி தவிர்ப்பு செயற்திட்டம் வடிவமைக்கப்பட்ட நிலையிலுள்ளதாகவும், அதன் உள்ளடக்கங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் TISL உறுதி செய்திருந்தது. வடிவமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள், உள்ளடக்கமானவையாகவும், சிவில் சமூக பங்களிப்புகளை உள்ளடக்கியதாகவும் அமைந்திருந்தது. [14] CIABOC இனால் நிறுவனங்களுக்கிடையிலான தவிர்ப்பு சபை ஒன்று உருவாக்கப்படாத போதிலும், குறித்த பிரேரிப்புத் திட்டமானது நடைமுறைப்படுத்தலின் போது நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதை வலியுறுத்துவதாக அமைந்திருக்கும் என TISL பரிந்துரைத்திருந்தது.[15]

மைல்கல் 16.4: TISL இன் பிரகாரம், திட்டத்தின் வடிவமைப்பு தொடர்பான ஆரம்ப நிலை கலந்துரையாடல்களின் மூலமாக, ஊழல் மோசடி தொடர்பான சத்தியப்பிரமாணம் / ஒரு பிரகடனம் உடன் நிகழ்கின்ற முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.[16]

கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு CIABOC உடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.[17]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**
**தகவல் அணுகல்: எல்லையளவு**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

செயற்திட்டத்தின் பிரகாரம், ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பு வடிவமைப்பில் பொது மக்களின் பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்திருந்தது. அரச துறையில் உயர் மட்ட ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக மக்கள் அறிந்து கொண்டனர்,[18] சில பொது மக்களுடன் நேரடியாக தொடர்பை

பேணும் அரச நிறுவனங்களான காவல்துறை மற்றும் சுங்கம் போன்றன ஊழல் மோசடி செயற்பாடுகளுக்கு அதிக வெளிப்பாடுகளை கொண்டிருந்தன.[19] இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு, 2016 ஆம் ஆண்டின் ஊழல் வெளிப்படுத்தல் சுட்டியில் தரப்படுத்தப்பட்டிருந்த 176 நாடுகளில் 95 ஆம் இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் தரப்படுத்தலிலிருந்து 12 நிலைகள் குறைந்திருந்தது.[20] 2017 ஆம் ஆண்டுக்கான சுட்டியில், இலங்கை இரண்டு புள்ளிகளை பெற்று, 4 நிலைகள் முன்னேறி, மொத்தமாக தரப்படுத்தப்பட்ட 180 நாடுகளில் 91 ஆம் இடத்தில் காணப்பட்டது.[21] கவனத்தில் கொள்ளப்படும் நாடுகளின் எண்ணிக்கையில் வருடாந்தம் மாற்றம் ஏற்படுகின்றமை காரணமாக இந்த தரப்படுத்தலை ஒப்பீட்டுக்காக கவனத்தில் கொள்ள முடியாத போதிலும், இலங்கையில் ஊழல் மோசடி தொடர்பில் பொது மக்களின் உணர்வில் எல்லையளவு முன்னேற்றம் பதிவாகியுள்ளமையை புலப்படுத்தியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை இந்த கடமைப்பொறுப்பு பதிவு செய்துள்ள நிலையில், இந்த முன்னேற்றத்தை கடமைப்பொறுப்புடன் தொடர்புபடுத்துவது என்பது பெருமளவில் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பு வரைவில் பொது மக்களின் பங்கேற்றலை அறிமுகம் செய்யவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. இதனூடாக, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் நேரடியாக பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கப்பட்டது. முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், CIABOC வரவு செலவுத் திட்டத்தை பொது மக்களுக்கு பார்வைக்கு வழங்கியிருந்ததனூடாக நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் அணுகல் போன்றவற்றில் இந்த கடமைப்பொறுப்பு மேம்பாட்டை ஏற்படுத்தியிருக்கும். இந்த செயற்பாட்டை CIABOC முழுமையாக செயற்படுத்தவில்லை என சிவில் சமூகம் குறிப்பிட்ட போதிலும்,[22] வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய செலவீனங்கள் பற்றிய பிரசுரங்களினூடாக, தகவல் அணுகலில் இந்த கடமைப்பொறுப்பு எல்லையளவு அதிகரிப்பை ஏற்படுத்த பங்களிப்பு வழங்கியிருந்தது.[23]

அதுபோன்று, நிறுவனங்களுக்கிடையிலான ஊழல் மோசடி தடுப்பு சபை ஸ்தாபிக்கப்படுவதனூடாக, ஊழல் மோசடி தவிர்ப்பு தொடர்பான தீர்மானமெடுத்தல்களில் சிவில் சமூகத்துக்கு பெருமளவு வாய்ப்பை வழங்கியிருக்கும்.[24] CIABOC இனால் இந்த சபை நிறுவப்படாத போதிலும், ஊழல் மோசடி தவிர்ப்பு செயற்திட்டத்தின் வடிவமைப்புக்காக பொது மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் சமூக பிரதிநிதிகளிடமிருந்து பரிந்துரைப்புகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான அழைப்புகள் போன்றன மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த செயற்பாடு பொது மக்கள் ஈடுபாட்டில் எல்லையளவு முன்னேற்றத்தை பிரதிபலித்திருந்தது என்பதற்கு சிவில் சமூகம் உடன்பட்டிருந்தது.[25]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், பூர்த்தியாக்கப்படும் வரை இந்த கடமைப்பொறுப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். அத்துடன், கடமைப்பொறுப்புக்கு மேலதிகமாக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் தாக்கத்தை மேம்படுத்தக்கூடிய செயற்பாடுகள் போன்றவற்றையும் ஆய்வாளர் பிரேரித்திருந்தார். இவற்றில்: CIABOC வரவு செலவுத்திட்ட செயன்முறையில் பொது மக்களை பங்கேற்கச் செய்வதற்கான ஒதுக்கங்கள் மற்றும் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல்; இந்த செயன்முறை தொடர்பாக எழும் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பொது மக்களுக்கு முகப்பான பொறிமுறைகளை வழங்கல்; பரந்தளவு ஊழல் தவிர்ப்பு நிகழ்ச்சி நிரலை பின்தொடரும் வகையில் ஊழல் தவிர்ப்பு செயற்திட்டத்தை

விரிவாக்கம் செய்தல் மற்றும் தவிர்ப்பு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பீடு செய்வதற்காக சுயாதீனமான, பல்துறைசார் பங்காளர் குழுவை நிறுவுதல் போன்றன அடங்கியிருந்தன.

---

1 In the action plan, all milestones pertaining to corruption are listed under a single commitment. For clarity, these milestones have been separated in this report into six different commitments (Commitments 16–21), each exploring distinct components of the anti-corruption framework.

2 Sarath Jayamanne (Commission to Investigate Allegations of Bribery or Corruption), interview by IRM researcher, 20 September 2017; Asoka Obeyesekere (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 29 August 2017.

3 A. Mallawaarachchi, "National Anti-Corruption Summit on December 9" (Daily News) http://dailynews.lk/2016/12/01/local/100709.

4 Budget Estimates 2018 – Volume I (Ministry of Finance, Fiscal Year 2018) 39, http://bit.ly/2rPTG5v.

5 Annual Report on Bribery and Corruption – 2016 (Commission to Investigate Allegations of Bribery or Corruption, 2016) 87, https://www.ciaboc.gov.lk/images/annual_reports/Annual_Report_2016.pdf.

6 Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 17 October 2017.

7 Jayamanne, interview; Gunaratne, interview.

8 Gunaratne, interview.

9 Jayamanne, interview; Gunaratne, interview.

10 Maheshi Herat (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 27 September 2018.

11 A. Mallawaarachchi, "National Action Plan to Combat Bribery and Corruption" (Daily News, 28 December 2017) http://bit.ly/2BzZsYq.

12 "Suggestions and Proposals for the National Action Plan to Eradicate Corruption from Sri Lanka," (Commission to Investigate Allegations of Bribery or Corruption, 2017) https://www.ciaboc.gov.lk/contact/suggestions.

13 Herat, interview.

14 *Id.*

15 *Id.*

16 *Id.*

17 The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and email.

18 "Sri Lanka Becomes More Corrupt" (Daily Mirror, 25 January 2017) http://bit.ly/2k31ICt.

19 "Sri Lankans Pay More Bribes to Police: TI" (Daily Mirror, 11 March 2017) http://bit.ly/2GDAw6f.

20 Corruption Perceptions Index (Transparency International, 25 January 2017) http://bit.ly/2j3Y63K.

21 Corruption Perceptions Index (Transparency International, 2 February 2018) https://bit.ly/2BJaDBF.

22 Herat, interview.

23 Annual Report on Bribery and Corruption – 2016 (Commission to Investigate Allegations of Bribery or Corruption, 2016) 87, https://www.ciaboc.gov.lk/images/annual_reports/Annual_Report_2016.pdf.

24 Obeyesekere, interview; Gunaratne, interview.

25 Herat, interview.

## 17. ஐ.நா. ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் (UNCAC) கடப்பாடுகள் மற்றும் ஊழலுக்கெதிரான சட்டக்கட்டமைப்பு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் (Implementation of UNCAC Obligations and Constitution Reform)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**ஆக்கபூர்வமான பொதுப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல் (பகுதி II)**

[…]

பிரதான குறிக்கோள்:

மைல்கற்கள்:

- 17.1 இலங்கையில் UNCAC இன் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயல்திட்டத்திலுள்ளவாறு கட்டாயமான மற்றும் கட்டாயமற்ற பரிந்துரைகளை (1-15) நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கண்காணிப்பதற்காக அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் உள்ளடங்களான பல்துறைசார் பங்காளர் கண்காணிப்புக் குழுவினை அரசாங்கம் நிறுவுதல்.

- 17.2 அராங்கமானது அதன் அரச கொள்கையின் வழிகாட்டுக் கோட்பாடுகளில் ஊழலிருந்து சுதந்திரம் தொடர்பான புதிய சட்டத்தை, அதன் கொள்கை தயாரிப்பின் ஒரு பகுதியாக உள்ளடக்குவது தொடர்பில் ஆராய்தல்.

**பொறுப்பான நிறுவனம்:** இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC)

**துணை நிறுவனம்:** ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்புக்கு பின்வரும் விடயங்களினூடாக வலிமை சேர்க்கும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. a) ஐ.நா. ஊழலுக்கெதிரான சமவாயத்தின் (UNCAC) கடப்பாடுகள் நடைமுறைப்படுத்தலை கண்காணித்தல் மற்றும் b) ஊழலிலிருந்து விடுபட்ட அரசியலமைப்பு சுதந்திரத்தை கௌரவித்தல்.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மத்திய தவணை காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படவில்லை. UNCAC கடப்பாடுகள் நடைமுறைப்படுத்தலை கண்காணிக்கும் பல்துறைசார்பங்காளர் சபை ஒன்று நியமிக்கப்படவில்லை என்பதை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) மற்றும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL) ஆகியன உறுதி செய்திருந்தன (மைல்கல் 17.1).[2]

அதுபோன்று, அரசியலமைப்பில் ஊழலின்மை சுதந்திரத்தை உள்வாங்கும் ஒதுக்கமொன்றை இந்த கடமைப்பொறுப்பு மேலோட்டமாக குறிப்பிட்ட போதிலும், இந்த விடயம் தொடர்பாக எவ்விதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதை அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் ஆகியன இணைந்து உறுதி செய்திருந்தன (மைல்கல் 17.2).[3] CIABOC இன் பணிப்பாளர் நாயகத்தின் பிரகாரம், இந்த ஒதுக்கத்தை அறிமுகம் செய்யும் பொறுப்பு அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் முகவர்கள் அல்லது முகவர் அமைப்புகளில் பிரதானமாக தங்கியுள்ளதாக அறிந்து கொள்ள முடிந்தது (உதாரணம்: தேர்தல் ஆணைக்குழு).[4]

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 17. ஊழலுக்கெதிரான UNCAC கடப்பாடுகளையும் அரசியலமைப்பு திருத்தங்களையும் நடைமுறைப்படுத்தல் | | | ✔ | | | ✔ | | | | ✔ | | | மத்திய தவணை: ✔ | | | | | ✔ | | | |
| | | | | | | | | | | | | | தவணை பூர்த்தி: ✔ | | | | | | | | |

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எவ்விதமான முன்னேற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

மைல்கல் 17.1: TISL, CIABOC ஆகியவற்றின் பிரகாரம், அவற்றினால் UNCAC கடப்பாடுகள் நடைமுறைப்படுத்தலை கண்காணிக்கும் சபை ஒன்று நிறுவப்பட்டதை உறுதி செய்யவில்லை.[5]

மைல்கல் 17.2: ஊழலில்லாத அரசியலமைப்பை கொண்டிருப்பது தொடர்பான திருத்தங்களை அரசியலமைப்பில் மேற்கொள்வதற்கு எவ்விதமான கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை என்பது TISL இனால் உறுதி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், CIABOC இனால் சுயாதீனமான முறையில் தற்போது காணப்படும் அரசியலமைப்பில் உள்ளடங்கியிருக்கக்கூடிய ஊழல் மோசடி தவிர்ப்பு பற்றிய குறிப்புகளை தனது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.[6]

இந்த விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை பெற்றுக் கொள்ள CIABOC ஐ சென்றடைய முடியவில்லை.[7]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**

செயற்திட்டத்தின் பிரகாரம், UNCAC இன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான பரிந்துரைகளை வழங்குவதில் பொது மக்களின் பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்டளவு காணப்பட்டது.[8] UNCAC இன் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆணை இலங்கை அரசியலமைப்பின் 156A சரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[9]

இந்த கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிக்கும் பல்துறைசார் பங்காளர் குழு ஒன்றை நிறுவுவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. அதனூடாக, பொது மக்களின் பங்கேற்பை தீர்மானமெடுத்தல்களில் அதிகரிக்கச் செய்வதில் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும். ஆனாலும், CIABOC இனால் இந்த கண்காணிப்பு சபை நிறுவப்படாததால், பொது மக்கள் பங்கேற்புடன் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் இந்த கடமைப்பொறுப்பு பங்களிப்பு வழங்கவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், UNCAC கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை IRM ஆய்வாளர் வலியுறுத்தியிருந்ததுடன், ஊழலிலிருந்து பாதுகாக்கப்பட்ட அரசியலமைப்பை அறிமுகம் செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். எனவே, இந்த கடமைப்பொறுப்பை அடுத்த செயற்திட்டத்துக்கும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார்.

எவ்வாறாயினும், உறுதியான நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகளினூடாக இந்த கடமைப்பொறுப்பின் தாக்கத்தை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக, பிரேரிக்கப்பட்ட கண்காணிப்பு குழுவினால் நடவடிக்கைகளை வலிந்து முன்னெடுப்பது அல்லது UNCAC கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட அரச பங்காளர்களிடமிருந்து முன்னேற்ற அறிக்கைகளை வெளிப்படுத்தல் அல்லது ஊழல் மோசடி தவிர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரந்தளவு செயற்பாடுகள் (கடமைப்பொறுப்பு 16 ஐ பார்க்கவும்).

[1] In the action plan, all milestones pertaining to corruption are listed under a single commitment. For clarity, the milestones in this report have been separated into six different commitments (see 16–21), each looking at distinct components of the anti-corruption framework.
[2] Sarath Jayamanne (Commission to Investigate Allegations of Bribery or Corruption), interview by IRM researcher, 20 September 2017; Sankhitha Gunaratne (Transparency International), interview by IRM researcher, 17 October 2017.
[3] *Id.*
[4] Jayamanne, interview.
[5] Maheshi Herat (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 27 September 2018.
[6] Suggestions and Proposals for the National Action Plan (Commission to Investigate Allegations of Bribery or Corruption) https://www.ciaboc.gov.lk/prevention.
[7] The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and email.
[8] Herat, interview.
[9] Sri Lanka Const. (as amended up to 15 May 2015), Nineteenth Amendment, p. 48, http://slembassyusa.org/downloads/19th_Amendment_E.pdf.

## 18. ஊழலுக்கு எதிராக இயங்கும் முகவர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு (Coordination among Anti-Corruption Agencies)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

பிரதான குறிக்கோள்:

மைல்கற்கள்:

- 18.1 அரசாங்கம் CIABOC உடன் இணைந்து தற்போது ஊழல் விசாரணைகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் முயற்சிகள் இருபடியாவதை தவிர்ப்பதை உறுதிசெய்து (உதாரணம்: CIABOC சட்டத்தின் s.17 பிரிவில் திருத்தங்களை மேற்கொள்வது), தகவல் பரிமாற்றத்தை அதிகரித்து, ஊழலைத் தவிர்ப்பதற்காக விசேட மற்றும் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளுவதன் பொருட்டு, அவற்றின் கடமைகளை மீளாய்வு செய்வதற்காக அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் உள்ளடங்கலான தனிநோக்குக் கொண்ட பல்துறைசார் பங்காளர் கண்காணிப்புக் குழுவினை நிறுவுதல்.

- 18.2 ஊழல் விசாரணைகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் ஆணைகளை மீளாய்வு செய்யும் பல்துறைசார் பங்காளர் கண்காணிப்புக் குழு அதன் அவதானிப்புகளை பொது இணையத்தளத்தில் வெளியிடுதல்.

- 18.3 ஊழல் விசாரணைகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் ஆணைகளை மீளாய்வு செய்யும் பல்துறைசார்பங்காளர் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகளை அரசும் CIABOC உம் இணைந்து அமுல்படுத்த வேண்டும் மற்றும் ஒவ்வொரு முகவர் அமைப்பும் வருடாந்தம் பொது மக்கள் பார்வைக்கு இருபடியான சந்தர்ப்பங்கள் குறித்த அறிக்கையை வெளியிடல்.

- 18.4 அவ்வாறான குழுவின் கண்டறிதல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை சிவில் சமூகம் வெளிப்படையாக கண்காணித்தல்.

**ஆக்கபூர்வமான பொதுப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல் (பகுதி III)**

**பொறுப்பான நிறுவனம்:** இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC)

**துணை நிறுவனம்:** ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் பக்காக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 18. ஊழலுக்கெதிரான முகவர்களை ஒருங்கிணைப்பு | | | ✔ | | ✔ | ✔ | | | | | ✔ | | ✔<br>✔ | | | | | ✔ | | | |

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பிரதான ஊழல் தடுப்பு முகவர் அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதனூடாக ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலிமைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. இந்த முகவர் அமைப்புகளிடையே சிறந்த முறையில் ஒருங்கிணைப்பு பேணப்படுவது மற்றும் தகவல் பகிர்வு இடம்பெறுவதனூடாக ஊழல் விசாரணைகளை மேம்படுத்த உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகளவு வாய்ப்புகளை உருவாக்குவதாக அமையும் என அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் கருதியிருந்தனர்.[2]

**நிலை**

**மத்திய தவணை: ஆரம்பிக்கப்படவில்லை**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்படவில்லை. CIABOC இனால் பல்வேறு ஊழல் தவிர்ப்பு முகவர் அமைப்புகளின் ஆணைகளை மீளாய்வு செய்வதற்காக பல்துறைசார் பங்காளர் குழுவொன்றையும் நிறுவப்படவில்லை (மைல்கல் 18.1). இதன் பெறுபேறாக, இந்த கடமைப்பொறுப்பின் கீழான ஏனைய எந்தவொரு மைல்கற்களும் ஆரம்பிக்கப்படவில்லை. (உதாரணமாக: குழுவின் பரிந்துரை வெளியீடு, நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு) (மைல்கற்கள் 18.1–18.4).

CIABOCஇன் பிரகாரம், ஊழலை கட்டுப்படுத்த வெவ்வேறு முகவர் அமைப்புகள் வெவ்வேறு விடயங்கள் தொடர்பில் முறையான நோக்கெல்லையை கொண்டிருந்தன.[3] CIABOC இன் பணிப்பாளர் நாயகத்தின் பிரகாரம், ஆணைகளை நெறிப்படுத்துவதற்கு வெவ்வேறு முகவர் அமைப்புகளை கட்டுப்படுத்தும் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது.[4]

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)வின் சிவில் சமூக பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், இந்த கடமைப்பொறுப்பின் போதியளவு செயற்படுத்தப்படாமை உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தினால் ஜனாதிபதி செயற்குழு ஒன்று – களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்பு செயற்குழு நிறுவப்பட்டிருந்ததை உறுதி செய்ய முடிந்தது.[5] சொத்துக்கள் மீட்சி தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்யும் வகையில் இந்த குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த குழுவில் CIABOC, நிதிக்குற்ற விசாரணை பிரிவு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு அலகு போன்றன பிரதான ஊழல் மோசடி தவிர்ப்பு பங்காளர்கள் அடங்கியிருந்தனர்.[6] TISL இன் பிரகாரம், இந்த செயற்குழுவின் நடவடிக்கைகளினூடாக, பிரதான பங்காளர்களினால் வெவ்வேறு முகவர் அமைப்புகளின் ஒன்றையொன்று தழுவிய ஆணைகள் இனங்காணப்பட்டிருந்தன. ஆனாலும், இந்த தகவல் பொது மக்கள் பார்வைக்கு வழங்கப்படவில்லை.[7]

**தவணை பூர்த்தி: ஆரம்பிக்கப்படவில்லை**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்படவில்லை.[8] இந்த விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை பெற்றுக் கொள்ள CIABOC ஐ சென்றடைய முடியவில்லை.[9]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**தகவல் அணுகல்:** மாற்றமில்லை

**பொது மக்கள் பங்கேற்பு:** மாற்றமில்லை

செயற்திட்டத்தின் பிரகாரம், இலங்கையில் ஊழல் மோசடி தவிர்ப்பு தொடர்பான பொதுவான கட்டமைப்பின் காரணமாக, ஊழல் மோசடி தவிர்ப்பு முகவர் அமைப்புகளுக்கு தமக்கிடையே பொதுவான இலக்குகள் மற்றும் ஆணைகளை கொண்டிருந்த போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கான வழிகோலலை ஏற்படுத்தியிருந்தது. இதன் பெறுபேறாக முகவர் அமைப்புகள் ஒன்றையொன்று தழுவிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருந்ததுடன், ஊழல் ஒழிப்பு முயற்சிகளில் தொடர்புகளை பேண முடியாத நிலையையும் கொண்டிருக்க வேண்டியிருந்தது.[10]

இந்த கடமைப்பொறுப்பினூடாக இந்த விடயங்கள் தொடர்பில் தீர்வு காண்பதற்கு பல்துறைசார் பங்காளர் குழுவொன்றை நிறுவி, ஊழல் தவிர்ப்பு முகவர் அமைப்புகளின் ஆணைகளை மீளாய்வு செய்து, அதனூடாக: a) இருபடியாகும் சந்தர்ப்பங்களை அறிக்கையிடல், b) முகவர் அமைப்புகளிடையே தகவல் பகிர்வை மேம்படுத்தல்; மற்றும் c) விசேட மற்றும் சுயாதீனமான ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை ஊக்குவித்தல் போன்றவற்றை எய்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்த குழுவின் கண்டறிதல்களை வெளியிடுவதனூடாக, தகவல் அணுகல் மேம்படுத்தப்படும். குழுவில் பல்துறைசார் பங்காளர் அங்கத்தவர்களை கொண்டிருப்பதனூடாக, அரச சாராத துறைகளில் தீர்மானமெடுத்தல்களில் பொது மக்கள் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்.

எவ்வாறாயினும், இந்த குழு நிறுவப்படாததால், கண்டறிதல்கள் வெளியிடப்படவில்லை. இதன் காரணமாக அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மைக்கு இந்த கடமைப்பொறுப்பு பங்களிப்பு வழங்கியிருக்கவில்லை. TISL இதனை போதியளவு முன்னேற்றமின்மை என உறுதி செய்திருந்ததுடன், செயற்திட்ட வடிவமைப்பு தொடர்பில் பல்துறைசார் பங்காளர் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதை உறுதி செய்திருந்ததுடன், பங்காளர்கள் பிரேரிக்கப்பட்ட ஊழல் தவிர்ப்பு செயற்திட்டத்தில் இரகசிய ஒதுக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்ததையும் குறிப்பிட்டிருந்தது (கடமைப்பொறுப்பு 16 ஐ பார்க்கவும்).[11]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இலங்கையில் இயங்கும் ஊழல் மோசடி தவிர்ப்பு முகவர் அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பை சீராக்குவது மற்றும் தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்கு இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அத்தியாவசியமாக செயற்பாடாகும் என்பதை IRM குறிப்பிட்டிருந்தார். எனவே, அடுத்த செயற்திட்டத்தில் இந்த கடமைப்பொறுப்பை உள்ளடக்குமாறு IRM ஆய்வாளர் பரிந்துரை செய்கின்றார். அத்துடன், மேலதிக இணைப்புகள் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் பரிந்துரைத்துள்ளார். அவற்றில்: ஊழல் மோசடி தவிர்ப்பு முகவர் அமைப்புகளிடையே இரகசியத்தன்மையை பேணும் ஒதுக்கங்களை அகற்றுவம் சீர்திருத்தம், மற்றும் பல்துறைசார் பங்காளர்களால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொது மக்களால் அரசாங்கத்தை பொறுப்புக்கூற செய்யும் பொறிமுறைகளை நிறுவுதல் போன்றன அடங்கியுள்ளன.

---

1 In the action plan, all milestones pertaining to corruption are listed under a single commitment. For clarity, these milestones have been separated in this report into six different commitments (see 16-21), each looking at distinct components of the anti-corruption framework.
2 Sarath Jayamanne (Commission to Investigate Allegations of Bribery or Corruption), interview by IRM researcher, 20 September 2017; Asoka Obeyesekere (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 29 August 2017.
3 Jayamanne, interview.
4 *Id.*
5 Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 17 October 2017. See also S. Gunaratne, M. Herat, and A. Obeyesekere, CSO GFAR Report on Sri Lanka (Colombo: Transparency International, 2017), http://bit.ly/2BB9318.
6 *Id.*
7 Gunaratne, interview.
8 Maheshi Herat (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 27 September 2018.
9 The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and email.
10 Gunaratne, interview; See also Gunaratne, Herat, and Obeyesekere, CSO GFAR Report on Sri Lanka.
11 Herat, interview.

## 19. ஊழல் மற்றும் நிதி மோசடி (Corruption and Money Laundering)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**ஆக்கபூர்வமான பொதுப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல் (பகுதி IV)**

[…]

பிரதான குறிக்கோள்:

மைல்கற்கள்:

- 19.1 இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) அதிகார வீச்சை விரிவுபடுத்தி அதன் மூலம் நிதி மோசடி சம்பந்தமான குற்றச்செயல்களையும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான CIABOC இன் சட்டவாக்கத்தினுள் உள்ளடங்கச் செய்தல் (UNCAC ஆக்கம் 14 இற்கமைவாக).

- 19.2 மைல்கல் 1ல் (உதாரணம்: 19.1) குறிப்பிடப்பட்ட சட்ட அட்டவணையாக்கம் மற்றும் சட்டதிருத்தத்தை இயற்றுதல் போன்றவற்றை அரசாங்கம் மேற்கொள்ளல்.

- 19.3 CIABOC இனால் நிதி மோசடி விசாரணைகள் தொடர்பில் நடைமுறையில் உள்ள வழக்கு விசாரணைகளுக்கு பாரபட்சமின்றி நிதி மோசடிகள் சம்பந்தமான புள்ளிவிவரவியல் தரவுகளை பிரசுரித்தல். (விசாரணைகளின் எண்ணிக்கை, முடிவடைந்த விசாரணைகளின் வெளிப்பாடு போன்ற தரவுகள்)

**பொறுப்பான நிறுவனம்:** இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC)

**துணை நிறுவனங்கள்:** நிதி குற்றங்கள் விசாரணை பிரிவு (FCID), ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

ஊழல் மற்றும் நிதி மோசடி தொடர்பில் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் (CIABOC) விசாரணைகள் மேற்கொள்ளும் ஆணையின் மீது காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்வது பற்றி கவனம் செலுத்தி ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலிமைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியையே எய்தியிருந்தது. CIABOC இன் பணிப்பாளர் நாயகத்தின் பிரகாரம், ஆணைக்குழுவினால் அரசாங்கத்துக்கு உத்தியோகப்பற்றற்ற சமர்ப்பிப்பு மேற்கொள்ளப்பட்டு[2] நிதி மோசடி தொடர்பில் விசாரணைகளை CIABOC மேற்கொள்ளும் வரையெல்லைகளை விஸ்தரிப்பது பற்றி கோரப்பட்டிருந்தது (மைல்கல் 19.1).[3] ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL) பிரகாரம், இந்த நடவடிக்கை சட்டமூல திருத்தங்களை மேற்கொள்வதற்கு இது தூண்டியிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.[4]

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்ந்திருந்த நிலையில் CIABOC இனால் எதிர்பார்க்கப்பட்ட திருத்தங்களை பிரேரிக்க அல்லது சட்டமியற்ற முடியவில்லை (மைல்கல் 19.2), அல்லது நிதி மோசடி வழக்குகள் பற்றிய தரவுகளை வெளியிட முடியவில்லை (மைல்கல் 19.3). நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பிரதான அதிகாரத்தை நிதி குற்றங்கள் விசாரணை பிரிவு (FCID) பேணியிருந்தது.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 19. ஊழல் மற்றும் நிதி மோசடி | | | ✔ | | ✔ | | | | | | ✔ | | | ✔ | | | | ✔ | | | |
| | | | | | | | | | | | | | | ✔ | | | | | | | |

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தி காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டது.

மைல்கற்கள் 19.1–19.3: TISL, CIABOC ஆகியவற்றின் சிவில் சமூக பிரதிநிதிகளின் பிரகாரம், ஊழல் தவிர்ப்பு செயற்திட்டத்தின் உள்ளடக்கமாக நிதி மோசடி வழக்குகளை உள்வாங்குவது தொடர்பான சட்டமூல திருத்தங்களை பிரேரித்திருந்தன. [5] மத்தியதவணையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உத்தியோகப்பற்றற்ற சமர்ப்பிப்புக்கு மேலதிகமாக இது அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், ஊழல் தவிர்ப்பு திட்டம் பூர்த்தியாக்கப்படாத நிலையில் அல்லது வெளியிடப்படாத நிலையில் (கடமைப்பொறுப்பு 16 ஐ பார்க்கவும்), இந்த பிரேரணை தொடர்பில் உறுதியான ஆதாரம் எதுவுமில்லை. கலந்துரையாடல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நிலையில், இந்த கடமைப்பொறுப்பின் கீழ் எவ்விதமான மேலதிக முன்னேற்றங்களும் இடம்பெறவில்லை. இது தொடர்பில் கருத்துக்களை பெற்றுக் கொள்ள CIABOC உடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.[6]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

செயற்திட்டத்தின் பிரகாரம், நிதி மோசடியுடன் தொடர்புடைய சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படும் பயனிலை குற்றங்களில் நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை உள்ளடக்குவதை கொண்டிருக்கவில்லை. உதாரணமாக, நிதி மோசடி வழக்குகளுக்கு CIABOC இன் ஆணை நீடிக்கப்படவில்லை. இதன் பெறுபேறாக, பயனிலை குற்றம் ஊழல் அல்லது நிதி மோசடியாக காணப்பட்ட போதிலும் தனிநபர்களுக்கு எதிராக நிதி மோசடியின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க ஆணைக்குழுவினால் முடியாதிருந்தது.[7] ஊழல் தவிர்ப்பு முகவர் நிறுவனங்களிடையே முறையற்ற ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பரிமாற்றமின்மை போன்ற காரணங்களினால் (கடமைப்பொறுப்பு 18 ஐ பார்க்கவும்), இந்த சட்டமூல வரையறை காரணமாக விசாரணை செயற்பாடுகள் முன்னெடுக்க முடியவில்லை.[8]

இந்த கடமைப்பொறுப்பினூடாக நிதி மோசடி மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கிடையில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதனை மேற்கொள்வதற்கு, முதன் நிலை குற்றச்சாட்டாக ஊழல் அல்லது நிதி மோசடி அமைந்திருக்கும் சந்தர்ப்பங்களில் CIABOC இனால் நிதி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள், பிரேரிப்பு மற்றும் சட்டமூல திருத்தங்களை மேற்கொள்ளல் போன்றவற்றை முன்னெடுக்க இந்த கடமைப்பொறுப்பு தூண்டியிருந்தது. இதனூடாக, நிதி மோசடி தொடர்பான தரவுகளை திரட்டி பிரசுரிப்பதை கடமைப்பொறுப்பு பிரேரித்திருந்ததுடன், அதனூடாக தகவல் அணுகலை மேம்படுத்த திட்டமிட்டிருந்தது.

ஆனாலும், CIABOC இனால் சம்பந்தப்பட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கு அப்பால் செல்ல முடியாததன் காரணமாக, அவர்கால் தரவுகளை வெளியிட முடியவில்லை, எனவே, தகவல் அணுகல் அல்லது அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மேம்படவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இந்த கடமைப்பொறுப்பினூடாகவும் - CIABOC இன் நோக்கெல்லையை விஸ்தரிக்கும் சட்டமூல திருத்தம் போன்றன அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை பெறுமதிகளுடன் முழுமையாக தொடர்பற்றவையாக IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். எனவே, இந்த கடமைப்பொறுப்பை அடுத்த செயற்திட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டியதில்லை என பரிந்துரைத்திருந்தார்.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட பங்காளர்களும் இந்த கடமைப்பொறுப்பின் ஏற்புடைமை மற்றும் குறிப்பு ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதற்கு சில சிறிய செயற்பாடுகளை முன்னெடுக்க ஊக்குவிக்கப்பட்டனர். இவற்றில்: நிதி மோசடி தொடர்பான புள்ளிவிவர தரவுகளின் வெளியீடு ஊடாக குறிப்பிட்ட வழிமுறைகள் மற்றும் பொறிமுறைகள் ஆகியவற்றை நிர்ணயிப்பது முன்னெடுக்கப்படுவது; மற்றும் நிதி மோசடி விசாரணைகளில் சிவில் சமூக நிபுணர்களை ஈடுபடுத்தி, விசாரணை அதிகாரிகளுக்கான பயிற்சி திட்டமொன்றை வடிவமைப்பது.

---

1 In the action plan, all milestones pertaining to corruption are listed under a single commitment. For clarity, these milestones have been separated in this report into six different commitments (see 16–21), each looking at distinct components of the anti-corruption framework.

2 "CIABOC to Probe Money Laundering" (The Sunday Times, 12 November 2017) http://bit.ly/2s7Omuv.

3 Sarath Jayamanne (Commission to Investigate Allegations of Bribery or Corruption), interview by IRM researcher, 20 September 2017.

4 Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 17 October 2017.

5 Maheshi Herat (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 27 September 2018.

6 The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and email.

7 "CIABOC to Probe Money Laundering" (The Sunday Times).

8 Jayamanne, interview.

## 20. அரசியல் பிரச்சார நிதிகளை கட்டுப்படுத்தல் (Regulation of Political Campaign Financing)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**ஆக்கபூர்வமான பொதுப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல் (பகுதி V)**

[…]

பிரதான குறிக்கோள்:

மைல்கல்:

- 20.1 தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கான நிதி சார் பங்களிப்புகளின் அளவு மற்றும் அவற்றின் நிதி மூலம் என்பவற்றை வெளிப்படுத்தும் (பிரகடன பதிவு) வகையில் தேர்தல் சட்டங்களை மாற்றியமைக்கவுள்ளது.

**பொறுப்பான நிறுவனங்கள்:** தேர்தல் ஆணையகம், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC)

**துணை நிறுவனம்:** ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)

**ஆரம்ப திகதி:** ஜனவரி 2017 **முடிவு திகதி:** டிசம்பர் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

அரசியல் பிரச்சார நிதி வழங்கல் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதை ஒழுங்குபடுத்துவது மற்றும் ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் சட்டங்களில் திருத்தத்தை மேற்கொண்டு, ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலிமைப்படுத்துவதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டுள்ளது. இதை மேற்கொள்வதற்கு, தேர்தல் பிரச்சாரத்துக்கான நிதி அளவு மற்றும் அவற்றின் மூலம் ஆகிய வெளிப்படுத்தல்களை உள்ளடக்கும் வகையில் (வெளிப்படுத்தல் பதிவு) தேர்தல் சட்டங்களை திருத்தும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது.

ஆனாலும், அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மைக்கு இந்த கடமைப்பொறுப்பு பொருத்தமானதா என்பது தெளிவற்றதாக அமைந்திருந்தது. பிரச்சாரத்துக்கான நிதி அளவு மற்றும் அவற்றின் மூலம், பொது மக்களுக்கு வெளிப்படுத்துவதனூடாக முன்னர் அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்படாமலிருந்த

தகவல்களை அணுகுவதற்கான வாய்ப்பை உறுதி செய்யும். எவ்வாறாயினும், இந்த வெளிப்படுத்தல் பதிவு பொது மக்கள் பார்வைக்கு வழங்கப்படுமா, அவ்வாறு வழங்கப்படின், எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பன தொடர்பில் இந்த கடமைப்பொறுப்பு விளக்கங்களை வழங்கவில்லை.

மேலதிக தகவல்களுக்கு 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்தது. ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL) பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், பிரச்சாரத் திட்ட நிதி வழங்கல் தொடர்பான உறுதியான சட்ட மூல வரைபொன்றை தேர்தல் ஆணைக்குழு வடிவமைத்திருந்த போதிலும், அதை வெளிப்படுத்தியிருக்கவில்லை (மைல்கல் 20.1).[2]

ஊடக அறிக்கைகள்[3] மூலமாக தேர்தல் செலவீனங்களை கட்டுப்படுத்துவதற்கான சட்ட மூலத்தை வரைவதற்கான அமைச்சரவை அனுமதியை அரசாங்கம் பெற்றுள்ளதாக உறுதி செய்திருந்தன. இந்த வரைவில் வெளிப்படுத்தல் பதிவொன்றை அறிமுகம் செய்து வெளியிடுவது பற்றிய ஒதுக்கங்கள் அடங்கியிருந்தனவா மற்றும் அதில் பிரச்சார நிதி அளவு மற்றும் அவற்றின் மூலங்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கியிருக்குமா போன்ற விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை<br>தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 20. அரசியல் பிரச்சார திட்டங்களுக்கான நிதியிடல் | | | ✔ | | தெளிவில்லை | | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | ✔ | | | |

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தி காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டது.

மைல்கல் 20.1: தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வது பற்றிய கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக TISL பிரதிநிதி ஒருவர் உறுதி செய்திருந்தார்.[4] இது தொடர்பான முன்னேற்றங்கள் எதனையும் தேர்தல் ஆணைக்குழு வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பதையும் TISL

குறிப்பிட்டிருந்தது.[5] இந்த விடயம் தொடர்பில் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு, அல்லது CIABOC உடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.[6]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: மாற்றமில்லை**
**பொது பொறுப்புக்கூறல்: மாற்றமில்லை**

அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை பெறுமதிகளுடன் தெளிவற்ற தொடர்பை இந்த கடமைப்பொறுப்பு கொண்டிருந்தது எனவே அரசாங்கத்தின் வெளிப்படுத்தன்மையை ஏற்படுத்தியிருக்கவில்லை.

செயற்திட்டத்தின் பிரகாரம், ஜனாதிபதி,[7] பாராளுமன்றம்,[8] மாகாண சபைகள்,[9] அல்லது உள்ளூராட்சி சபைகள்[10] தேர்தல்கள் தொடர்பான அதிகார எல்லைகளை பின்பற்றுவது தொடர்பான சட்டங்களில் அரசியல் தேர்தல் பிரச்சார நிதி வழங்கல் தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் எதையும் கொண்டிருக்கவில்லை.[11] இவ்வாறான சட்டமூலங்களின்மை காரணமாக நேர்மையான மற்றும் மோசடிகளற்ற தேர்தல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பை குறைத்துவிடக்கூடும். தேர்தல் பிரச்சார நிதி வழங்கல் ஊடாக தேர்தலில் யார் போட்டியிடுவது, அவர்களுக்கு தமது தகவல்களை எந்தளவுக்கு வெளியிட முடிகின்றது போன்றவற்றை நிர்ணயிக்க முடியும் என்பதுடன், யார் தெரிவு செய்யப்படுவார் என்பதையும் உறுதிப்படுத்த முடியும்.[12] இலங்கையில், வேட்பாளர்கள் வாக்காளிப்போருக்கு பணத்தை வாரி வழங்கி வாக்களிக்கச் செய்ய தூண்டுவது தேர்தல் பிரச்சாரத்தின் போது பொது உள்ளடக்கமாக அமைந்துள்ளது.[13] முன்னைய தேர்தல்களில், ஜனாதிபதி வேட்பாளர்கள் பெருமளவு நிதியை செலவிட்டு பொது பிரச்சாரத் திட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.[14]

எனவே, தேர்தல் பிரச்சார நிதி வழங்கல் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவது அதனை ஒழுங்குபடுத்தும் வகையில் தேர்தல் சட்டங்களை திருத்தியமைப்பதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டிருந்தது. ஆனாலும், தவணை பூர்த்தியின் போது தேர்தல் சட்டங்களில் தேர்தல் ஆணைக்குழுவினால் திருத்தங்களை மேற்கொள்ள முடியவில்லை; மற்றும் பிரச்சார நிதி வழங்கல் பற்றிய தகவல் பொது மக்கள் பார்வைக்கு வழங்கப்படவில்லை. மேலும், இந்த கடமைப்பொறுப்பில் பிரேரிக்கப்பட்ட வெளிப்படுத்தல் பதிவினூடாக அரசாங்கத்திடம் காணப்படும் தகவல்களை பொது மக்கள் பார்வைக்கு வழங்குவதா அல்லது எவ்வாறு வழங்குவது என்பது பற்றிய விடயம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. அரசாங்க செயற்பாட்டில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். ஆனாலும், இந்த கடமைப்பொறுப்பின் நோக்கெல்லை மற்றும் தாக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பில் ஆய்வாளர் மேலும் சில நடவடிக்கைகளை முன்மொழிந்திருந்தார். இவற்றில்: வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பொது மக்கள் பார்வைக்கு வழங்கப்படக்கூடிய பொறிமுறையை நிர்ணயித்தல் மற்றும் வடிவமைத்தல்; மற்றும் துரித பொறுப்புக்கூறல், அல்லது குறைகேள் பொறிமுறையை அறிமுகம்

செய்து அரசியல் பிரச்சார நடவடிக்கைகளுக்கான நிதி வழங்கல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு போட்டியாளர்களை பொறுப்புக்கூறச் செய்தல் போன்றன அடங்கியுள்ளன.

---

[1] In the action plan, all milestones pertaining to corruption are listed under a single commitment. For clarity, these milestones have been separated in this report into six different commitments (see 16–21), each looking at distinct components of the anti-corruption framework.

[2] Sankhitha Gunaratne (Transparency International), interview by IRM researcher, 17 October 2017.

[3] Z. Imtiaz, “Ceiling on Election Campaign Financing” (Daily News, 18 October 2017) http://bit.ly/2ExPxG3.

[4] Maheshi Herat (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 27 September 2018.

[5] *Id.*

[6] The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and email.

[7] Presidential Elections Act, No. 15 of 1981, http://bit.ly/2FCG2om.

[8] Parliamentary Elections Act, No. 1 of 1981, http://bit.ly/2nucdzE.

[9] Provincial Councils Elections Act, No. 2 of 1988, http://bit.ly/2nwnKhM.

[10] Local Authorities Elections Ordinance, No. 53 of 1946, http://bit.ly/2DTB0TO.

[11] Imtiaz.

[12] “Elections and Political Finance” (Themes, Open Government Partnership, 2017) http://bit.ly/2s22sx5.

[13] Imtiaz.

[14] “Former President Spent over Rs.2 bn. in State Funds on Election Ads” (The Sunday Times, 18 January 2015) http://bit.ly/1BdaI8j.

## 21. சொத்து பிரகடன விவரங்களை வெளியிடல், பரப்புதல் (Disseminate Asset Declarations)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**ஆக்கபூர்வமான பொதுப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடி தவிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல் (பகுதி VI)**

[…]

பிரதான குறிக்கோள்:

மைல்கற்கள்:

- 21.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடன சட்டத்தின் 7 (4), 7 (5) மற்றும் 8 ஆகிய பிரிவுகளை நீக்கும் சட்டதிருத்த நடவடிக்கையை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) முன்னெடுப்பதுடன் அது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தின் சட்ட சீர்திருத்த பிரிவிக்கு அறிவித்தல்.

- 21.2 மைல்கல் 1 (உதாரணம்: 21.1) இல் குறிப்பிடப்பட்ட சட்ட அட்டவணையாக்கம் மற்றும் திருத்திய சட்டத்தை இயற்றுதல் போன்ற செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளல்.

**பொறுப்பான நிறுவனங்கள்:** இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC), சட்டமா அதிபர் திணைக்களம்

**துணை நிறுவனம்:** ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL)

**ஆரம்ப திகதி:** செப்டெம்பர் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2017

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பொது மக்களுக்கு சொத்துக்கள் பிரகடன வெளிப்படுத்தலை மேற்கொள்வதனூடாக ஊழல் தவிர்ப்பு கட்டமைப்பை வலிமைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. இதை மேற்கொள்வதற்கு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப்படுத்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான செயற்படுத்தல், தொடர்பாடல் மற்றும் பிரேரித்தல் போன்றன தொடர்பில் இந்த கடமைப்பொறுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்தியிருந்தது. CIABOC இன் பணிப்பாளர் நாயகத்தின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப்படுத்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்றை ஆணைக்குழு தயாரித்து, அதனை மீளாய்வுக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தது (மைல்கல் 21.1).[2] TISLஇன் சிவில் சமூக பிரதிநிதியின் பிரகாரம், சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் நீக்கங்களை மேற்கொள்வது தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய அமைச்சரவை ஆணைக்குறிப்பு[3] ஒன்றை மேற்கோள்காட்டி இது உறுதி செய்யப்பட்டிருந்தது.[4]

எவ்வாறாயினும், உறுதியான சட்டதிருத்த மூலம் தொடர்பாக தற்போதும் ஆழ்ந்த ஆராய்வு மேற்கொள்ளப்படுவதாக CIABOC குறிப்பிட்டிருந்தது (மைல்கல் 21.2).[5] "உணர்திறன் மிக்க மற்றும் வழக்காடும்" தன்மையான சொத்துக்கள் வெளிப்படுத்தலை மேற்கோள்காண்பித்து, இந்த சட்டமூலத்தில் திருத்தத்தை மேற்கொள்ளும் முயற்சிகள் ஏற்றத்துக்குரிய, படிப்படியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என CIABOC பரிந்துரைத்திருந்தது.[6]

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி (மத்திய தவணை / தவணை பூர்த்தி) | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 21. சொத்துக்கள் பிரகடனம் | | | | ✔ | ✔ | | | | | | ✔ | | | ✔<br>✔ | | | | | ✔ | | |

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தி காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டது.

மைல்கற்கள் 21.1–21.2: சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப்படுத்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் CIABOC இனால் சில பல்துறைசார் பங்காளர் பயிற்சிப்பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையை TISL குறிப்பிட்டிருந்தது.[7] இந்த நிகழ்வுகளில் TISL போன்றன சிவில் சமூகங்களை பங்கேற்பதற்காக CIABOC அழைப்புவிடுத்திருந்ததுடன், அதனூடாக உள்ளடக்கமான செயன்முறை பின்பற்றப்பட்டதை உறுதி செய்திருந்தது. ஆனாலும், இந்த

கலந்துரையாடல்களுக்கு அப்பால், சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் செயற்பாடு சிறியளவு முன்னேற்றத்தையே பதிவு செய்திருந்தது.

சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் நிலை தொடர்பில் TISL இனால் உறுதி செய்ய முடியவில்லை என்பதுடன்,[8] இது தொடர்பில் கருத்துக்களை பெற்றுக் கொள்ள CIABOC உடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.[9]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

**பொது மக்கள் பங்கேற்பு: எல்லையளவு**

CIABOC இனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப்படுத்தல் சட்டத்தில் திருத்தங்கள் பூர்த்தியாக்கப்படாத காரணத்தினால் இந்த கடமைப்பொறுப்பினூடாக தகவல் அணுகலில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், TISL இன் பிரகாரம், திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டுக்கு, சிவில் சமூக அமைப்புகள் அடங்கலாக உள்ளார்ந்த பங்காளர் பங்கேற்பு அவசியமாகியிருந்தது.[10] எவ்வாறாயினும், எதிர்பாராதவிதமாக, இந்த கடமைப்பொறுப்பினூடாக பொது மக்களின் பங்கேற்பு எல்லையளவு அதிகரித்திருந்தது.

செயற்திட்டத்தின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப்படுத்தல் சட்டத்தில் குறித்த பிரிவுகளில் கோரிக்கைகளினூடாக பெறப்பட்ட தகவல்களை வெளியிடுவது மற்றும் பகிர்வது தொடர்பில் கட்டுப்பாடுகள் காணப்பட்டன. குறிப்பாக, பிரிவுகள் 7(4) மற்றும் 7(5) ஆகியவற்றின் பிரகாரம், இவ்வாறு தகவல்களை பகிர்ந்தளிப்பது தண்டனைக்குரிய குற்றமாக அமைந்திருந்தது,[11] பிரிவு 8 இன் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்துவதில் இரகசியத்தன்மையை பேணுவதை கட்டாயப்படுத்தியிருந்தது. [12] இதன் பெறுபேறாக, சட்டவிரோதமாக திரட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் வெளிப்படுத்தி தவறிழைத்த பொது அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு பொது மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்ததாக சிவில் சமூக பங்காளர்கள் வாதிட்டிருந்தனர்.[13]

இந்த பிரிவுகளை நீக்கிவிடுவதை இந்த கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டிருந்ததுடன், அதனூடாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல் தொடர்பாக பெறப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் திரட்டப்பட்ட தகவல்களை வெளிப்படுத்த அனுமதியளிப்பதாக அமைந்திருந்தது. முழுமையாக செயற்படுத்தப்பட்டிருந்தால், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் அரசாங்கம் கொண்டிருந்த தகவல்கள் அணுகுவதற்கான வாய்ப்பை மேம்படுத்தியிருக்கும்.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், இந்த கடமைப்பொறுப்பு அடுத்த செயற்திட்டத்துக்கும் முன்னெடுக்கப்பட வேண்டும் என IRM ஆய்வாளர் பரிந்துரைத்திருந்தார். எவ்வாறாயினும், இந்த கடமைப்பொறுப்பின் பெறுபேறுகளை மேம்படுத்துவது மற்றும் உறுதியான பெறுபேறுகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக சில நடவடிக்கைகளை ஆய்வாளர் முன்மொழிந்திருந்தார். இவற்றில்: CIABOC

இன் ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான மேன்முறையீடு செயன்முறையை அறிமுகம் செய்தல்; மற்றும் பாவனையாளருக்கு நட்பான, ஈடுபாடுடைய மற்றும் மும்மொழிகளிலும் அமைந்த ஒன்லைன் கட்டமைப்பினூடாக சிரேஷ்ட பொது அதிகாரிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவது. பிரேரிக்கப்பட்ட சட்டதிருத்தமூல ஒதுக்கங்களினூடாக பொது அதிகாரிகளால் வெளியிடப்பட்ட தகவல்கள் தொடர்பில் பொது மக்களுக்கு முறைப்பாடொன்றை பதிவு செய்ய, அல்லது மேலதிக தெளிவுபடுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கோருவதற்கு வழியமைப்பதாக மேன்முறையீட்டு செயன்முறை அமைந்திருக்கும்.

[1] In the action plan, all milestones pertaining to corruption are listed under a single commitment. For clarity, these milestones have been separated into six different commitments (see 16-21) in this report, each looking at distinct components of the anti-corruption framework.
[2] Sarath Jayamanne (Commission to Investigate Allegations of Bribery or Corruption), interview by IRM researcher, 20 September 2017.
[3] Commission to Investigate Allegations of Bribery and Corruption, Amendments to the Asset and Declaration of Assets and Liabilities Law No. 1 of 1975: Cabinet Memorandum, http://bit.ly/2E8nM8Z.
[4] Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 17 October 2017.
[5] Jayamanne, interview.
[6] *Id.*
[7] Maheshi Herat (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 27 September 2018.
[8] *Id.*
[9] The IRM researcher made several unsuccessful attempts to reach relevant representatives in August and September 2018. Attempts were made via telephone and email.
[10] Herat, interview.
[11] Declaration of Assets and Liabilities Law, No. 1 of 1975, § 7(4) and § 7(5).
[12] Declaration of Assets and Liabilities Law, No. 1 of 1975, § 8.
[13] Transparency International Sri Lanka, "Amending the Declaration of Assets and Liabilities Act.", 7 December 2015, http://bit.ly/2EyON3s.

# கருப்பொருள் 9: தகவல் அறியும் உரிமை (Right to Information)

## 22. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் (Enactment and Implementation of the RTI Act)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

பொது மக்களின் "தகவல் அறியும் உரிமைக்கான சட்ட அங்கீகாரம் மற்றும் இதன் மூலம் அவர்கள் அத்தகைய தகவலை அணுகுவதற்கு வலுவூட்டும் ஒரு வினைத்திறனான பொறிமுறை ஆட்சியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை உருவாக்கவும், அதில் பொது மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும் அவசியமானதாகும். இது ஊழலை முறையாக நீக்குவதற்கான ஒரு கருவியாகவும் அமைந்துள்ளது. இது பொது அதிகார அமைப்புகளில் அதிகார மையத்திற்கு எதிராக மக்களுடைய அதிகாரத்தை சமன் செய்கிறது. ஒரு ஜனநாயகத்தின் கூறுகள் - பிரதிநிதித்துவம், பொறுப்புகூறல் மற்றும் பங்கேற்பு முடிவெடுத்தல் போன்ற - ஒரு செயற்திறனான தகவல் அறியும் சட்டகத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் வசதியளிக்கின்றது.

பிரதான குறிக்கோள்:

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை உருவாக்கி வினைத்திறனாக அமுலாக்குவதன் மூலம் பொது மக்கள் தகவல் பெறுவதை மேம்படுத்தல்.

மைல்கற்கள்:

- 22.1 தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை சபாநாயகர் சான்றுப்படுத்தி 6 மாதங்களுக்குள் தகவல் அறியும் உரிமை கோரிக்கைகள் ஆரம்பிக்கப்பட முடியும் என்பதை இவ்விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள வெகுசன ஊடகத்துறை அமைச்சு உறுதிப்படுத்தல்.

- 22.2 தகவல் ஆணையாளர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள் மற்றும் தகவல் அலுவலர்கள் உள்ளிட்ட முக்கிய தகவல் அறியும் உரிமை செயற்பாட்டாளர்களின் நியமனம் மற்றும் பயிற்சி:

  (a) தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை அரசியலமைப்புச் சபை நியமித்தல்;

  (b) இவ்விடயத்திற்கு பொறுப்பான வெகுசன ஊடகத்துறை அமைச்சு மற்றும் / அல்லது ஆணைக்குழு தகவல் அதிகாரிகளுக்கு (IOs) மற்றும் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கான (DOs) ஆரம்ப விதிமுறைகளை அபிவிருத்தி செய்தல்;

  (c) பின்வரும் a) RTI இன் பெறுமானம் மற்றும் அவற்றின் பங்கு b) கோரிக்கைகளை ஏற்று பதிலளிப்பது c) செயல்திறன் வெளிப்பாடு மற்றும் d) பதிவுகள் முகாமைத்துவம் ஆகிய கருப்பொருள்கள் தொடர்பில் குறித்த சட்டத்தின் கீழ் தங்கள் கடமைகளின் செயலாற்றுகைக்காக அனைத்து அமைச்சு மட்ட தகவல் அலுவலர்களுக்கும் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் 4 பயிற்சித் திட்டங்களை நடத்தல்.

(d) தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினர் மற்றும் ஆணைக்குழு ஊழியர்களுக்கு ஒப்பீட்டு சட்ட ஆட்சியில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் உள்ள வளவாளர்களின் மூலம் வெகுசன ஊடகத்துறைக்கு பொறுப்பான அமைச்சு பயிற்சி வசதிகளை வழங்குதல்.

(e) பொது அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய பொறுப்பை வெகுசன ஊடக அமைச்சு ஏற்றல் - பொது மக்கள் பங்கேற்பு, பொறுப்புகூறல் மற்றும் பொது மக்களுக்கான உதவியில் இரகசியம் பற்றிய மனநிலையை மாற்றுவதற்காக வெகுசன ஊடகத்துறை அமைச்சு பயிற்சி வசதிகளை வழங்குதல்.

- 22.3 வள ஒதுக்கீடு, நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள்:

(a) வெகுசன ஊடக அமைச்சு தகவல் அறியும் உரிமை நடைமுறைப்படுத்தல் ஒருங்கிணைப்பு அலுவலரை நியமித்தல்.

(b) தகவல் அறியும் உரிமை நடைமுறைப்படுத்தலுக்கான நடைமுறை மற்றும் செயல்முறைகளில் சர்வதேச சிறந்த நடைமுறைகளை தகவல் அறியும் உரிமை நடைமுறைப்படுத்தல் ஒருங்கிணைப்பு அலுவலர் பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்தல்.

(c) தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால், இலவசமாக வழங்கப்பட வேண்டிய தகவல்கள் பற்றிய விவரங்கள் அடங்கலாக தகவல் அறியும் சட்டத்தின் ஒதுக்கங்கள் பற்றிய விதிமுறைகளை வர்த்தமானியில் பிரசுரித்தல்.

(d) பொது அதிகார அமைப்புகளுக்கான பதிவு முகாமைத்துவ வழிகாட்டுதல்களை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு வெளியிடல்.

(e) சட்டத்தின் ஏற்பாடுகளின் படி வெகுசன ஊடக அமைச்சு விதிமுறைகளை வர்த்தமானி மூலம் அறிவித்தல்.

(f) வெகுசன ஊடக அமைச்சு வருடாந்த தேசிய வரவு செலவு திட்டத்தில் தகவல் அறியும் உரிமை வள ஒதுக்கீட்டை சேர்க்க நிதி அமைச்சை கோரல்.

(g) அரச தகவல் மைய அழைப்பு இலக்கத்தை (GIC- 1919) தகவல் கோரல்கள் தொடர்பான பதிலளிப்புக்காக சம்பந்தப்பட்ட பொது அதிகாரசபைகளுக்கு எழுத்தில் கோரிக்கைகளை அனுப்பும் பிரதான குரல் அடிப்படையிலான மும்மொழி மைய தகவல் அறியும் உரிமை கோரிக்கை வாயிலை ஜனாதிபதி செயலகம் நிறுவுதல்.

(h) தகவல் அறியும் உரிமை கோரிக்கைகள் பகுப்பாய்வை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை அனுமதிக்கும் அமைப்பு முறையை மேம்படுத்துவதற்கு வெகுசன ஊடக அமைச்சு வசதியளித்தல்.

(i) பாராளுமன்றத்தினால், 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டம் மற்றும் தகவல் அறியும் உரிமை ஏற்புக்கான தாபனச் சட்டத்தையும் திருத்துதல் - முரண்படும் இரகசியத் தன்மை அல்லது அதுபோன்ற ஏற்பாடுகள் திருத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல்.

- 22.4 பொது விழிப்புணர்வை அதிகரித்தல்:

  (a) வெகுசன ஊடக அமைச்சு, இதர தொடர்புடைய அரச பங்காளர்களுடன் இணைந்து, குறைந்தபட்சம் 3 ஊடக விழிப்புணர்வு பிரச்சாரங்களை பொது மக்கள், சமூக நலன்புரி பெறுபவர்கள் மற்றும் பெண்கள் ஆகிய 3 பிரிவுகளில் நடத்த வேண்டும்.

  (b) வெகுசன ஊடக அமைச்சு, இதர தொடர்புடைய அரச பங்காளர்களுடன் இணைந்து, பொது சமூகத்திற்கான பல்வேறு துறைகளில் தகவல் அறியும் உரிமையின் பயன்பாடு பற்றி விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தல்.

  (c) அரச இலத்திரனியல் ஊடகங்களில் தகவல் அறியும் உரிமை நிகழ்ச்சிக்கு வாரத்தில் ஒரு மணி நேரத்தை ஒதுக்கீடு செய்தல் - தகவல் அறியும் உரிமை தொடர்பான முக்கிய கலந்துரையாடல்கள், ஆர்வலர்கள், சாதனைகள், விவாதங்கள், முதலியன உள்ளடக்கப்படுவது.

  (d) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அரச செய்தித்தாள்களில் தகவல் அறியும் உரிமை தொடர்பான உள்ளடக்கம் வெளியிடப்படுவதை அரசு உறுதி செய்தல்.

**பொறுப்பான நிறுவனம்:** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

**துணை நிறுவனங்கள்**: தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு; ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல்

**ஆரம்ப திகதி:** ஆகஸ்ட் 2016 **முடிவு திகதி:** ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: இந்த கடமைப்பொறுப்பு நட்சத்திர அடையாளமிடப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த கடமைப்பொறுப்பாகும், ஏனெனில் இது அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை பெறுமதிகளுடன் தெளிவான தொடர்பை கொண்டுள்ளதால், பகுதியளவு அல்லது பரிபூரணமாக நிறைவேற்றப்பட்டால், நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தன்மையை கொண்டுள்ளது. வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

இலங்கையில் தகவல் அறியும் உரிமை (RTI) தொடர்பான சட்டமூலத்தை வினைத்திறனை வாய்ந்த வகையில் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. இந்த கடமைப்பொறுப்பினூடாக பொது மக்களுக்கு முன்னர் அணுக முடியாமலிருந்த அரச மற்றும் அரசாங்கத்தினால் பேணப்பட்ட தகவல்கள் அடங்கலாக பலதரப்பட்ட தகவல்களை பொது மக்களுக்கு உறுதியாக மற்றும் துரிதமாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் எதிர்பார்த்தனர்.[2]

**நிலை**

**மத்திய தவணை: பெருமளவு பூர்த்தி**

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி | | மத்திய தவணை / தவணை பூர்த்தி | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 22. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் உருவாக்கமும் நடைமுறைப்படுத்தலும் | | | | ✔ | ✔ | | | ✔ | | | | ✔ | | | ✔ | | | | | ✔ | |
| | | | | | | | | | | | | | | | ✔ | | | | | | |

RTI சட்டமூலம் ஸ்தாபிப்பு மற்றும் RTI ஆணைக்குழுவை நியமித்தமை போன்றவற்றினூடாக மத்திய தவணை காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பு பெருமளவு பூர்த்தி நிலையை எய்தியிருந்தது. ஆனாலும், வளங்கள் ஒதுக்கீடு மற்றும் பொது மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற முக்கியமான பகுதிகளில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமலிருந்தன.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் தலைமைத்துவமேற்று, RTI ஆணைக்குழுவின் பங்களிப்புடன் மத்திய தவணைக் காலப்பகுதியில் எய்தப்பட்டிருந்த பெருமளவான சாதனைகளில் பின்வருவன அடங்கியிருந்தன:

- தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டமூலம் ஸ்தாபிக்கப்பட்டு அதை சான்றுபடுத்தலை[3] பாராளுமன்ற சபாநாயகர் 2016 ஆகஸ்ட் 4 ஆம் திகதி மேற்கொண்டார் (மைல்கல் 22.1)
- சட்டம் 2017 பெப்ரவரி 3ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றமையை உறுதி செய்து வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தமை (மைல்கல் 22.1)[4]
- பரிபூரண, மற்றும் பிரதிநிதித்துவ RTI ஆணைக்குழுவை 2016 டிசம்பர் மாதம் நியமித்திருந்தமை (மைல்கல் 22.2)[5]
- சட்டத்தை நிறைவேற்றுவதில் பிரதானமாக ஈடுபட்டிருந்தவர்களுக்கு ஒழுங்குவிதி, ஆரம்ப நியதிகள் மற்றும் உசாத்துணை வடிவமைப்பு மற்றும் வெளியீடு (மைல்கல் 22.2)[6]
- 2017 பெப்ரவரி மாதத்தில் இலவசமாக வழங்கப்பட வேண்டிய தகவல்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய விதிமுறைகளின் வெளியீடு (மைல்கல் 22.3)[7]
- தகவல் அறியும் உரிமை தொடர்புடைய செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் நிதி ஒதுக்கீடொன்றை பெற்றுக் கொள்ளல் (மைல்கல் 22.3)[8] மற்றும்,
- வெவ்வேறு அரசாங்க பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஊடக ஆக்கங்களை வெளியிடுதல் (மைல்கல் 22.4)[9]

இந்த சாதனைகள் எய்தப்பட்ட போதிலும், மத்திய தவணை காலப்பகுதியில் சில முக்கிய மைல்கற்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்பட்டன. தகவல் அதிகாரிகள் மற்றும் RTI ஆணையாளர்களுக்கு பயிற்சிகள் (மைல்கல் 22.2); பொது அதிகார அமைப்புகளுக்கு உணர்வூட்டல் நிகழ்ச்சிகள் (மைல்கல் 22.2); நடைமுறைப்படுத்தலை ஒழுங்குபடுத்துவதற்காக அமைச்சில் அதிகாரி ஒருவரை நியமித்தல் (மைல்கல் 22.3); பதிவு முகாமைத்துவ வழிகாட்டல்களை வடிவமைத்தல் (மைல்கல் 22.3); மற்றும் RTI கோரிக்கை கட்டமைப்பு மற்றும் பகுப்பாய்வு கட்டமைப்பு அறிமுகம் (மைல்கல் 22.3), போன்ற அனைத்தும் பூர்த்தி செய்யப்படவில்லை அல்லது ஆரம்பிக்கப்படவில்லை.

பொது மக்கள் மத்தியில் RTI தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மத்திய தவணை காலப்பகுதியில் குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தன (மைல்கல் 22.4). இலக்கு வைக்கப்பட்ட ஊடக அல்லது சிவில் சமூக விழிப்புணர்வு திட்டங்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்படவில்லை அல்லது பிரதான வழக்குகள் மற்றும் பூர்த்தியாக்கல் பற்றி கலந்துரையாடுவதற்கான வாராந்த RTI நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யவில்லை.

மேலதிக தகவல்களுக்கு 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

**தவணை பூர்த்தி: பெருமளவு பூர்த்தி**

தவணை பூர்த்தியின் போது இந்த கடமைப்பொறுப்பு பெருமளவு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டது. மத்திய தவணை காலப்பகுதியை தொடர்ந்து இந்த கடமைப்பொறுப்பு பூர்த்தியை எய்துவதை நோக்கி மட்டுப்படுத்தப்பட்டளவு முன்னேற்றத்தையே பதிவு செய்திருந்ததாக RTI ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக பங்காளர்கள் உறுதி செய்திருந்தனர்.[10] கவனிக்கப்பட வேண்டிய முன்னேற்றங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தன:

- மைல்கல் 22.2: RTI கோரிக்கைகள் தொடர்பில் பதிலளிப்புகளை மேற்கொள்ளும் முறை பற்றி தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் இயங்கும் சகல தகவல் அதிகாரிகள் (IOs) மற்றும் அபிவிருத்தி அதிகாரிகள் (DOs) பயிற்சிகளை பெற்றுள்ளதாக RTI ஆணைக்குழு தெரிவித்திருந்தது. இதற்காக உறுதியான ஆதாரங்கள் எதனையும் ஆணைக்குழு வழங்கியிருக்கவில்லை. இருந்த போதிலும் சில பயிற்சி பெற்ற IOs மற்றும் DOs, இதர அரசாங்க திணைக்களங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதன் காரணமாக புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு பயிற்சி தேவைப்படுவதாக ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது;[11]
- மைல்கற்கள் 22.2 / 22.4: RTI ஆணைக்குழுவின் உதவியுடன் அமைச்சினால், உணர்வூட்டும் நிகழ்ச்சிகளும் பொது மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தது;[12] மற்றும்,
- மைல்கல் 22.4: RTI ஆணைக்குழுவின் உதவியுடன், அமைச்சினால் RTI விதிமுறைகள் அடங்கிய சுமார் 50,000 கையேடுகள் பொது அதிகார அமைப்புகளினூடாக பகிர்ந்தளிக்கப்பட்டது.[13]

எவ்வாறாயினும், இந்த கடமைப்பொறுப்பின் கீழ் காணப்பட்ட இதர சில மைல்கற்கள் மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை கொண்டிருந்தன:

மைல்கல் 22.3:

(a) RTI ஒழுங்குபடுத்தல் அதிகாரி ஒருவரை அமைச்சு நியமிக்கவில்லை என்பதை RTI ஆணைக்குழு உறுதி செய்திருந்தது. எவ்வாறாயினும்,

(b) சிறந்த செயற்பாடுகளை பின்பற்றல் - பிரேரிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் - வெளியக பயிற்சிகளினூடாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.[14]

(d) பதிவு மற்றும் ஆவணங்கள் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல்களை பிரதான பங்காளர்கள் பூர்த்தி செய்யவில்லை என RTI ஆணைக்குழு மற்றும் சிவில் சமூகம் குறிப்பிட்டிருந்தன.[15] எவ்வாறாயினும், இது தொடர்பான கலந்துரையாடல்கள் தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம், பொது நிர்வாக அமைச்சு மற்றும் RTI ஆணைக்குழு ஆகிய சம்பந்தப்பட்ட பங்காளர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவதாக RTI ஆணைக்குழு உறுதி செய்திருந்தது.[16] இவ்வாறான வழிகாட்டல்களை தயாரிப்பதற்கு ஏனைய நாடுகளிலிருந்து எவ்விதமான உதாரணங்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதை RTI ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார். அரசாங்க சேவை துறையில் பதிவுகளை நிர்வகிப்பது தொடர்பில் நான்கு பொது விதிமுறைகள் காணப்பட்ட போதிலும், இவை RTI உடன் தொடர்புபடவில்லை.

(g) RTI கோரிக்கை கட்டமைப்பை அரசாங்கம் வடிவமைக்கவில்லை, ஆனாலும் இது அரசாங்க தகவல் மையத்தினூடாக (GICs) இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக RTI ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டிருந்தது, அமைச்சு மற்றும் அரசாங்க திணைக்களங்கள் அடங்கலாக சகல அரச அமைப்புகளிடமிருந்தும் இந்த மையம் தகவல்களை சேகரித்து, திரட்ட எதிர்பார்க்கின்றது.[17]

(h) அமைச்சு (உதாரணம்: நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு) இனாலும் பகுப்பாய்வு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படாத போதிலும், அமைச்சின் திட்டத்தில் இது காணப்படுவதாகவும், அடுத்த ஓராண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்படக்கூடும் எனவும் RTI ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது.[18]

(i) முரணான சட்டமூலத்தை திருத்தும் வகையில், மேலதிக மீளாய்வுக்காக அமைச்சரவையிடம் பொது நிர்வாக அமைச்சு திருத்தங்களை சமர்ப்பித்து அதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுக் கொண்டிருந்ததை RTI ஆணைக்குழு வெளிப்படுத்தியிருந்தது. ஆனாலும், உத்தியோகபூர்வ இரகசியத்தன்மை சட்ட மூலத்தில் எவ்விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை.[19]

மைல்கல் 22.4: சிவில் சமூகத்தின் பிரகாரம், தகவல் அறியும் உரிமை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது.[20] உதாரணமாக, RTI பயனுள்ள சம்பவங்கள் மற்றும் சிறந்த செயற்பாடுகள் பற்றிய ஆவண குறும்படங்களை தயாரிக்கும் நடவடிக்கையை அமைச்சு ஆரம்பித்திருந்தது. தகவல் அறியும் உரிமைக்காக ஒதுக்கப்பட்ட அரசாங்க இணையத்தளத்தில் இந்த வீடியோக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.[21]

TISL பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வெளிவரும் இரு அரசாங்க பத்திரிகைகள், மாதாந்தம் RTI பயனுள்ள சம்பவங்களை வெளிக்கொணரல் மற்றும் செயலூக்க வெளிப்படுத்தல்களின் முக்கியத்துவம் பற்றிய விடயங்களைக் கொண்ட சஞ்சிகைகளை வெளியிட ஆரம்பித்தன.[22]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**தகவல் அணுகல்: பாரியளவு**

தகவல் அணுகல் மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றில் பாரியளவு முன்னேற்றத்தை ஏற்படுத்த இந்த கடமைப்பொறுப்பு ஏதுவாக அமைந்திருந்தது. குறிப்பாக, தகவல் அணுகல் பிரிவில் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மைக்கு மிகவும் நேர்த்தியான பங்களிப்பு வழங்கும் ஒரு நடவடிக்கையாக தகவல் அறியும் உரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தமை அமைந்திருந்தது.[23] குறிப்பாக, சட்டம் மற்றும் ஜனநாயக மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட தர மதிப்பீடுகளின் பிரகாரம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட RTI இன் சட்ட கட்டமைப்பு, பிராந்தியத்தில் காணப்படும் சிறந்த கட்டமைப்பாகவும், உலகின் மூன்றாவது சிறந்த கட்டமைப்பாகவும் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.[24] எவ்வாறாயினும், செயற்பாட்டில் இந்த சட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதான அரசாங்க பங்காளர்கள் போதியளவு கவனம் செலுத்தாமை இந்த கடமைப்பொறுப்பை மட்டுப்படுத்தியுள்ளதுடன், மிகவும் சிறந்த நிலைக்கு மாற்றப்படுவதை தவிர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது.

செயற்திட்டத்தின் பிரகாரம், பொது மக்களுக்கு தகவல் அணுகலை உறுதி செய்யும் சட்டமூலம் காணப்படாத சில நாடுகளில் ஒன்றாக இலங்கை அமைந்திருந்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை ஊக்குவித்து நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை பல தரப்பினர் முன்னெடுத்திருந்த போதிலும், இந்த நேர்த்தியான உந்துசக்தியை சிறந்த பெறுபேறுகளாக மாற்றுவதற்கு முன்னைய அரசாங்கங்கள் தவறியிருந்தன.[25]

எனவே, இலங்கையில் தகவல் அணுகலில் பாரிய பங்களிப்பை தகவல் அறியும் உரிமை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், நடைமுறைப்படுத்தலில் மட்டுப்படுத்தப்பட்டளவு முன்னேற்றம் காரணமாக இந்த உந்துசக்தி மந்தமடைந்திருந்தது. TISL சிவில் சமூக பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பங்குபற்றல்சார் வழிமுறையை அரசாங்கம் நேர்த்தியாக பின்பற்றியிருந்தாலும், பயிற்சியில் பெருமளவு கவனம் செலுத்தப்பட்டிருந்தது.[26] இந்த பிரதிநிதியின் பிரகாரம், நடைமுறைப்படுத்தல் என்பது பயிற்சியினூடாக முன்னெடுக்கப்படும் என அரசாங்கம் கருதியதுடன், இது இடம்பெறுவதை உறுதி செய்வதற்கான எவ்விதமான பின்தொடரல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.[27] தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தவிர்ப்புகளை உள்ளடக்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றமை பாதகமான திருத்தங்களை ஏற்படுத்த ஏதுவாக அமைந்துவிடும் எனும் இடர்பாட்டையும் TISL வெளியிட்டிருந்தது.[28]

இவை அனைத்தும் இடம்பெற்ற நிலையில், RTI ஆணைக்குழு அடங்கலாக சிவில் சமூக பங்காளர்கள், RTI செயன்முறைகளுடன் பெருமளவு பொது மக்கள் ஈடுபாடு நிலவியதை உறுதி செய்திருந்தனர்.[29] RTI ஆணைக்குழுவின் பிரகாரம், 2018 ஆகஸ்ட் மாதத்தில், ஆணைக்குழுவின் முன்னிலையில் 850 க்கும் அதிகமான பொது மக்கள் முறையீடுகள் பதிவாகியிருந்தது, இதில் 650 முறையீடுகளுக்கு இடைக்கால அல்லது இறுதி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சட்டபூர்வமான காரணமளிக்கப்பட்ட ஆணைகளை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.[30] RTI இன் பயன்பாடு ஊடாக வெளியிடப்பட்டிருந்த தகவல்களில், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் சில இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டிருந்தமை பற்றிய காரணங்கள், கொள்முதல் செயன்முறைகள், அரச நிறுவனங்களைச் சேர்ந்த உயர் நிறைவேற்று அதிகாரிகளின் சம்பள விவரங்கள் மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றும் ஊழியர்களுடன் தொடர்புடைய பரஸ்பர உடன்படிக்கைகள் பற்றிய தகவல்கள் போன்றன அடங்கியிருந்தன.[31]

எனவே, இந்த கடமைப்பொறுப்பினூடாக அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மைக்கு பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது என TISL உறுதி செய்திருந்தது. முன்பு அரசியல் உறுதியற்ற தன்மை

காரணமாக தகவல் அறியும் உரிமையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தது, இந்த முறை அரசாங்கம் பெருமளவு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தது என TISL குறிப்பிட்டிருந்தது.[32]

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தகவல் அறியும் உரிமை சட்டத்தை வினைத்திறன் வாய்ந்த வகையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முக்கியமான படிமுறைகளை இந்த கடமைப்பொறுப்பு கொண்டுள்ளதன் காரணமாக, அடுத்த செயற்திட்டத்துக்கும் இந்த கடமைப்பொறுப்பு முன்கொண்டு செல்லப்பட வேண்டுமென IRM ஆய்வாளர் பரிந்துரைக்கின்றார்.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், IRM ஆய்வாளர் இந்த கடமைப்பொறுப்பை உறுதிப்படுத்துவதற்கும், நடைமுறைப்படுத்தலை மேம்படுத்துவதற்கும் சில மேலதிக நடவடிக்கைகளை பரிந்துரைத்திருந்தார். இந்த பரிந்துரைகளில் பின்வருவன அடங்கியிருந்தன:

- RTI தொடர்பில் பொது திறனை மதிப்பீடுவது, நடைமுறைப்படுத்தலில் எழும் சிக்கல்களை சீராக்குவது மற்றும் முறையான மரபுச்சீர் நடவடிக்கையை உறுதி செய்வது தொடர்பில் பொது அதிகார அமைப்புகளுக்கு பயிற்சிகளை முன்னெடுத்தல்;
- அரச மற்றும் அரச துணை அமைப்புகளில் காணப்படும் பிரதான தீர்மானமெடுப்போரை இலக்காகக் கொண்டு விசேடமாக வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை நிகழ்ச்சிகளையும் முன்னெடுத்தல்; மற்றும்
- பொது மக்கள் சார்பாக அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை கொண்டிருக்க வேண்டிய திரட்டிய உரிமையை வழக்காடுவதற்காக, சட்டத்தை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், அரச கட்டமைப்புக்கு அப்பால் RTI நிபுணர் ஒருவரை இனங்கண்டு நியமித்தல்.[33]

மேலதிக தகவல்களுக்கும், முழு பரிந்துரைகளையும் பார்வையிட 2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையை பார்க்கவும்.

[1] In the action plan, milestones pertaining to the right to information and proactive disclosure are listed under a single commitment. In this report, however, the two areas are separated into two different commitments (Commitments 22 and 23).
[2] Sugath Kithsiri (Ministry of Finance and Mass Media), interview by IRM researcher, 20 October 2017; Piyatissa Ranasinghe (RTI Commission), interview by IRM researcher, 19 October 2017; Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 17 October 2017.
[3] Right to Information Act, No. 12 of 2016, http://www.media.gov.lk/images/pdf_word/2016/12-2016_E.pdf.
[4] "Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka (Extraordinary)," No. 2002/42 (20 January 2017) http://www.documents.gov.lk/files/egz/2017/1/2002-42_E.pdf.
[5] "The Right to Information Commission Is Now Operative" (Sri Lanka Press Institute, 23 December 2016) http://www.slpi.lk/the-right-to-information-commission-is-now-operative/.
[6] "Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka (Extraordinary)," No. 2004/66, Regulation 21 (3 February 2017) https://www.rti.gov.lk/images/resources/2004-66_E_feb.pdf.
[7] "Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka (Extraordinary)," No. 2004/66.
[8] Kithsiri, interview. See also Budget Estimates 2018 – Volume I (Ministry of Finance, Fiscal Year 2018) http://bit.ly/2rOgMZZ.
[9] R. Deshapriya, "Right to Information Act and Applicability in Sri Lanka" (Daily News, 26 December 2016) http://dailynews.lk/2016/12/26/law-order/102951; W. Wutthman, "Fighting for Your Rights," (Daily News, 5 September 2017) http://dailynews.lk/2017/09/05/features/127185/fighting-your-rights; "RTI Commission Receives 438 Appeals in 2017" (Daily Mirror, 19 November 2017) http://www.dailymirror.lk/140651/RTI-Commission-receives-appeals-in-.
[10] Piyatissa Ranasinghe (RTI Commission), interview by IRM researcher, 25 September 2018; Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 28 September 2018.
[11] Ranasinghe, interview.
[12] *Id.*
[13] *Id.*
[14] *Id.*
[15] Id.; Gunaratne, interview.
[16] Ranasinghe, interview.
[17] *Id.*
[18] *Id.*
[19] *Id.*
[20] Gunaratne, interview.
[21] RTI Sri Lanka – Video Gallery (Ministry of Finance and Mass Media, 2018) https://bit.ly/2QCeJ34.
[22] Gunaratne, interview.
[23] Ranasinghe, interview; Gunaratne, interview.
[24] "Sri Lanka Jumps to Third Place Globally on the RTI Rating" (Centre for Law and Democracy, 9 February 2017) https://www.law-democracy.org/live/sri-lanka-jumps-to-third-place-globally-on-the-rti-rating/.
[25] Citizens Access to Information in South Asia: Regional Synthesis Report (The Asia Foundation, August 2014) https://asiafoundation.org/resources/pdfs/CitizensAccesstoInformationinSouthAsia.pdf.
[26] Gunaratne, interview.
[27] *Id.*
[28] According to TISL, exceptions to the right to information have variously surrounded discussions on legislation such as the Audit Act, Reparations Bill, and legislation on the Office of Missing Persons.
[29] "Sri Lanka's right to information" (Sunday Observer, 30 September 2018) https://bit.ly/2T7mzHn.
[30] Right to Information Commission of Sri Lanka, Orders and Directives, https://bit.ly/2H9KWgG
[31] "Sri Lanka's right to information" (Sunday Observer).

[32] Gunaratne, interview.

[33] Dr. Gopa Kumar Thampi, interview by IRM researcher, 15 October 2017.

## 23. செயலூக்கத்துடனான வெளிப்படுத்தல் (Proactive Disclosure)

**கடமைப்பொறுப்பு மூலவாசகம்:**

செயலூக்கத்துடனான வெளிப்படுத்தல்

[…]

பிரதான குறிக்கோள்:

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் எடுத்துரைக்கப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களின் செயலூக்கமிக்க வெளிப்படுத்தல்களை உறுதிசெய்தலும், அதனூடாக பொது மக்கள் தகவல் அணுகுவதை மேம்படுத்தலும்.

மைல்கற்கள்:

- 23.1 ஒவ்வொரு அமைச்சும் பொது அதிகாரசபையும் பகிரங்கமாக கிடைக்கப்பெறுவதற்காக வருடாந்த ஆவணப் பதிவேடொன்றினையும் அத்துடன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 8 (2) மற்றும் பிரிவு 10 இன் கீழ் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்படுவதற்கு தேவையான தகவல்களையும் பொதுமக்கள் அணுகக்கூடியதாக செயலூக்கத்துடன் வெளிப்படுத்தி இற்றைப்படுத்தல்.
- 23.2 ஒவ்வொரு அமைச்சும் அதிகாரசபையும் அவற்றின் இணையத்தளங்களில் (மேலே) கூறியதற்கு ஏற்ப தகவல்களை பகிரங்கமாக வெளியிட்டு இற்றைப்படுத்தல்.

**பொறுப்பான நிறுவனம்:** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

**துணை நிறுவனங்கள்:** தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு; ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல்

**ஆரம்ப திகதி:** பெப்ரவரி 2017 **முடிவு திகதி**: ஜுன் 2018

ஆசிரியர் குறிப்பு: வடிவமைப்பு காரணங்களுக்காக கடமைப்பொறுப்பு தொடர்பான உரை சுருக்கப்பட்டுள்ளன. கடமைப்பொறுப்பு பற்றிய முழு உரையை பார்வையிட 2016-2018 இலங்கை தேசிய செயற்திட்டத்தை http://bit.ly/2wv3jXR எனும் இணையத்தளத்தில் பார்க்கவும்.[1]

**கடமைப்பொறுப்பு இலக்கு:**

பொது அதிகாரசபைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம், குறிப்பிட்ட பொது தகவல்களை வெளிப்படுத்தல் மற்றும் பிரசுரித்தல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது.[2] இந்த தரவுகள் மற்றும் கொள்கை ஆவணங்களை உரிய காலத்தில் சரியான முறையில் வெளிப்படுத்துவதனூடாக, பொது மக்களுக்கு கொள்கை மற்றும் தீர்மானமெடுத்தல்களில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதற்கு அவசியமான பிரதான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு வழிகோலும். இவ்வாறு தகவல்களை

சுயமாக வெளிப்படுத்துவதனூடாக, பொது மக்களுக்கு அவற்றை கோரிக்கைகளை சமர்ப்பித்து கோர வேண்டிய தேவையை இல்லாமல் செய்யும்.

**நிலை**

**மத்திய தவணை: மட்டுப்படுத்தப்பட்டளவு**

மத்திய தவணை காலப்பகுதியில் வருடாந்த அடிப்படையில் கையிருப்பிலுள்ள ஆவணங்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தல் மற்றும் மெருகேற்றல் என்பது மட்டுப்படுத்தப்பட்டளவு பூர்த்தியை எய்திருந்தது. (மைல்கல் 23.1).

அரசாங்கத்தினால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டதாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தெரிவித்திருந்ததுடன்[3] இதில் செயலூக்க அடிப்படையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்களின் நிரல் குறிப்பிடப்பட்டிருந்தது.[4] இந்த நிரலை மேற்கோள்காட்டி அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன்[5] சகல பொது அதிகார அமைப்புகளையும் செயலூக்க வெளிப்படுத்தல்களை குறிக்கும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஒதுக்கங்களை பின்பற்றுமாறும் கோரியிருந்தது. TISL இன் பிரகாரம், ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் வருடாந்த அறிக்கைகளில் பெருமளவான இந்த தகவல்கள் உள்ளடங்கியிருக்கும் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது.[6]

மேலும், வெகுசன ஊடக அமைச்சின் பிரதிநிதி ஒருவரின் பிரகாரம், ஒரு சில பொது அதிகார அமைப்புகள் மாத்திரமே பிரதான தகவல்களை தமது இணைத்தளங்களில் செயலூக்க அடிப்படையில் வெளிப்படுத்தியிருந்தன (மைல்கல் 23.2).[7] இதை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் மற்றும் TISL ஆகியன உறுதி செய்திருந்தன.[8]

| கடமைப்பொறுப்பு மேலோட்டம் | குறிப்புத்தன்மை | | | | OGP பெறுமதி பொருத்தப்பாடு (எழுதப்பட்டுள்ளவாறு) | | | | தாக்க ஆற்றல் | | | | பூர்த்தி (மத்திய தவணை / தவணை பூர்த்தி) | | | | அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா? | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | குறைவு | நடுத்தரம் | உச்சம் | தகவலுக்கான அணுகல் | சிவில் பங்குபற்றல் | பொது பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் | இல்லை | குறைவு | ஓரளவு | மாற்றியமைப்பு | ஆரம்பிக்கவில்லை | மட்டுப்படுத்தப்பட்டது | பெருமளவு பூர்த்தி | பூர்த்தி | மோசமடைவு | மாற்றமில்லை | எல்லையளவு | பாரியளவு | மிகச் சிறந்தளவு |
| 23. செயற்திறனான வெளிப்படுத்தல்கள் | | | | ✔ | ✔ | | | | | | ✔ | | | ✔ (மத்திய தவணை)<br>✔ (தவணை பூர்த்தி) | | | | ✔ | | | |

**தவணை பூர்த்தி: மட்டுப்படுத்தப்பட்டளவு**

தவணை பூர்த்தியில் இந்த கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டது. தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் பிரகாரம், இந்த கடமைப்பொறுப்பில் பெருமளவு முன்னேற்றம் பதிவாகியிருக்கவில்லை.[9]

மைல்கற்கள் 23.1–23.2: பிரிவுகள் 8, 9 மற்றும் 10 இன் கீழ் விதிமுறைகள் பிரசுரிக்கப்பட்ட போதிலும், பொது நிர்வாக அமைப்புகளுக்கு எவ்வாறான தகவல்கள் செயலூக்க அடிப்படையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான பிரிதொரு வழிகாட்டலை வழங்க நேரிட்டதாக தகவல் அறியும் உரிமை ஆணைக்கு குறிப்பிட்டிருந்தது. [10] அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இந்த வழிகாட்டலை வழங்குவதற்கான முனைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும்,[11] சில பொது அதிகார அமைப்புகளே அவ்வாறான தகவல்களை செயலூக்க அடிப்படையில் வெளிப்படுத்தியிருந்தன.[12]

மேலும் இதன் பிரகாரம், சில பொது அதிகார அமைப்புகள் தமது இணையத்தளங்கள் அடங்கலான பகுதிகளில் எழுமாற்றான வகையில் தகவல்களை வெளிப்படுத்தியிருந்ததாக TISL குறிப்பிட்டிருந்தது, ஆனாலும் இது முறையான அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டிருந்தது.[13]

**அரசாங்கத்தை வெளிப்படையானதாக மாற்றியுள்ளதா?**

**தகவல் அணுகல்: மாற்றமில்லை**

தகவல் அணுகலில் இந்த கடமைப்பொறுப்பு எவ்விதமான குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தலையும் ஏற்படுத்தியிருக்கவில்லை, எனவே, அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையில் மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

**அடுத்த கட்ட நடவடிக்கை?**

இந்த அறிக்கை தயாரிக்கப்படும் போது இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2016–2017 IRM மத்திய தவணை அறிக்கையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கட்டாய நிலை ஊடாக இந்த கடமைப்பொறுப்பு பூர்த்திக்கு இயற்கையாக பங்களிப்பு வழங்கும் என IRM ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார். மேலும், ஏனைய வழிமுறைகளை பின்பற்றுவதனூடாகவும் செயலூக்கமான வெளிப்படுத்தல்களை எய்த முடியும் என பரிந்துரைத்திருந்தார். இவற்றில், பிரசுரங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல்கள், பொது அறிவித்தல் பலகைகள் மற்றும் வானொலி, தொலைக்காட்சி அறிவித்தல்கள் போன்றன அடங்கியிருக்கலாம்.

கடமைப்பொறுப்பு 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் பூர்த்தியினூடாகவும், செயலூக்க வெளிப்படுத்தலில் குறிப்பிடத்தக்களவு, மேலதிக பங்களிப்பு வழங்கப்படலாம் என IRM ஆய்வாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

[1] In the action plan, milestones pertaining to the right to information and proactive disclosure are listed under a single commitment. In this report, however, the two areas are separated into two different commitments (see 22 and 23).
[2] Right to Information Act, No. 12 of 2016, § 8(2), http://www.media.gov.lk/images/pdf_word/2016/12-2016_E.pdf.
[3] "Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka (Extraordinary)," No. 2004/66 (3 February 2017) https://www.rti.gov.lk/images/resources/2004-66_E_feb.pdf.
[4] Sugath Kithsiri (Ministry of Finance and Mass Media), interview by IRM researcher, 20 October 2017.
[5] Circular Number (M) 1/2017 (Ministry of Finance and Mass Media, 25 September 2017) https://www.media.gov.lk/images/resolution_regulations/web_eng.JPG.
[6] Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 17 October 2017.
[7] Kithsiri, interview.
[8] Kithsiri, interview; Piyatissa Ranasinghe (RTI Commission), interview by IRM researcher, 25 September 2018; Gunaratne, interview.
[9] Ranasinghe, interview.
[10] *Id.*
[11] Circular Number (M) 1/2017 (Ministry of Finance and Mass Media).
[12] Ranasinghe, interview.
[13] Sankhitha Gunaratne (Transparency International Sri Lanka), interview by IRM researcher, 28 September 2018.

## முறையியலும் மூலங்களும் (Methodological Note)

அரச மற்றும் அரச சார்பற்ற பங்காளர்களுடனான ஆய்வுகள் மற்றும் நேர்காணல்களினூடாக தவணை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. IRM அறிக்கை அரசாங்கத்தின் சுய மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் மற்றும்; முன்னேற்றத்தின் ஏனைய மதிப்பீடுகள் சிவில் சமூகம், தனியார் துறை அல்லது சர்வதேச நிறுவனங்கள் மற்றும் முன்னைய முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றினால் வெளியிடப்படும் இதர முன்னேற்ற மதிப்பீடுகளின் பிரகாரம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் IRM ஆய்வாளர் சுமார் 15 நேர்காணல்களை அரசாங்க மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் முன்னெடுத்து இந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ளார். பெருமளவான நேர்காணல்கள் மின்னஞ்சல் அல்லது தொலைபேசி அழைப்புகளினூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்களுடன் இந்த நேர்காணல்களை முன்னெடுப்பதற்கான ஒழுங்குபடுத்தல்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஜனாதிபதி அலுவலகமும் உதவிகளை வழங்கியிருந்தது. IRM ஆய்வாளர் இந்த நேர்காணல்களை நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் Skype மூலமாகவும் முன்னெடுத்திருந்தார்.

இந்த கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பிரதான பொறுப்பை வகித்த அரசாங்க நிறுவனத்தின் ஆகக்குறைந்தது ஒரு பிரதிநிதியுடனேனும் நேர்காணலை மேற்கொள்வதற்கு IRM ஆய்வாளர் முயற்சித்திருந்தார். தவிர்ப்புகளில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, தேர்தல் ஆணையகம், கல்வி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு போன்றன அடங்கியிருந்தன. IRM ஆய்வாளரினாலும், ஜனாதிபதி அலுவலகத்தினாலும் குறித்த அமைப்புகளின் சம்பந்தப்பட்ட பிரிநிதியுடன் பல்வேறு வழிமுறைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த தவிர்ப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கடமைப்பொறுப்புக்கும், தொடர்புடைய சிவில் சமூக அமைப்பின் ஆகக்குறைந்தது ஒரு பிரதான செயற்பாட்டாளருடன் IRM ஆய்வாளர் நேர்காணலை முன்னெடுத்திருந்தார்.

Open Government Partnership

**அனூக் டி சொய்சா** தொழில்வாண்மை, ஆட்சித் துறை, சர்வதேச அபிவிருத்தி மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் எட்டு வருடங்களுக்கும் மேற்பட்ட சர்வதேச அனுபவத்தைக்கொண்ட ஒரு சுயாதீன ஆய்வாளர் ஆவார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொருளியல் பகுப்பாய்வில் விசேட கற்கையுடன் பொதுக் கொள்கையில் முதுமாணிக் கற்கையை பூர்த்திசெய்துள்ள அவர், வோர்விக் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டதாரி மாணவராக இருக்கும் அதேநேரம் சர்வதேச உறவுகளில் பட்டப்பின்படிப்பு கற்கையையும் மேற்கொண்டு வருகிறார். இலங்கையில் IRM தேசிய ஆய்வாளராக செயற்படுவதற்கு மேலாக, காகில்ஸ் (சிலோன்) பிஎல்சியில் ஆய்வுகள் மற்றும் பங்காண்மைகளுக்கான முகாமையாளராகவும் திகழ்கின்றார்.

திறந்த அரசாங்க பங்குடமை **(OGP)** என்பது தன்னார்வ சர்வதேச முயற்சியாக அமைந்துள்ளதுடன், இதனூடாக நாட்டு குடிமக்கள் மத்தியில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல், மக்களைப் பலப்படுத்துதல், ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், ஆட்சியை பலப்படுத்துவதற்கு புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு அரசாங்கங்களிடமிருந்து உறுதியான அர்ப்பணிப்பை பெற்றுக்கொள்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. "திறந்த அரசாங்க பங்குடமை" **OGP** இன் சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையானது (IRM) பங்குதாரர்கள் மத்தியில் உரையாடலை ஏற்படுத்தி வகைகூறலை மேம்படுத்துவதற்கு அபிவிருத்தி மற்றும் தேசிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை மதிப்பிடுகிறது.